ரா. பி. சேதுப் பிள்ளை வெள்ளி
விழா நினைவுச் சொற்பொழிவுகள்,
1958-60. நாயன்மார் ஆழ்வார்
கள்.
[illegible]

M.22-3:4 7:9
(0) 31P1L0

UNIVERSITY OF MADRAS

# Dr. R. P. Sethu Pillai Silver Jubilee Commemoration Endowment lectures

1968 - 69

## Literary Beauties in the Hymns of Nayanmars Alwars and other saints.

By

**P. ALALASUNDARAM**, M.A
Professor
U. G. C. Project for teaching and Research
Head of the Department of Tamil
Madras Christian College, Tambaram.

1970

© University of Madras 1970

Printed at Rathnam Press, Madras-1.

# பொருளடக்கம்


| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | தேவார திருவாசகங்களில் ஒன்பான் சுவைகள் | ... | 1—48 |
| 2. | வைணவ சமய ஆசாரியர்கள் பாடியருளிய அகத்துறைப் பாடல்கள் | ... | 49—61 |
| 3. | தேவார திருவாசகங்களில் இலக்கியச் சுவை | ... | 62—69 |
| 4. | இராமலிங்க அடிகள் பாடல்களில் இலக்கிய நயம் | ... | 70—79 |

## நாயன்மார் ஆழ்வார்கள் இராமலிங்க அடிகள் முதலியோர் பாடல்களிலுள்ள இலக்கியச்சுவை

# I தேவார திருவாசகங்களில் ஒன்பான் சுவைகள்

அன்புமிக்க தலைவர் அவர்களே ! தாய்மார்களே நண்பர்களே உங்கள் அனைவருக்கும் முதற்கண் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன். யான் டாக்டர். ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களின் மிகப் பழைய மாணவன். எங்கள் ஆசிரியப் பெருந்தகை சொல்லின் செல்வர் டாக்டர். ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களின் நினைவுச் சொற்பொழிவினை ஆற்றுமாறு எனக்கு வாய்ப்பினை அளித்த, தலைவர் டாக்டர். மு. வரதராசனுர் அவர்களுக்கும் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர். A. இலட்சுமணசாமி முதலியார் அவர்களுக்கும் சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவினருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். சைவ சமய குரவர் நால்வர் பாடியருளிய தேவார திருவாசகம், ஆழ்வார்களின் திவ்விய பிரபந்தம், இராமலிங்க அடிகளின் திருவருட்பா முதலிய நூல்களைப் பலர் சமயக்கண் கொண்டு நோக்குவர். சிலர் சாத்திரக் கண் கொண்டு நோக்குவர். ஆனல் இந்த அருட்பாடல்களை இலக்கியக் கண் கொண்டு நோக்குவதே ஈண்டுப் பேசுதற்குரிய பொருளாகும்.

தேவார திருவாசகங்களில் அறியக்கிடக்கும் ஒன்பான் சுவைகளை முதற்கண் ஆராய்வோம். புராணங்கள் இதிகாசங்கள் நாடகங்கள் புதினங்கள் சிறுகதைகள் முதலிய நூல்களில் ஒன்பான் சுவைகளை எளிதில் காணலாம். ஆனல் பக்திப் பாடல்களில் அவைகளைக் காணுதல் அத்துணை எளிதன்று. சைவ சமய குரவர் நால்வரும் விருப்பு வெறுப்பு அற்றவர்கள். அவர்களது பாடல்களில் சுவைநலம் காணுதல் எளிமையான செயலன்று. ஆனல் தொல்காப்பியம் மெய்ப்பாட்டியல் சூத்திரங்களுக்குப் பேராசிரியர் எழுதிய உரையின் துணைகொண்டு சைவ சமய குரவர் நால்வர் திருப்பாடல்களில் காணக்கிடக்கும் சுவைகளை ஆராய முயல்கின்றேன். இது ஆராய்ச்சிக்குரிய சொற்பொழிவாதலின் யான் கொண்ட கருத்தே முடிவானது எனக் கூற இயலாது. தொல்காப்பிய உரையின் துணைகொண்டு அறிஞர் பலர் யான் காட்டிய பாக்களைத் தவிர்த்துப் பல்வேறு பாக்களையும் ஒன்பான் சுவைகளுக்கு உதாரணமாக எடுத்துக்

காட்ட இயலும். பக்திப்பாடல்களை இலக்கியக் கண் கொண்டு காணவேண்டும் என்ற அவா எனக்குப் பலஆண்டுகளுக்கு முன் தோன்றியது. சென்னைச் சைவசித்தாந்த மகா சமாஜத்தினரால் வெளியிடப்படும் "சித்தாந்தம்" என்ற திங்கள் வெளியீட்டில் 1940-ம் ஆண்டு ஜூன் நவம்பர் இதழ்களில் "திருவாசகத்தில் நவரசம்" என்ற ஆராய்ச்சிக் கட்டுரையினை வெளியிட்டேன். அது பல்லோராலும் போற்றப்பட்டது. பின்னர் 1955-ம் ஆண்டில் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற அனைத்து இந்தியக் கீழ்த்திசைக் கலைஞர் மாநாட்டில் (All India Oriental Conference) "சுந்தரரும் ஒன்பான் சுவைகளும்" என்ற பொருள் பற்றிப் பேசினேன். இன்று பேச இருக்கும் சென்னைப் பல்கலைக் கழகச் சொற்பொழிவால் சைவ சமய குரவர் நால்வரது திருப்பாடல்களில் காணக்கிடக்கும் சுவைகளை ஆராய்வதற்கும் அத்திருப்பாடல் களில் காணக்கிடக்கும் ஒப்புமைப் பகுதிகளையும் கருத்துக்களையும் ஆராய்வதற்கும் வாய்ப்பு ஏற்பட்டது. இனி அத்திருப்பாடல்களில் காணலாகும் ஒன்பான் சுவைகளை ஆராய்வோம். ஆசிரியர் தொல் காப்பியனுர் மெய்ப்பாட்டியலில் ஒன்பான் சுவைகளைப் பற்றியும் அவை தோன்றுவதற்குரிய காரணங்களைப் பற்றியும் கூறியுள்ளார். எனவே ஒன்பான் சுவைகளுக்குரிய இலக்கணங்களை முன்னர் நோக்கி அதன்பின் அச்சுவைகளுக்கு எடுத்துக்காட்டாய் அமைந் துள்ள திருப்பாடல்களை ஆராய்வோம்.

நவரசம் என்பது ஒன்பான் சுவைகளைக் குறிக்கும். சுவை என்பதனை மெய்ப்பாடு (Emotion) எனவும் கூறுவர். மெய்ப்பாடு என்பதற்கு வாய்பாடு கூறப்போந்த பேராசிரியர் "மெய்ப்பாடு என்பது பொருட்பாடு; அஃதாவது உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவதோர் ஆற்றுன் வெளிப்படுதல்"[1] எனக் கூறியுள்ளார். இதனை "மெய்க்கட்பட்டு விளங்கிய தோற்றம்"[2] என்று கூறுவர் வீரசோழிய உரைகாரர். உள்ளத்தில் தோன்றிய உணர்வே, புறத்தே வெளிப்படுவதால் சுவைக்கு மெய்ப்பாடு என்ற பெயர் பொருந்துவதாகும். சுவை கொள்ளுவதற்கு முதலில் சுவைப்பொருள் வேண்டும். அதன்பின் தோன்றுவது அதனை நுகர்ந்த பொறியுணர்வு. அப்பொறியுணர்வு மனத்துட்பட்டவழி உள்ளத்தில் குறிப்பு நிகழும். பின்னர், குறிப்புக்கள் பிறந்த உள்ளத்தால் கண்ணீர் அரும்பல் மெய்ம்மயிர்

1. தொல்: மெய்ப்பாட்டியல் -சூ 1. பேராசிரியர் உரை. திரு. கனகசபாபதி பிள்ளை பதிப்பு 1935. பக்கம்.785.

2. வீரசோழியம் - பக்கம்- 102. பவானந்தம் பிள்ளை பதிப்பு (1942)

சிலிர்த்தல் முதலாக உடம்பின்கண் வரும் வேறுபாடாகிய மெய்ப் பாடு தோன்றும். வேம்பு என்னும் பொருளும் நா என்ற பொறி யுணர்வும் சேர்ந்தாலல்லது கைப்புச் சுவை தோன்ருது. ஒருவன் வேங்கையைக் காண்கின்ருன். கண்டவுடன் அஞ்சுகின்ருன். உடனே குறிப்புத் தோன்றுகின்றது. ஈண்டுக் குறிப்பு என்பது வேங்கையை நோக்காது வெறுக்கும் உள்ள நிகழ்ச்சி. பிறகு விறல் அல்லது சத்துவமாகிய மெய்ப்பாடு தோன்றுகின்றது. அவனுக்குத் தோன்றும் மெய்ப்பாடுகள் அஞ்சுதலான் உண்டான தலைநடுக்கம் உடல் நடுக்கம் முதலியன. இவை கண் வாயிலாக அன்றிச் செவி வாயிலாகவும் நிகழப் பெறும். எடுத்துக் காட்டாகப் பித்தன் ஒருவன் செய்கையைக் கண்டபோது நமக்கு நகைச்சுவை தோன்றும். இது வன்றிப் பித்தன் செய்கையை ஒரு புலவன் பாடினுல் அப்பாட்டினைப் படிக்கும் போது நகைச் சுவை தோன்றும். எடுத்துக்காட்டாகப் பித்தன் செய்கையைப் பற்றிக் கூறும் கீழ்வரும் மணிமேகலை வரிகள் நகைச் சுவையினைத் தோற்றுவிக்கும்.

*“கணவிரி மாலை கட்டிய திரணையன்*
*குவிமுகி ழெருக்கிற் கோத்த மாலையன்*
*சிதவற் றுணியொடு சேணேங்கு நெடுஞ்சினைத்*
*ததர்வீழ் பொடித்துக் கட்டிய உடையினன்*
*வெண்பலி சாந்த மெய்ம்முழு துறீஇப்*
*பண்பில் கிளவி பலரொடும் உரைத்தாங்கு*
*அழூஉம் விழூஉம் அரற்றுங் கூஉம்*
*தொழூஉம் எழூஉஞ் சுழலலுஞ் சுழலும்*
*ஓடலு மோடும் ஒருசிறை யொதுங்கி*
*நீடலும் நீடும் நிழலொடு மறலும்*
*மைய லுற்ற மகன்”* [3]

இவ்வாறே பிற சுவைகளும் கண்களுக்கும் செவிகளுக்கும் இன்பம் பயப்பனவாம். நாவான் நுகரப்படும் அறுவகைச் சுவையிலும் செவி யான் நுகரப்படும் ஒன்பான் சுவைகள் என்றும் நம் உள்ளத்தே நின்று நிலவி இன்பம் பயப்பன.

ஆசிரியர் தொல்காப்பியனுர்,

**“நகையே அழுகை இளிவரல் மருட்கை**
**அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று**
**அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப”** [4]

---

3. *மணிமேகலை - மலர்வனம் புக்க காதை: வரிகள்* **104-114.**

4. *தொல்காப்பியம் - மெய்ப்பாட்டியல்-3.*

என்ற சூத்திரத்தில் நகை அழுகை இளிவரல் மருட்கை அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என எண்வகை மெய்ப்பாடுகளைக் குறிப்பிட்டுள்ளார். நாடக நூலார் இவ் வெட்டனுள் சமநிலை என்பதைச் சேர்த்துச் சுவை ஒன்பதாகக் கூறுவர். "நகையென்பது சிரிப்பு ; அது முறுவலித்து நகுதலும், அளவே சிரித்தலும், பெருகச் சிரித்தலுமென மூன்றென்ப. அழுகையென்பது அவலம். இளிவரல் என்பது இழிபு. மருட்கையென்பது வியப்பு ; அற்புதமெனினும் அமையும். அச்சமென்பது பயம். பெருமிதமென்பது வீரம். வெகுளி என்பது கோபம். உவகையென்பது காம முதலிய மகிழ்ச்சி. இவை அவ்வெட்டுமாவன. இவற்றைச் சுவையெனவும் குறிப்பெனவும் வழங்கினும் அமையும்" என்பர் [5] பேராசிரியர்.

பேராசிரியர் இச்சுவைகளின் வைப்பு முறைக்குக் கூறிய காரணங்கள் படித்து இன்புறத்தக்கன. "விளையாட்டுப் பொருட்டாகிய நகையை முன்வைத்தா னென்பது. அதற்கு மறுதலையாகிய அழுகையை அதன்பின் வைத்தான். இளிவரல் அதன்பின் வைத்தான் ; அழுகையும் இளிவரலோடு இயைபுடைமையின். தானிளிவந்து பிறிதோர் பொருளை வியக்குமாதலின் இளிவரலின் பின் வியப்பு வைத்தான். வியப்புப்பற்றியும் அச்சம் பிறத்தலின் அச்சத்தை அதன்பின் வைத்தான். அச்சத்திற்கு மறுதலையாகிய வீரத்தை அதன்பின் வைத்தான். அவ்வீரத்தின் பயனாகிப் பிறர்க்கு வரும் வெகுளியை அதன்பின்னே வைத்தான். வெகுளிக்கு மறுதலை யாகலானும் எல்லாவற்றினும் ஈண்டு ஓதுதற்குச் சிறந்ததாகலானும் முதற்கணோதிய நகைக்கு இயைபுடைத்தாகலானும் உவகையை அவ்வீற்றுக்கண் வைத்தானென்பது" [6] இக்காரணங்கள் அளவை நூல் முறைப்படி அமைந்துள்ளன.

தொல்காப்பியர் இச்சுவைகள் ஒவ்வொன்றும் தோன்றுவதற்கு நந்நான்கு காரணங்கள் காட்டுகின்றார்.

*"எள்ளல் இளமை பேதைமை மடன்என்று*
*உள்ளப் பட்ட நகைநான்கு என்ப"* [7]

என்ற சூத்திரத்தின்படி எள்ளல் இளமை பேதைமை மடமை என்ற நான்குபற்றி நகைச்சுவை தோன்றும் என்பது பெறப்படுகின்றது.

---

5. *தொல் - மெய் - பேராசிரியர் உரை பக்கம்* 790.
6. *தொல் - மெய்* - 3-சூ. *பக்கம்*-790.
7. *தொல் - மெய்* - 4-சூ.

'எள்ளல் என்பது தான் பிறரை எள்ளி நகுதலும் பிறரால் எள்ளப் பட்டவழித் தான் நகுதலும் என இரண்டாம். இளமை என்பது தன் இளமையாற் பிறரை நகுதலும் பிறர் இளமை கண்டு தான் நகுதலும் என இரண்டு. பேதைமை என்பது அறிவின்மை. மடமை என்பது பெரும்பான்மையும் கொளுத்தக் கொண்டு கொண் டது விடாமை. இவையும் தன் பேதைமையான் நகுதலும் பிறன் பேதைமையான் நகுதலும் தன் மடமையான் நகுதலும் பிறன் மடமை யால் நகுதலும் என இரண்டாம்'[8] என்பர் பேராசிரியர். "நகைச் சுவைக்குப் பொருளாவன ஆரியர் கூறும் தமிழும், குருடரும் முடவரும் செல்லும் செலவும், பித்தரும் களியரும் சுற்றத்தாரை இகழ்ந்தாரும், குழவி கூறும் மழலையும் போல்வன" என்பர் பேராசிரி யர். ஆரியர் கூறும் தமிழ், நகைச் சுவைக்கு எடுத்துக் காட்டாகும் என்பர் உரையாசிரியர். ஆனல் தற்காலத்தில் ஆங்கிலோ இந்தியர் பேசும் தமிழும் நகைச்சுவைக்கு எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது. இதற்கு யான் 20 ஆண்டுகளுக்கு முன் நேரில் கண்ட காட்சியினை ஈண்டு நினைப்பூட்ட விழைகின்றேன். ஆங்கிலோ இந்தியன் ஒருவன் கையில் காலணா வைத்திருந்தான். அவன் ஒரு கடைக்காரனிடம் சென்று காலணா கொடுத்து தம்பிடிக்கு அவித்த மொச்சைக் கொட்டை, தம்பிடிக்கு ஆளி வள்ளிக்கிழங்கு, போக மீதி தம்பிடி கையில் கொடு" எனக் கேட்க வேண்டும். அவன் கடைக் காரனைப் பார்த்து "தம்பிடி கேங் தம்பிடி மோச்கொட் தம்பிடி கைலே கொடுமேன்" எனக் கூறுவதில் நகைச்சுவை தோன்றுதல் காண்க. குழந்தைகளின் மழலைச் சொற்களிலும் நாம் நகைச்சுவையினைக் காணலாம். சோறு என்பதற்கு 'சோச்சி' என்றும் பருப்பு என்பதற் குப் 'பப்பு' என்றும், பால் என்பதற்குப் பாச்சி என்றும் குழந்தைகள் கூறுவது நகைச்சுவை யளிப்பதன்றே! இதுவரை ஒன்பான் சுவை களின் இலக்கணங்களைக் கண்டோம். இனி அவைகளுக்கு எடுத்துக் காட்டாக அமைந்துள்ள திருப்பாடல்களை ஆராய்வோம்.

**நகைச்சுவை:**—எள்ளல் இளமை பேதைமை மடமை என்ற நான்குபற்றி நகைச்சுவை தோன்றும் என்பதை முன்னரே குறிப்பிட் டேன். பிறர் பேதைமையால் நகைச்சுவை தோன்றுவதற்கு எடுத்துக் காட்டாய் அமைந்துள்ள திருஞானசம்பந்தர் தேவாரம் ஒன்றைக் காண்போம். திருஞானசம்பந்தர் சில அடியவர்களைப் பார்த்துச் சிவபெருமானுடைய பழைய தொண்டர்களே! புதிய அடிய வனாகிய எனக்கு ஒன்றைத் தெரிவிக்க வேண்டுகின்றேன். காவிரி

---

8. *தொல் - மெய் - 4-சூ. உரை - பக்கம்-791.*

பாயப்பட்ட திருக்கண்டியூர் வீரட்டத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள சிவபெருமான் காதில் குழை அணிந்திருந்ததற்கும் பக்கத்திலுள்ள உமாதேவியார் அஞ்சும்படி யானையை உரித்து அதன் தோலைப் போர்த்துக் கொண்டிருப்பதற்கும் காரணம்யாது ? எனக்குக் கூற வேண்டுகின்றேன் என்ற கருத்தமைந்த கீழ்க்காணும் திருப் பாடல் படித்து இன்புறத்தக்கதாகும்.

*"பழையதொண்டர்கள் பகருமின்பல*
*வாயவேதியன் பான்மையைக்*
*கழையுலாம்புனல் மல்குகாவிரி*
*மன்னுகண்டியூர் வீரட்டன்*
*குழையொர்காதினிற் பெய்துகந்தொரு*
*குன்றின்மங்கை வெருவுறப்*
*புழைநெடுங்கைநன் மாவுரித்தது*
*போர்த்துகந்த பொலிவதே"* [9]

சிவபெருமான் உமையம்மையார் அஞ்சும்படி யானையை உரித்து அதன் தோலைப் போர்த்திருப்பதால் இத்திருப்பாடல் பேதைமை காரணமாகத் தோன்றும் நகைச் சுவைக்கு எடுத்துக்காட்டாய் அமைந்துள்ளது.

இனி, திருநாவுக்கரசர் தேவாரத்தில் நகைச் சுவைக்கு எடுத்துக் காட்டாக அமைந்த திருப்பாடலை நோக்குவோம். எள்ளல் காரணம் பற்றி வந்துள்ள நகைச்சுவைப் பாடல்களைக் காண்போம். திருநாவுக் கரசர் திருநாகைக் காரோணத்திலுள்ள சிவபெருமானை நோக்கி "எங்கள் பெருமானே ஒரு விண்ணப்பம் உள்ளது. அதைக் கேட்கும் படி வேண்டுகின்றேன். தாங்கள் கங்கையைச் சடையுள் மறைத்து வைத்திருக்கின்றீர்கள். அவ்வாறு மறைத்து வைத்துள்ள கள்ளத்தை மெள்ள உமாதேவியார் அறிந்து கொண்டால் பொல்லாங்கு விளையும். எங்கள் நாயகனே நீங்கள் இவ்வாறு செய்வது முறையாகுமா?" எனப் பாடியுள்ளார். தலைவன் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும். தலைவனே தவறு செய்தால் அவனைப் பின்பற்றி வாழ் பவரும் தவறு செய்ய நேருமன்றோ ! அதனால்தான் எங்கள் நாயகனே என்றார் போலும்.

**"வங்க மலிகடல் நாகைக்கா**
**ரோணத்தெம் வானவனே**
**எங்கள் பெருமானோர் விண்ணப்பம்**
**உண்டது கேட்டருளீர்**

---

9. *சம்பந்தர் – 3-ம் திருமுறை : திருக்கண்டியூர்.*

*கங்கை சடையுட் கரந்தாய்அக்*
*கள்ளத்தை மெள்ளஉமை*
*நங்கை அறியிற்பொல் லாதுகண்*
*டாய்எங்கள் நாயகனே"* [10]

இப்பாடல் எள்ளல் காரணம் பற்றித் தோன்றிய நகைச்சுவைக்கு எடுத்துக் காட்டாகும். இறைவன் கங்கையைச் சூடியுள்ளதுபற்றி மற்ருெரு பாடலிலும் திருநாவுக்கரசர் குறிப்பிட்டுள்ளார். திரு வதிகை வீரட்டானேசுவரர் கங்கை நாயகியை முடியில் சூடியுள்ளார். கங்கையின் ஆரவாரத்தால் உமைநங்கை ஊடல் கொண்டாள். அந்த ஊடலைப் போக்குவதற்காகச் சிவபெருமான் சாமவேதம் பாடினுர். பாடிய பாணியால் நடனமும் ஆடினுர். இதுவும் எள்ளல் பற்றி வந்த நகைச் சுவைக்கு எடுத்துக்காட்டாகும். இதனைத் திருவதிகை வீரட்டானம் திருநேரிசையிற் காண்க.

*"சூடினுர் கங்கை யாளைச் சூடிய துழனி கேட்டங்கு*
*ஊடினுள் நங்கை யாளும் ஊடலை யொழிக்க வேண்டிப்*
*பாடினுர் சாம வேதம் பாடிய பாணி யாலே*
*ஆடினுர் கெடில வேலி அதிகைவீ ரட்ட னுரே"* [11]

இறைவன் சாமவேதம் பாடி உமாதேவியின் ஊடலைப் போக்கினுர் என்பது சிந்திக்கத் தக்கது. இசையினுல் எல்லோரையும் வென்று விடலாம். இசையினுல் யானை, பசு, குழந்தை என்ற இவைகளின் வருத்தத்தைப் போக்கி விடலாம். இதனை,

*"சதுர்வேத்தி சிசுர்வேத்தி வேத்தி கானரசம் பணி"*

என்ற வடமொழி சுலோகம் விளக்குதல் காண்க.

பிறர் பேதைமை கண்டு நகுதலுக்கு நாவுக்கரசர் தேவாரத்தில் ஓர் எடுத்துக் காட்டினைக் காண்போம். சிவபெருமான் திருமேனியில் அரைப் பாகம் கொண்டுள்ள உமை அம்மையார் இறைவன் திரு மேனியில் கிடந்த பாம்பைத் தம் அருகில் கண்டு அஞ்சினுள். தலை மேல் கிடந்த பாம்பு உமையம்மையாரை ஒரு மயில் எனக்கருதி ஐயுற்றது. சடையிலுள்ள பிறைச் சந்திரன் பாம்பைக் கண்டு அஞ்சியது. இப்பேதைமையைக் கண்டு இறைவனே சிரித்தார் என்ற கருத்தில் அப்பாடலை அமைத்துள்ளார் அப்பர் அடிகள்.

---

10. *திருவிருத்தம் : திருநாகைக் காரோணம்.*
11. *திருநேரிசை : திருவதிகை வீரட்டானம்.*

"கிடந்தபாம் பருகுகண் டரிவை பேதுறக்
கிடந்தபாம் பவளையோர் மயிலென் றையுறக்
கிடந்தநீர்ச் சடைமிசைப் பிறையும் ஏங்கவே
கிடந்துதான் நகுதலைக் கெடில வாணரே" [12]

இதேகருத்தினைத் திருநாவுக்கரசர் மற்றொரு பாட்டில் நன்கு விளக்கி யுள்ளார். சிவபெருமான் தம் முடியில் பாம்பு கங்கை திங்கள் என்ற மூன்றையும் அணிந்துள்ளார். கங்கை நங்கை பாம்பைக் கண்டு அஞ்சினள். அந்நங்கையை மயில் என்று கருதி அஞ்சியது பாம்பு. அப்பாம்பினைக் கண்டு அது தன்னை விழுங்கி விடுமோ எனக்கருதித் திங்கள் அஞ்சி யானைத்தோல் போர்வைக்குள் ஒளித்துக் கொண்டு சில சமயம் வெளியில் தோன்றுவதும் சிலசமயம் மறைந்திருந்தும் கிடந்தது. அவ்வாறு விட்டு விட்டுத் திங்கள் ஒளி செய்வதைக் கண்டு அதை மின்னல் என்று கருதி அதற்குப் பாம்பு அஞ்சியது. இந்த அழகினைத் திருவாரூர்த் திருநேரிசையிற் காணலாம்.

" நாகத்தை நங்கை அஞ்ச நங்கையை மஞ்ஞை என்று
வேகத்தைத் தவிர நாகம் வேழத்தின் உரிவை போர்த்துப்
பாகத்தின் நிமிர்தல் செய்யாத் திங்களை மின்னென் றஞ்சி
ஆகத்திற் கிடந்த நாகம் அடங்கும் ஆரூர ஞர்க்கே" [13]

இத்திருப்பாடல் பிறர் பேதைமை காரணமாகத் தோன்றிய நகைச் சுவைக்கு எடுத்துக்காட்டாகும்.

இனி, எள்ளல் காரணமாகத் தோன்றும் நகைச் சுவைக்குரிய திருப்பாடல்களைக் காண்போம். திருநாவுக்கரசர் இறைவனை நோக்கி எள்ளி நகையாடுகின்றார். ஒருவனுக்குக் கண் பார்வை ஒரே இடத்தை நோக்கி இருக்குமானால் அவனைக் காண்போர் அவனை 1½ கண்ணன் என்று கூறி நகையாடுவதுண்டு. "1½ கண்ணு டோரியோ செங்கல்பட்டுக்குப் போரியோ" என்று கூறி நகை செய்வது வழக்கம். சிவபெருமான் மூன்று கண்களை உடையவர். ஆனால் அவர் உமா தேவியாருக்குத் தம் திருவுருவத்தில் அரைப்பாகம் கொடுத்து விட்ட தாலும் தம் நெற்றிக் கண்ணில் ½ பாகம் இடது கண்ணும் அம்மை யாருக்குச் சென்றதாலும் இறைவன் 1½ கண்ணோடு காட்சி அளிக் கின்றார் எனக்கூறி நகையாடுகின்றார் நாவுக்கரசர். இதனைத் திருவொற்றியூர் திருவிருத்தத்தில் காண்க.

---

12. 4-ம் திருமுறை : திருவதிகை வீரட்டானம்.

13. திருநேரிசை : திருவாரூர்.

" இன்றரைக் கண்ணுடை யார்எங்கும்
இல்லை இமயமென்னும்
குன்றரைக் கண்ணன் குலமகட்
பாவைக்குக் கூறிட்டநாள்
அன்றரைக் கண்ணுங் கொடுத்துமை
யாளையும் பாகம் வைத்த
ஒன்றரைக் கண்ணன் கண்டீர்
ஒற்றி யூருறை உத்தமனே "[14]

இது எள்ளல் பற்றித் தோன்றிய நகைச்சுவைக்கு எடுத்துக்காட்டாகும்.

சுந்தரர் தேவாரத்தில் காணக்கிடக்கும் நகைச் சுவையை இனிக் காண்போம். இறைவன் திருவருளைப் பெறுவதற்குச் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனச் சாதனங்கள் நான்கு என்பர் பெரியோர். இவற்றை வடமொழியாளர் தாச மார்க்கம், சற்புத்திர மார்க்கம், சக மார்க்கம், சன்மார்க்கம் எனக் கூறுவர். சைவ சமய குரவரான நால்வரும் இந்த நான்கு மார்க்கங்களையும் வற்புறுத்தியுள்ளனர். இது அன்னார் வாழ்க்கை வரலாற்றில் அறியப்படும் உண்மையாகும். எனவே சுந்தரர் சிவபெருமானிடம் வைத்திருந்த தொடர்பு நண்பர் இருவரின் நட்பினைப் போன்றதாகும். ஆகவே ஒத்த நிலையுடைய நண்பர் இருவர் நகைச் சுவை தோன்ற எள்ளி நகையாடல் இயல்பன்றோ? சுந்தரமூர்த்தி நாயனார் இறைவனை நோக்கி நிந்தாஸ் துதியாகச் சில பாடல்கள் பாடியுள்ளார். அப்பாடல்களில் நகைச் சுவை தோன்றக் காணலாம். காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயிலுக்கு மேற்கில் அரை மைல் தூரத்தில் திருஓணகாந்தன்தளி உள்ளது. இங்குள்ள சிவபெருமானைப் பாடிய சுந்தரர் " பெருமானே! கச்சியம் பதியில் திருக்காமக் கோட்டத்தில் காமாட்சி அம்மையார் 32 அறங்கள் செய்துவரத் தாங்கள் ஊரார் இடும் பிச்சைக் கொள்வதன் காரணம் யாது " என்ற கருத்தில்,

" வாரி ருங்குழல் வாள்நெ டுங்கண்
மலைம கள்மது விம்மு கொன்றைத்
தாரி ருந்தட(ம்) மார்பு நீங்காத்
தைய லாள்உல குய்ய வைத்த

---

14. திருவிருத்தம் : திருவொற்றியூர்.

காரி ரும்பொழிற் கச்சி மூதூர்க்
காமக் கோட்டம்உண் டாக நீர்போய்
ஊரி டும்பிச்சை கொள்வ தென்னே
ஓண காந்தன் தளியு ளீரே"[15]

எனப் பாடியுள்ளார். இறைவி அறங்கள் செய்ய இறைவன் இரத்தல் முறையாமோ ? எனக் கூறுவதில் நகைச் சுவை தோன்றுதல் காண்க. இப்பாடல் எள்ளல் காரணமாக வந்த நகைச் சுவைக்கு எடுத்துக் காட்டாகும்.

இனி, பேதைமை காரணமாகத் தோன்றும் நகைச் சுவைக்குச் சுந்தரர் திருப்பாட்டில் சில உதாரணங்களைக் காண்போம். இறைவனைப் பித்தன் என்றே பாடியவர் சுந்தரர் என்பதை நாம் அவரது வரலாற்றால் அறிகின்றோம். சிவபெருமான் திருப்பாற்கடலில் தோன்றிய ஆலகால விஷத்தை உண்டதால், திருச்சோற்றுத்துறைத் திருப்பதிகத்தில் நம்பியாரூரர் சிவபெருமானை நஞ்சு உண்டிட்ட பேதைப் பெருமான் என்றே பாடியுள்ளார். இதனைக் கீழ்க்காணும் திருப்பாடலில் காண்க.

"ஓதக் கடல்நஞ் சினையுண் டிட்ட
பேதைப் பெருமான் பேணும் பதியாம்
சீதப் புனலுண் டெரியைக் காலும்
சூதப் பொழில்சூழ் சோற்றுத் துறையே"[16]

இச் செய்யுள் பேதைமைபற்றி வந்த நகைச்சுவைக்கு எடுத்துக் காட்டாகும். இதையே அப்பர் சுவாமிகளும் குறிப்பிடுகின்றார். இறைவன் நஞ்சுண்டதனைத் திருநாவுக்கரசரும் திருவாலவாய்த் திருநேரிசையில் குறிப்பிட்டுள்ளார். இறைவன் பிரமகபாலத்தைக் கையில் ஏந்தி ஊர்தோறும் பலிகொண்டாரேனும் உணவு உண்டதில்லை. அவர் நஞ்சைத்தான் உண்டார். இது என்னே பேதைமை என இரங்குகின்றார் நாவுக்கரசர். இறைவனே யான் உம்மைப் பலகாலும் நினையாத குற்றமுடையவன். தாங்கள் எனக்குத் திருவருள் பாலிக்கவேண்டும் என்ற கருத்தில் பாடியுள்ளார்.

"வெண்டலை கையில் ஏந்தி
மிகவுமூர் பலிகொண் டென்றும்
உண்டது மில்லை சொல்லில்
உண்டது நஞ்சு தன்னைப்

---

15. 7-ம் திருமுறை : திருஓணகாந்தன்தளி.

16. 7-ம் திருமுறை : திருச்சோற்றுத்துறை.

*பண்டுனே நினைய மாட்டாப்*
*பளகனேன் உளம தார*
*அண்டனே ஆல வாயில்*
*அப்பனே அருள்செ யாயே'' 17*

இதுவும் பேதைமை காரணமாகத் தோன்றும் நகைச்சுவைக்கு உதாரணமாகும்.

இனி, திருவாசகத்தில் வந்துள்ள நகைச்சுவையினைக் காண் போம். எள்ளல் காரணமாகத் தோன்றும் நகைச்சுவைக்கும் திருவாசகத்துள் உதாரணம் உண்டு. நீத்தல் விண்ணப்பத்திலுள்ள ஒரு பாடலில் மாணிக்கவாசகர் இறைவனை நோக்கி, "தலையில் உடுக்கள் போன்ற தலைமாலையும் கையில் நெருப்பையும் உடம்பில் பாம்புகளையும் அணிந்துள்ள வீர ! நீர் என்னைக் கை விடுதலாகாது, அவ்வாறு நீர் என்னைக் கைவிடில் மேலோர் என்னை யாருடைய அடியவன் என்று கேட்கும்போது திருஉத்தரகோசமங்கையில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியுள்ள இறைவனது அடியவர் களுக்கு அடியவன் யான் என்று கூறி அன்னார் உம்மைக் கண்டு சிரிக்கும்படி செய்வேன்'' என்று மணிவாசகனார் இறைவனை நோக்கிக் கூறுகின்றார் என்பது கீழ்க்காணும் செய்யுளால் அறி கின்றோம்.

*"தாரகை போலுந் தலைத்தலை மாலைத் தழலரப்பூண்*
*வீரவென் றன்னை விடுதிகண் டாய்விடி லென்னைமிக்கார்*
*ஆரடியா னென்னி னுத்தரகோச மங்கைக் கரசின்*
*சீரடி யாரடி யானென்று நின்னைச் சிரிப்பிப்பனே'' 18*

பிறர் இறைவனைக் கண்டு சிரிக்கும்படி செய்வதாகக் கூறிய மாணிக்கவாசகர் இந்நிலையிலும் தாம் அவருக்கு நேரே அடிமை என்று கூறாது இறைவனது அடியவர்க்குத் தாம் அடிமை என்று கூறும் திறம் சாலவும் போற்றற்குரியதாகும். மாணிக்கவாசகர் பிறர் சிவனைக் கண்டு சிரிக்கும்படி தாம் செய்வதாகக் கூறியதால் இச் செய்யுளில் வந்த நகைச்சுவை பிறரை எள்ளி நகுதல் என்றதன் பொருளாக வந்த நகையின்பாற்படுமென்க.

திருவாசகத்தில் நீத்தல் விண்ணப்பத்தில் உள்ள ஒரு பாடல் பிறன் பேதைமை பொருளாக நகை தோன்றுவதற்குச் சான்றாக

---

17. *திருநேரிசை : திருவாலவாய்.*

அமைந்துள்ளது. இப்பாடலில் மாணிக்கவாசகர் இறைவனை நோக்கி, "எம் இறைவனே! யான் இவ்வாழ்க்கையினை வெறுக்கின்றேன். உமக்கே தொண்டு செய்துகொண்டு வருகின்றேன்; எனவே தாங்கள் என்னைக் கைவிடுதலாகாது. அப்படிக் கைவிடுவீராயின் நீர் யானைத்தோல் உடுத்துக்கொண்டுள்ள பித்தர் என்றும், புலித் தோலை ஆடையாக உடையவர் என்றும், ஊர்ச் சுடுகாட்டிலுள்ள தீயுடன் பழகும் பித்தர் என்றும் சொல்லிப் பிறர் உம்மைப் பார்த்துச் சிரிக்கும்படி செய்வேன்" எனப் பாடியுள்ளார்.

*"சிரிப்பிப்பன் சீறும் பிழைப்பைத்*
*தொழும்பையு மீசற்கென்று*
*விரிப்பிப்ப னென்னை விடுதிகண்*
*டாய்விடின் வெங்கரியின்*
*உரிப்பிச்சன் றோலுடைப் பிச்சனஞ்*
*சூண்பிச்ச னூர்ச்சுடுகாட்டு*
*எரிப்பிச்ச னென்னையு மாளுடைப்*
*பிச்சனென் றேசுவனே"* [19]

ஈசனைக் கண்டு பிறர் நகைக்கும்படி செய்வதாகக் கூறிய மணி வாசகர் "என்னையும் ஆளுடைப் பிச்சன்" என்று ஆண்டான் அடிமைத்திறத்தினை ஈண்டும் குறிப்பிட்டுள்ள நயம் பாராட்டற்குரிய தன்றோ. ஈசன் யானைத்தோல் உடுத்தல், புலித்தோல் அணிதல், நஞ்சுண்டல், சுடுகாட்டில் பழகுதல் ஆகிய இச்செயற்கரிய செய்கைகளுக்கெல்லாம் வரலாறுகளும் தத்துவங்களும் உள்ளன. ஆனால் காட்சிக்கு மட்டும் ஈசர் பித்தர் போன்று தோன்றுகின்றார் என்று பொருள் கொள்ளுதலே பொருத்தமுடைத்தாகும். இச் செய்யுளில் தோன்றும் நகைச்சுவை பிறர்கட்தோன்றிய பேதைமை யான் வந்த நகையின்பாற்படும்.

**அழுகை :—** இனி, அவலச் சுவையினை ஆராய்வோம்.

**"இளிவே இழவே அசைவே வறுமையென**
**விளிவில் கொள்கை அழுகை நான்கே"** [20]

என்ற தொல்காப்பியச் சூத்திரத்தின்படி இளிவு, இழவு, அசைவு வறுமை ஆகிய இந்நான்கு பொருள்பற்றி அவலச்சுவை தோன்றும்

---

18. *திருவாசகம் : நீத்தல் விண்ணப்பம்*-48.
19. ,, ,, 49.
20. தொல்- மெய். சூ. 5.

என்பது போதரும். "நகையே அழுகை" என்ற சூத்திரத்தில் இளிவரல் என்பதற்கு இழிபு எனப் பொருள் கூறியுள்ளார் பேரா சிரியர். இந்தப் பொருளால் நமக்கு அச்சொல்லின் பொருள் நன்கு விளங்கவில்லை. வாய்பாடு கூறும்போது அதில் விளக்கம் இருத்தல் வேண்டும் என்பர் அளவை நூலாசிரியர். உதாரணமாக வாய்பாடு Definition என்ற தலைப்பு அளவை நூலில் வந்துள்ளது.

"An Arehdeacon is one who performs the Archdea-conal functions"

"Justice is the way of acting justly" [20-A]

என்ற இரண்டு வாக்கியங்களில் கூறப்பட்ட Archdeacon, Justice என்ற இரண்டு சொற்களுக்கும் வாய்பாடு சரியாக அமைய வில்லை என்பர் Creighton என்ற அளவைநூல் ஆசிரியர். இவ் வாறு பொருள் சொல்வது சுற்றிச்சுற்றி அப்பெயரின் பொருளையே கூறுவதால் இது குறைபாடுடைய விளக்கமாகும். இதனை Creighton என்ற ஆசிரியர் This commits the fallacy of "Circulus in Definiendo" எனக் கூறியுள்ளார். எனவே இளிவரல் என்பதற்கு இழிபு என்று பொருள் கூறுதல் முறை யில்லையே என யான் முதலில் கருதினேன். ஆனால் பேராசிரியர் அழுகையைப் பற்றிக் கூறவந்த இச்சூத்திரத்தில் இளிவு என்பது பிறனால் இகழப்பட்டு எளியனாதல் என விளக்கிக் கூறி யுள்ளார். எடுத்துக் காட்டாக ஒருவன் மிகவும் குள்ளமாக இருக் கின்றான். அவனை எல்லோரும் குள்ளா குள்ளா என்று ஏளனம் செய்கின்றார்கள் என வைத்துக் கொள்வோம். அவனுடைய மன நிலையைத் தான் "இளிவு" பிறரால் இகழப்பட்டு எளியனாதல் எனக் கூறுகின்றார் பேராசிரியர். இழவு என்பது தாய் தந்தை முதலிய சுற்றத் தாரையும் இன்பம் பயக்கும் நுகர்ச்சி முதலியவற்றையும் இழத்தல். அசைவு என்பது பண்டை நிலைமை கெட்டு வேறொரு வாறாகி வருந்துதல். வறுமை என்பது போகந் துய்க்கப் பெறாத பற்றுள்ளம்" [21] என்பர் பேராசிரியர். ஒருவனுக்கு மாதம் 200 ரூபாய் வருவாய் என்று வைத்துக் கொள்வோம். அவன் தனக்கு மாதம் 400 ரூபாய் வருவாய் வரவில்லையே என நினைப்பான். பின்னர் 400 ரூபாய் வருவாய் வந்தாலும் 500 ரூபாய் வரவில்லையே என நினைத்துக் கொண்டே இருப்பானாகில் அதுதான் போகம் துய்க்கப்

---

20-A. An Introductory Text-book of logic, by Creighton.

21. *தொல் — மெய்ப்பாடு உரை : பக்கம்.* 794.

பெருத பற்றுள்ளம் என்பது பொருள். எனவே வறுமை, என்பது மனநிலையைப் பொறுத்தது.

> " My mind to me a kingdom is
> Wherein I find a pleasant Joy "[22]

என்பர் wordsworth என்ற ஆசிரியர்.

> " A Mind not be changed by place or time
> The mind in its own place and in itself
> can make a Heaven of Hell and a Hell of Heaven "[23]

என்பர் milton என்ற மேஞட்டு ஆசிரியர். " போதும் என்ற மனமே பொன்செய்யும் மருந்து " என்பது நம் நாட்டுப் பழமொழி. எனவே வறுமை என்பது மனதைப் பொறுத்ததாகும்.

> *" செல்வம் என்பது சிந்தையின் நிறைவே*
> *அல்கா நல்குரவு அவாவெனப் படுமே "*[24]

என்ற குமரகுருபரரின் திருவாக்கு ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது. பலர் வறுமையிலும் செம்மையாக நின்று நடுநிலை பிறழாது பழி அஞ்சிப் பாத்து ஊண் உண்பதைப் பார்க்கின்றோம். அழுகைச் சுவையில் இன்பம் ஏது எனச் சிலர் ஐயுறலாம். நாம் அரிச்சந்திரன் நாடகத்தைப் பார்ப்பதாக வைத்துக் கொள்வோம். சந்திரமதி தன் மகன் இறந்த போது அழுகின்றாள். அப்பாட்டின் அருமையை உணர்ந்து காலரி துரைமார்கள் ("Once more") " மீண்டும் பாடுக " என்று கேட்பதை நாம் பார்த்திருக்கின்றோம். அவள் மகன் பிரிவால் வருந்தினுலும் அவலச் சுவை மிக்க அவள் பாட்டினைக் கேட்க மக்கள் விழைகின்றார்கள் என்பதை நாம் அறிகின்றோம்.

இனி அழுகைச் சுவைக்குத் திருநாவுக்கரசர் தேவாரத்தில் ஓர் உதாரணத்தைக் காண்போம். அகப்பொருட் துறையில் செவிலி கூற்றுக அமைந்துள்ளது அப்பாடல். இது இழவு காரணமாகத் தோன்றிய அழுகைச் சுவைக்கு எடுத்துக்காட்டாகும். இழவு

---

22. Wordsworth's-sonnet
23. Milton's Paradise lost. Book-I P. 17. Lines 253-255 Verity edition 1934.
24. *சிதம்பர மும்மணிக் கோவை — வரி* : (20-21)

என்பது தாய் தந்தை முதலிய சுற்றத்தையும் இன்பம் பயக்கும் நுகர்ச்சியினை இழத்தல் எனப் பொருள்படும் என்பது முன்னரே குறிக்கப்பட்டது. செவிலி, தலைவியின் துன்பத்தைக் காண்கின்றாள். தலைவியின் உடல் மெலிந்தது. அவள் கைகளிலுள்ள வளையல்கள் கழன்று விழுகின்றன. அவள் கண்ணீர் சொரிகின்றாள் ; " இதற்கு ஒரு காரணம் உண்டு. ஆனால் எனக்குத் திட்டமாகத் தெரியவில்லை. தலைவி திருமருகற் பெருமானை நினைந்து வருந்துகின்றாள் எனக் கருதுகின்றேன் " என்றாள் செவிலி.

*" இன்ன வாறென்ப துண்டறி யேனின்று*
*துன்னு கைவளை சோரக்கண் நீர்மல்கும்*
*மன்னு தென்மரு கற்பெரு மான்திறம்*
*உன்னி யொண்கொடி யுள்ளம் உருகுமே "* [25]

இத் திருப்பாடலில் இழவு காரணமாகத் தோன்றும் அழுகைச் சுவையினைக் காணலாம். இழவு என்பதற்கு இன்பம் பயக்கும் நுகர்ச்சியினை இழத்தல் எனப் பொருள் கூறுவர் பேராசிரியர். தலைவி தலைவனது பிரிவால் உடல் மெலிந்து வருந்துவதால் இப்பாடல் இழவு காரணமாகத் தோன்றும் அழுகைச் சுவைக்கு எடுத்துக் காட்டாகும்.

திருஞான சம்பந்தர் தேவாரத்தில் அழுகைச் சுவைக்கு ஓர் எடுத்துக் காட்டினைக் காண்போம். அவர் யாக்கை நிலையாமையை உணர்ந்து தம் மனதை நோக்கி, மனமே! தந்தையார் போயினார் தாயாரும் போயினார், நாமும் ஒரு காலத்தில் இறக்கும்படி வரும். கூற்றுவன் எம்மை எடுத்துச் செல்லக் காத்துக் கொண்டிருக்கின்றான். இந்த நிலையில் இறவாமல் என்றும் வாழ்வதற்கு எந்த நாள் முயல்வாய். உன் நிலைக்கு நான் வருந்துகின்றேன். திருவாரூரைத் தொழுதால் உய்யலாம். நீ மையல் கொண்டு அஞ்சல் வேண்டாம் எனத் தம் மனதுக்குக் கூறுவதாக அமைந்துள்ள கீழ்க் காணும் பாடலைக் காண்போம்.

" தந்தையார் போயினார் தாயரும்
போயினார் தாமும் போவார்
கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார்
பார்க்கின்றார் கொண்டு போவார்

---

25. *திருக்குறுந்தொகை : திருமருகல்.*

எந்தநாள் வாழ்வதற் கேமனம்
வைத்தியா லேழை நெஞ்சே
அந்தணு ரூர்தொழு துய்யலா
மையல்கொண் டஞ்சல் நெஞ்சே'' [26]

இப்பாடல் அழுகைச் சுவைக்கு எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது. இழவு என்பது தாய் தந்தை முதலிய சுற்றத்தாரை இழத்தல் எனப் பொருள் கூறியுள்ளார் பேராசிரியர். இத்திருப்பாடலில் திருஞான சம்பந்தர் ''தந்தையார் போயினுர் தாயாரும் போயினுர் எனக் கூறு வதால் இது இழவு காரணமாகத் தோன்றிய அழுகைச் சுவைக்கு எடுத்துக்காட்டாகும்.

சுந்தரர் தேவாரத்தில் அழுகைச் சுவையினைக் காண்போம். சுந்தரமூர்த்தி சுவாமிகள் சங்கிலியாருக்குத் தாம் முன்பு அளித்த வாக்குறுதி தவறித் திருவொற்றியூரின் எல்லையைக் கடந்த போது அவரது கண்களின் ஒளி மறைந்தது. கண் இழந்த சுவாமிகள் திரு வெண்பாக்கம் இறைவனிடம் முறையிடும் பாக்கள் அவலச் சுவை யோடு அமைந்துள்ளன. சுந்தரர் இறைவனை நோக்கி ''குழை யணிந்த காதுகளை உடையவரே ! என்னிடத்திலுள்ள பிழையினைத் தாங்கள் பொறுத்துக் கொள்வீர்கள் எனக் கருதி யான் பிழை செய்து விட்டேன். அதனைப் பொறுத்துக் கொள்ளாமையால் தங்களுக்கு உண்டாகும் பழியையும் கருதாமல் என் கண் ஒளியை மறைத்து விட்டீர்கள். எனக்குத் தாங்கள் அருள் செய்யாமையால் இறைவனே இப்போது நீங்கள் கோயிலில் இருக்கின்றீரா'' என்று கேட்க, இறைவன் ''கோயிலில் இருக்கின்றோம் போ'' என்று சொன்னுர். இதுவோ அவரது அருள் ! என்ற கருத்தமைந்த பாடல் ஈண்டு படித்தற்குரியதாகும்.

''பிழையுளன பொறுத்திடுவர்
என்றடியேன் பிழைத்தக்கால்
பழியதனைப் பாராதே படலம்
என்கண் மறைப்பித்தாய்
குழைவிரவு வடிகாதா
கோயில்உளா யேஎன்ன
உழையுடையான் உள்ளிருந்து
உளோம்போகீர் என்றுனே'' [27]

---

26. 2-ம் திருமுறை : திருவாரூர்.

27. 7-ம் திருமுறை : திருவெண்பாக்கம்.

இப்பாடல் அசைவுபற்றி வந்த அவலச்சுவைக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. அசைவு என்பது பண்டை நிலைமை கெட்டு வேறொருவராகி வருந்துதல் என்பர் பேராசிரியர். பண்டு கண்களோடு விளங்கிய சுந்தரர் கண் ஒளி மறைந்து பண்டை நிலைமைகெட்டு வேறொருவராகி வருந்துவதால் இப்பாடல் அசைவு பற்றி வந்த அவலச் சுவையாம் என்க.

மாணிக்கவாசகர் திருவாசகத்தில் அவலச் சுவைக்குரிய பாடலைக் காண்போமாக. திருவாசகம் நெஞ்சை உருக்கவல்ல தாகும்.

*"திருவாசகத்திற்கு உருகாதார் ஒருவாசகத்திற்கும் உருகார்"*

என்பது நம் நாட்டுப் பழமொழியாகும்.

*"மனம்கரைத்து மலங்கெடுக்கும்*
*வாசகத்தில் மாண்டோர்கள்*
*கனஞ்சடையென் றுருவேற்றிக்*
*கண்மூடிக் கதறுவாரோ"* [28]

என்றார் மனோன்மணீய ஆசிரியர் சுந்தரம் பிள்ளை. சிவப்பிரகாச சுவாமிகள் நால்வர் நான்மணி மாலையில்,

*"திருவா சகமிங் கொருகா லோதிற்*
*கருங்கன் மனமுங் கரைந்துகக் கண்கள்*
*தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய*
*மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி*
*அன்ப ராகுந ரன்றி*
*மன்பதை யுலகின் மற்றைய ரிலரே"* [29]

எனப் பாடியுள்ளார்.

**"தொழுதகை தலைமீ தேறத் துளும்புகண் ணீருண் மூழ்கி**
**அழுதடி யடைந்த வன்ப னடியவர்க் கடிமை செய்வாம்"** [30]

---

28. மனோன்மணீயம் – பாயிரம்.
29. நால்வர் நான்மணிமாலை : 4.
30. திருவிளையாடல் - பரஞ்சோதி முனிவர்.

எனப் பாராட்டியுள்ளார் பரஞ்சோதி முனிவர். சிவஞான முனிவரும் காஞ்சிப்புராணத்தில், மாணிக்க வாசகரைத் துதிக்கும்போது,

> "*கரைந்து கரைந் திருகண்ணீர் மழைவாரத் துரியநிலை கடந்துபோந்து*"[31]

எனப் பாடியுள்ளார்.

மாணிக்கவாசகர் இறைவனை நோக்கி, இறைவனே ! அன்பர் வேண்டிய எல்லாம் முற்றும் வழங்குகின்ற உன்னை அடைதற்காக உன் திருவருளாகிய அமுதத்தை அள்ளிக் கொண்டு விழுங்குகின் றேன் ; அதுபோது விக்கினேன். எனக்கு நல்லூழ் இன்மையால் தங்களுடைய அருளை முற்றும் அடைய இயலாது போயிற்று. எனவே தேனைப் போன்ற தண்ணீராகிய தங்கள் திருவருளை யான் பருகும்படி கொடுத்து என்னைப் பிழைக்கும்படி செய்ய வேண்டும். யான் அலைந்து வருந்துகின்றேன். உங்கள் திருவடிக்கே அடியேன் அடைக் கலம் என்ற கருத்தமைந்த செய்யுளை நோக்குவோம்.

> "*வழங்குகின் றுய்க்குன் அருளார்*
> *அமுதத்தை வாரிக்கொண்டு*
> *விழுங்குகின்றேன் விக்கினேன் வினையேன்*
> *என்விதி இன்மையால்*
> *தழங்கருந் தேனன்ன தண்ணீர்*
> *பருகத்தந் துய்யக்கொள்ளாய்*
> *அழுங்கு கின்றேன் உடையாய்*
> *அடியேன்உன் அடைக்கலமே*"[32]

இத்திருப்பாடல் இழவு பற்றிய அதாவது இன்ப நுகர்ச்சியை இழத்தல் காரணமாக வந்த அழுகைச் சுவைக்கு எடுத்துக்காட் டாகும். மணிவாசகப் பெருந்தகையார் தாம் இறைவனைப் பிரிந்து வருந்தும் நிலையில் கூறிய திருப்பாடலும் அழுகைச் சுவைக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. "அழிவில்லாதனவும் உவமை யினின்றும் நீங்கியனவுமாகிய ஒளிமிக்க தங்கள் திருவடிக் கமலங் களைக் காட்டி நாயினும் கடைப்பட்ட எனக்கு முத்திநெறி காட்டித் தாயினும் இனிய அருள்சுரந்த என் தலைவனை நன்கு காண இயலாத நான் தீயில் பாய்ந்திலேன் ; மலையினின்று உருண்டு உயிர்விடேன் ;

---

31. *காஞ்சிப் புராணம் : சிவஞான முனிவர்.*

32. *திருவாசகம் : அடைக்கலப்பத்து-10.*

ஆதலால் கடலில் விழுந்து இறப்பேனோ; அதுவும் செய்கிலேன் யான்'' என்ற கருத்தமைந்த கீழ்வரும் திருச்சதகப் பாடல் அவலச் சுவைக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

"ஒய்வி லாதன உவமனில்
இறந்தன ஒண்மலர்த் தாள்தந்து
நாயி லாகிய குலத்தினுங்
கடைப்படும் என்னைநன் னெறிகாட்டித்
தாயி லாகிய இன்னருள்
புரிந்தஎன் தலைவனை நணிகாணேன்
தீயில் வீழ்கிலேன் திண்வரை
உருள்கிலேன் செழுங்கடல் புகுவேனே''[33]

**இளிவரல் :**—இனி, இளிவரல் சுவையைக் காண்போம்.

"மூப்பே பிணியே வருத்தம் மென்மையோடு
யாப்புற வந்த விளிவரல் நான்கே''[34]

என்ற சூத்திரத்தின்படி மூப்பு, பிணி, வருத்தம், மென்மை என்ற நான்கு பொருள்பற்றி இளிவரல் தோன்றும் என்பது பெறப்படு கின்றது. இளிவரல் என்பது பிறரால் இகழப்பட்டு எளியதனுல். கண் பார்வையற்று நடக்க இயலாத மிகவும் முதுமையுடைய ஒருவனைக் காணும்போது நமக்கு வெறுப்புணர்ச்சி உண்டாவது இயல்பு. அவ்வாறே பிணியுடையோனையும், எப்போதும் வருந்திக் கொண்டிருப்பவனையும் மிக மென்மையாக விளங்குபவனையும் காணுந்தோறும் நமக்கு வெறுப்புணர்ச்சி ஏற்படும். திருஞான சம்பந்தர் தேவாரத்தில் மூப்புக்காரணமாகத் தோன்றும் இளிவரல் சுவைக்கு ஓர் உதாரணத்தைக் காண்போம். திருஞானசம்பந்தர் தம் நெஞ்சை நோக்கி "மனமே! நம் உடம்புக்கு முதுமை வந்த போது நமது சொற்களும் தளர்வுறும். நரை திரை முதலியன தோன்றும். நம் மூப்பு நிலையைக் கண்டு நம்மவர்களே எள்ளி நகைப் பார்கள். அவ்வாறு மூப்பு நிலை அடைவதற்கு முன்பே திருக்கோவ லூரில் திருவெண்ணீற்றுடன் திருக்கோயில் கொண்டு எழுந் தருளியுள்ள சிவபெருமானை நினைத்துப் போற்றுவாயாக'' என்ற கருத்தமைந்தது கீழ்வரும் பாடல்.

---

33. *திருச்சதகம்* : 39.

34. தொல் - மெய்ப்பாடு - சூ : 6.

" உரையும்பாட்டுந் தளர்வெய்தி
யுடம்புமூத்த போதின்கண்
நரையுந்திரையுங் கண்டெள்கி
நகுவர்நமர்க ளாதலால்
வரைகொள்பெண்ணை வந்துலா
வயல்கள்சூழ்ந்த கோவலூர்
விரைகொள்சீர்வெண் ணீற்றினன்
வீரட்டானஞ் சேர்துமே " [35]

இத்திருப்பாடலில் நம் மூப்பு நிலையைக் கண்டு நம்மீது வெறுப்புக் கொண்டு நம்மவர் நகையாடுவர் எனக் கூறப்பட்டுள்ளதால் இப் பாடல் மூப்புக் காரணமாகத் தோன்றும் இளிவரல் சுவைக்கு எடுத்துக்காட்டாய் அமைந்துள்ளது. ஆங்கில நாடக ஆசிரியர் சேக்ஷ்பியர் மக்களின் மூப்பு நிலையினைக் குறித்துக் கூறிய செய்திகள் ஈண்டு ஒப்புநோக்கத்தக்கன. சேக்ஷ்பியர் அவர்கள் "As you like it" என்ற நாடகத்தில் மனிதரின் எழுவகைப் பருவங்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அவைகளில் ஆறும் பருவமாகிய மூப்புப்பருவத்தில் மனிதன் கண்ணில் மூக்குக் கண்ணாடியுடனும் கையில் தடியுடனும் காட்சி அளிப்பான் என்றும், அவனது ஏழாம் பருவத்தில் ஐம்புலன்களும் வலிவற்றுக் காணப்படும் எனவும் கூறியுள்ளார்.

The sixth age shifts
into the lean and slipper'd pantaloon
with spectacles on nose and pouch on side.

* * * *

" Last scene of all
That ends this strange eventful history
Is second childishness and more oblivion
Sans teeth sans eyes sans taste, sans everything " [36]

எனவே மூப்புப்பருவம் எல்லோராலும் வெறுக்கத்தக்க பருவம் என்பது பெறப்படுகின்றது.

திருநாவுக்கரசர் தேவாரத்தில் பிணி காரணமாகத் தோன்றும் இளிவரல் சுவை காணக்கிடக்கின்றது. திருநாவுக்கரசர் தமக்குச் சூலைநோய் வந்தபோது திருவதிகை சிவபெருமானை நோக்கி,

---

35. 2-ம் திருமுறை : திருக்கோவலூர் வீரட்டம்.

36. Shakespears's "As you like it" Scene VII—Line-157.

"இறைவனே ! யான் முன்பு சமண சமயம் சென்றிருந்தேன். இப்போது உங்களுக்கு ஆட்பட்டுள்ளேன். சூலை நோயானது என்னைச் சுடுகின்றது. தாங்கள் அந்நோயைப் போக்கி என்னை ஆட்கொள்ள வேண்டுகின்றேன். தன்னை அடைந்த அடியவரின் வினையைத் தீர்ப்பது தங்களைப் போன்ற தலையாயவர்தம் கடமையன்றோ !'' என்ற கருத்தில் அமைந்த அப்பாடலை நோக்குவோம்.

"*முன்னம்அடி யேன்அறி யாமையினுன்*
*முனிந்தென்னை நலிந்து முடக்கியிடப்*
*பின்னைஅடி யேன்உமக் காளும்பட்டேன்*
*சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்*
*தன்னைஅடைந் தார்வினை தீர்ப்பதன்றோ*
*தலையாயவர் தங்கடன் ஆவதுதான்*
*அன்னநடை யார்அதி கைக்கெடில*
*வீரட்டா னத்துறை அம்மானே*''[37]

இத்திருப்பாடலில் திருநாவுக்கரசர் தமக்குண்டான சூலைநோய் என்ற பிணியால் வருந்தி, "சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்'' எனப் பாடியுள்ளார். இப்பாடல் பிணியின் காரணமாகத் தோன்றிய இளிவரல் சுவைக்கு எடுத்துக்காட்டாய் அமைந்துள்ளது காண்க. வருத்தம் காரணமாகவரும் இளிவரல் சுவைக்கும் திருநாவுக்கரசர் தேவாரத்தில் எடுத்துக்காட்டு உண்டு. திருநாவுக்கரசர் திருவதிகை இறைவனை நோக்கி, "இறைவனே ! யான் நீதியோடு வாழ மாட்டேன் யான் தூயவனுமல்லன், யான் ஓதியும் உணரமாட்டேன் யான் உன்னை மனத்தால் நினைப்பதுமில்லை. இத்தகைய நிலையிலுள்ள யான் தங்களுடைய திருவடியைக் காண்பதற்கு வருந்துகின்றேன்'' என்ற கருத்தில் பாடியுள்ள கீழ்க்காணும் பாடலைக் காண்க.

"*நீதியால் வாழ மாட்டேன்*
*நித்தலுந் தூயே னல்லேன்*
*ஓதியும் உணர மாட்டேன்*
*உன்னையுள் வைக்க மாட்டேன்*
*சோதியே சுடரே யுன்றன்*
*தூமலர்ப் பாதங் காண்பான்*
*ஆதியே அலந்து போனேன்*
*அதிகைவீ ரட்ட னீரே*''[38]

---

37. 4-ம் *திருமுறை : திருவதிகை வீரட்டானம்.*

38. *திருநேரிசை : திருவதிகை வீரட்டானம்*

இத்திருப்பாடலில் திருநாவுக்கரசர் இறைவனது திருவடியைக் காண்பதற்காக, "தூமலர்ப் பாதம் காண்பான் ஆதியே அலந்து போனேன்" என வருந்திப் பாடியுள்ளதால் இப்பாடல் வருத்தம் காரணமாகத்தோன்றும் இளிவரல் சுவைக்கு எடுத்துக்காட்டாகும்.

சுந்தரர் சங்கிலியாரை விட்டுத் திருவொற்றியூரைப் பிரிந்ததால் கண் இழந்தபோது திருவொற்றியூர்ப் பெருமானிடம் முறையிடும் பாக்கள் வருத்தம் காரணமாகத் தோன்றும் இளிவரல் சுவைக்கு உதாரணங்களாக விளங்குகின்றன. சுந்தரர் திருவொற்றியூரிலுள்ள இறைவனை நோக்கி, "இறைவனே ! தாங்கள் எனக்கு மகர ராசியில் சேர்ந்த சனியனைப்போல் விளங்குகின்றீர்கள். வீட்டில் யான் ஏதாவது கேட்டால் பெண்கள் அழையேற் போ குருடா எனக் கூறுகின்றார்கள். இதைக் கேட்டு யான் எப்படிப் பொறுத்துக் கொண்டிருப்பேன். முகத்தில் கண்ணிழந்து எங்ஙனம் வாழ்கேன். முக்கண்ணையுடைய பெருமானே ! மறையை ஓதிய தாங்கள், என் கண்ணின் ஒளியை மறைத்தல் முறையாகுமோ ?" எனக் கூறி வருந்திய செய்யுளைக் காண்போம்.

*"மகத்திற் புக்கதோர் சனியெனக் கானாய்*
*மைந்த னேமணி யேமண வாளா*
*அகத்திற் பெண்டுகள் நானொன்று சொன்னால்*
*அழையேற் போகுரு டாஎனத் தரியேன்*
*முகத்திற் கண்ணிழந் தெங்ஙனம் வாழ்கேன்*
*முக்க ணாமுறை யோமறை யோதீ*
*உகைக்குந் தண்கடல் ஓதம்வந் துலவும்*
*ஒற்றி யூரெனும் ஊருறை வானே"* [39]

இச்செய்யுளில் சுந்தரர் இறைவனை 'முக்கணா' எனக் குறிப்பிடுதலில் ஒரு நயம் காண்கின்றோம். மூன்று கண்ணுடைய இறைவனே எனக்கு ஒரு கண்ணாகிலும் தருதலாகாதா என்ற குறிப்பு, தோன்றுதல் காண்க. இப்பாட்டில் "அகத்திற் பெண்டுகள் நானொன்று சொன்னால் அழையேல் போகுருடா எனத் தரியேன்" என்ற வரியில் இளிவரல் சுவையினைக் காண்க.

மாணிக்க வாசகருடைய திருவாசகத்துள் பல பாக்கள் இளிவரல் சுவைக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளன. அவற்றுள் ஒன்றினை ஈண்டுக் குறிப்பிட விழைகின்றேன். கோயில் மூத்த

---

39. 7-ம் *திருமுறை : திருவொற்றியூர்.*

திருப்பதிகத்துள் மாணிக்கவாசகர் இறைவனை நோக்கி, "கனக சபையில் நடம்புரிபவரே ! இவ்வுலகத்தில் என்னை ஒரு பொருளாக மதித்து என் மனதிற் புகுந்து ஆட்கொண்டருளிய பொன் போன்ற வரே ! நீர் எனக்கு அருள் செய்யாவிடில் என்னை நோக்கி அஞ்சாதே என்று கூறுபவர் யார் ? மயக்கம் பொருந்திய மனத்தோடு உம்மைப் பிரிந்து வருந்துகின்ற என்னை வாவென்று அழைத்து உமது அடியார் திருக்கூட்டத்தைக் காட்டாவிடில் யான் இறந்துபோனால் உலகத்தார் நகைக்கமாட்டார்களா ?" என்ற கருத்தமைந்த பாட்டினைக் காண்போம்.

*"அருளா தொழிந்தால் அடியேனை*
*அஞ்சேல் என்பார் ஆர்இங்குப்*
*பொருளா என்னைப் புகுந்தாண்ட*
*பொன்னே பொன்னம் பலக்கூத்தா*
*மருளார் மனத்தோ டுனைப்பிரிந்து*
*வருந்து வேனை வாவென்றுன்*
*தெருளார் கூட்டங் காட்டாயேல்*
*செத்தே போனாற் சிரியாரோ"* [40]

இது வருத்தம் காரணமாகத் தோன்றிய இளிவரல் சுவைக்கு எடுத்துக்காட்டாகும்.

**மருட்கை :—**

*"புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு*
*மதிமை சாலா மருட்கை நான்கே"* [41]

என்ற நூற்பாவின்படி புதுமை பெருமை சிறுமை ஆக்கம் என்ற நான்கு பற்றி மருட்கை தோன்றும் என்பது புலப்படுகின்றது. மருட்கை என்பது வியப்பு. இதுவரை காணாத நிகழ்ச்சியைக் காணும்போது அது நமக்குப் புதுமையாகத் தோன்றும். மிகப் பெரிய பொருளையும் மிகச் சிறிய பொருளையும் பார்க்கும் தோறும் வியப்புத்தோன்றுதல் இயல்பு. ஆக்கம் என்பது ஒரு பொருள் மற்றொன்றாக மாறுதல். மெழுகினால் செய்த ஒரு பதுமையைப் பார்க்கும்போது வியப்புச்சுவை தோன்றுமன்றோ? மெழுகினால் செய்த கமலாப்பழம், தக்காளி முதலியன வியப்பைத் தருகின்றன.

---

40. *திருவாசகம் : கோயில் மூத்த திருப்பதிகம்-8.*

41. *தொல்—மெய்ப்பாடு : சூ. 7.*

மேலே காட்டிய மூன்று சுவைகளைப்போல் மருட்கையும் தன்கட் தோன்றுவனவும் பிறன்கட் தோன்றுவனவும் என எட்டுவகை யாதலும் உண்டு. இனி, புதுமை காரணமாகத் தோன்றும் மருட்கைச் சுவைக்குத் திருஞானசம்பந்தர் தேவாரத்தில் ஒரு உதாரணத்தைக் காண்போம். சிவபெருமானுடைய சிறப்பியல்புகளைக் கண்டு வியக்கின்றார் திருஞானசம்பந்தர். சிவபெருமான் எல்லா உயிர்களுக்கும் ஆதியாகவும் அந்தமாகவும், ஆண் பெண்ணாகவும் சத்துவம் முதலிய முக்குணங்களாகவும், நான்கு வேதங்களாகவும், பஞ்ச பூதங்களாகவும், ஆறு சுவையாகவும், ஏழு இசையாகவும் எட்டுத் திசையாகவும் விளங்குகின்றார். அவர் உயிர்களை விட்டுத் தனியாகவும் இருக்கின்றார். அவைகளோடு கலந்தும் இருக்கின்றார். எனவே இறைவன் உலகமாய் இருக்கின்றார், அவற்றினின்றும் தனியாக இருக்கின்றார், அவற்றோடு உடனாயும் இருக்கின்றார் என்ற கருத்திலுள்ள பாட்டினைப் படிப்போம்.

*''ஈறாய்முத லொன்றாயிரு பெண்ணாண்குண மூன்றாய்*
*மாறாமறை நான்காய்வரு பூதம்மவை ஐந்தாய்*
*ஆறார்சுவை யேழோசையொ டெட்டுத்திசை தானாய்*
*வேறாயுட னானானிடம் வீழிம்மிழ லையே''* [42]

இதே கருத்தினை மற்றோர் பாசுரத்திலும் கூறியுள்ளார் திருஞான சம்பந்தர். இறைவன் ஐம்பூதமாய், ஐம்புலனாய் ஐந்நிலமாய் நாற் கரணமாய் அவற்றின் பயனாய் உருவாய் அருவாய் நின்றார் என்பர்.

*''புவிமுதலைம் பூதமாய்ப் புலனைந்தாய்*
*நிலனைந்தாய்க் கரணநான்காய்*
*அவையவைசேர் பயனுருவா யல்லவுரு*
*வாய்நின்றா னமருங்கோயில்*
*தவமுயல்வோர் மலர்பறிப்பத் தாழ்விடு*
*கொம்புதைப்பக் கொக்கின்காய்கள்*
*கவணெறிகற் போற்சுனையிற் கரைசேரப்*
*புள்ளிரியுங் கழுமலமே''* [43]

இங்கே கூறப்பட்ட இரண்டு திருப்பாடல்களும் புதுமை காரண மாகத் தோன்றிய மருட்கைச் சுவைக்கு உதாரணங்களாக அமைந் துள்ளன.

---

42. *முதல் திருமுறை : திருவீழிமிழலை.*

43. *முதல் திருமுறை : திருக்கழுமலம்.*

திருநாவுக்கரசர் தேவாரத்திலுள்ள மருட்கை சுவையினைக் காண்போம். திருநாவுக்கரசர் தனித்திருத்தாண்டகத்தில் தம்முடைய சிறுமையினையும் சிவபெருமான் பெருமையினையும் குறிப்பிட்டுள்ளார். திருநாவுக்கரசர் இறைவனை நோக்கி "என் தந்தையே! அடியேனை அன்பினால் தொண்டனாக ஏற்றுக்கொண்டாய்: உம் அருள் நோக்கால் தீர்த்தநீர் ஆட்டினாய். நீர் மிகவும் அரியவர். ஆனால் எனக்கு எளியராக விளங்கினாய். என்னை ஆண்டுகொண்டு உம் அடியவனாக ஏற்றுக்கொண்டாய். நான் பித்தன் பேதையேன் பேயேன், நாய் போன்றவன். யான் இழைத்த பிழைகள் அத்தனையும் பொறுத்தாய். ஐயோ தங்கள் கருணையினை யான் எவ்வாறு வியந்து பாராட்டுவது" என்ற பொருள் அமைந்த திருப்பாடலை நோக்குவோம்.

*"அத்தாவுன் அடியேனை அன்பா லார்த்தாய்*
*அருள்நோக்கில் தீர்த்தநீ ராட்டிக் கொண்டாய்*
*எத்தனையும் அரியைநீ எளியை யானாய்*
*எனையாண்டு கொண்டிரங்கி யேன்று கொண்டாய்*
*பித்தனேன் பேதையேன் பேயேன் நாயேன்*
*பிழைத்தனகள் எத்தனையும் பொறுத்தா யன்றே*
*இத்தனையும் எம்பரமோ ஐய ஐயோ*
*எம்பெருமான் திருக்கருணை யிருந்த வாறே"* [44]

திருநாவுக்கரசர் தம்மைப் பித்தன் என்றும் பேயேன் என்றும் கூறி எல்லோர்க்கும் அரிய பொருளாகிய இறைவன் தம்மை ஆட்கொண்டது தமக்கு வியப்பாக உள்ளது எனப் பாடியதால் இப்பாடல் சிறுமை காரணம் பற்றித் தோன்றிய மருட்கைச் சுவைக்கு எடுத்துக் காட்டாகும்.

சுந்தரர் தேவாரத்திலுள்ள மருட்கைச் சுவையினைக் காண்போம். சுந்தரர் திருக்கூடலையாற்றூருக்குச் சென்று அங்குள்ள இறைவனை வணங்காது திருமுதுகுன்றம் நோக்கிச் சென்றார். சிவபெருமான் வேதியர் வடிவங்கொண்டு சுந்தரர் முன்னே வர, சுந்தரர் அவ்வேதியரைத் திருமுதுகுன்றம் போவதற்கு வழி கேட்க, அவர் "இது கூடலையாற்றூருக்குப் போகும் வழி" என்று கூறித் தாமும் உடன் சென்றார். ஊருக்கு அருகாமையில் மறையவராக வந்த சிவபெருமான் திடீரென்று மறைந்துவிட்டார். அது போழ்து நாயனார் உடன் வந்தவரைக் காணாது வியப்புற்று, வழித்துணையாக வந்தவர் சிவபெருமானே என உணர்ந்து,

44. தனித்திருத்தாண்டகம்.

"வடிவுடை மழுவேந்தி மதகரி உரிபோர்த்துப்
பொடியணி திருமேனிப் புரிகுழல் உமையோடும்
கொடியணி நெடுமாடக் கூடலை யாற்றூரில்
அடிகளிவ் வழிபோந்த அதிசயம் அறியேனே"[45]

எனப் பாடினர். இத்திருப்பாட்டில் "அடிகள் போந்த அதிசயம் அறியேனே" என்ற வரியில் புதுமை காரணமாக வந்த மருட்கைச் சுவை தோன்றுதல் காண்க.

மாணிக்கவாசகர் திருவாசகத்தில் காணப்பெறும் மருட்கைச் சுவையினை ஆராய்வோம். மருட்கைச் சுவைக்குத் திருவாசகத்தின் அதிசயப்பத்திலுள்ள ஒரு பாடல் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. இப்பாடலில் மாணிக்கவாசகர் தம்முடைய சிறுமையினையும் இறைவனுடைய பெருங்கருணைத் திறத்தினையும் குறிப்பிட்டுள்ளார். "என்னுடைய அறியாமையினால் இறைவனுடைய திருப்பெயராகிய திரு ஐந்தெழுத்தை நான் நினைந்திலேன். கலைவல்ல ஞானிகளோடு சேர்ந்திலேன். நற்செயல்களை விரும்பாது இம் மண்ணுலகில் பிறந்து இறந்து மண்ணாய்ப் போவதற்கு இயைபுடைய என்னைப் பெருமைமிக்க சிவபெருமான் ஆட்கொண்டருளி தம் அடியார்களோடு சேர்ப்பித்த அதிசயத்தை என்னென்று சொல்வேன்" என்ற கருத்தில், அமைந்துள்ள திருப்பாடலைக் காண்போமாக.

"எண்ணி லேன்திரு நாமஅஞ்
செழுத்தும்என் ஏழைமை யதனாலே
நண்ணி லேன்கலை ஞானிகள்
தம்மொடு நல்வினை நயவாதே
மண்ணி லேபிறந் திறந்துமண்
ணாவதற் கொருப்படு கின்றேனை
அண்ணல் ஆண்டுதன் அடியரிற்
கூட்டிய அதிசயங் கண்டாமே"[46]

இது சிறுமை காரணமாக வந்த மருட்கைச் சுவைக்கு உதாரணமாகும்.

இனி, புதுமை காரணமாகத் தோன்றும் அச்சச்சுவைக்குத் திருவாசகத்திலுள்ள ஒரு உதாரணத்தைக் காண்போம். 'சிவபெருமான்

45. 7-ம் திருமுறை : திருக்கூடலையாற்றூர்.

46. திருவாசகம் : அதிசயப் பத்து-6.

யாவராலும் கேள்வியால அறியப்படாதவன்; யாதொரு அழிவும் இல்லாதவன்; உறவினர் இல்லாதவன்; கருவிகளின் உதவி இல்லாமல் கேட்பனவற்றை யெல்லாங் கேட்டவன்: உலகத்தார் பார்த்திருப்பவும், உலகின் கண்ணே (புகுந்து) நாயேனுக்கு இருக்கை யளித்துச் சிறியனாகிய எனக்கும் காட்டக் கூடாதனவற்றை யெல்லாங் காண்பித்து மேலும் கேட்கக் கூடாதனவற்றையெல்லாம் அறிவுறுத்தி, என்னை மீண்டும் பிறவாதபடி தடுத்து ஆட்கொண் டருளினன் எம்பெருமான். அவன் இயற்றிய புதுமைதான் என்னே!' என வியப்படைகின்ற மணிவாசகனாரின் திருப்பாடலை நோக்குவோம்.

*"கேட்டாரும் அறியாதான் கேடொன் றில்லான்*
*கிளையிலான் கேளாதே யெல்லாங் கேட்டான்*
*நாட்டார்கள் விழித்திருப்ப ஞாலத் துள்ளே*
*நாயினுக்குத் தவிசிட்டு நாயி னேற்கே*
*காட்டா தனவெல்லாங் காட்டிப் பின்னுங்*
*கேளா தனவெல்லாங் கேட்பித் தென்னை*
*மீட்டேயும் பிறவாமற் காத்தாட் கொண்டான்*
*எம்பெருமான் செய்திட்ட விச்சை தானே"* [47]

இத்திருப்பாடல் புதுமைபற்றி வந்த மருட்கைச் சுவைக்கு எடுத்துக்காட்டாகும். 'கேட்டாரும் அறியாதான்' என்ற தொடரில் சிவ பரத்துவம் கூறப்பட்டுள்ளது. இதே கருத்தினை மணிவாசகனார் திருப்பள்ளியெழுச்சியில்,

*"பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்*
*போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்*
*கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்*
*கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரை"* [48]

என்றும், திருச்சதகத்தில்,

*"தன்மை பிறரா லறியாத தலைவா"* [49]

என்றும், திருவம்மானையில்,

47. *திருச்சதகம்*-28.

48. *திருப்பள்ளியெழுச்சி*-5.

49. *திருச்சதகம்*-59.

*"செய்யானை வெண்ணீ றணிந்தானைச்*
*சேர்ந்தறியார்க் கையானை"* [50]

என்றும் பாடியது ஈண்டுச் சிந்திக்கத்தக்கது.

**அச்சம் :—**

*"அணங்கே விலங்கே கள்வர்தம் இறையெனப்*
*பிணங்கல் சாலா அச்சம் நான்கே"* [51]

என்ற தொல்காப்பியச் சூத்திரத்தின்படி அணங்கு விலங்கு கள்வர் இறைவராயினுர் என இந்நான்கு பகுதியான் அச்சச்சுவை தோன்றும். அணங்கு என்பன பேய் பூதம் பாம்பு முதலியன. அரிமா முதலிய அஞ்சத்தக்கன விலங்காம். கள்வர் என்பார் தீத்தொழில் புரிவோர். இறையெனப்படுவோர் தாய் தந்தை அரசன் ஆசிரியன் முதலாயினோர். "பிணங்கல் சாலா அச்சம்" என்றதால் இவை பிறிதுபொருள்பற்றி வரும். புராணம் இதிகாசம் முதலிய நூல்களில் ஒன்பான் சுவைகளுக்கும் உதாரணங்கள் கண்டுபிடித்தல் எளிதாகும். ஆனுல் தேவாரங்கள் திருவாசகம் போன்ற தோத்திரப் பாக்களில் ஒன்பான் சுவைகளுக்கும் உதாரணம் காணுதல் அவ்வளவு எளிதன்று. உரையாசிரியரின் உரையின் துணைகொண்டு தான் நாம் உதாரணங்கள் காணயியலும். சைவ சமயாசாரியர் நால்வரும் யான் என்ற அகப்பற்றினின்றும் எனது என்ற புறப்பற்றினின்றும் நீங்கியவராவர் "நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்" என்றும், "அஞ்சுவ தியாதொன்றுமில்லை அஞ்ச வருவது மில்லை" என்றும், "வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென்" என்றும் பாடிய அப்பர் பெருமான் பாடலில் அச்சச் சுவைக்கு உதாரணம் காட்டுதல் எளிதாமோ? ஆனுல் பேராசிரியரின் உரையின் துணைகொண்டு திருநாவுக்கரசரின் தேவாரத்தில் அச்சச் சுவைக்குரிய எடுத்துக்காட்டினை ஆராய்வோம். "அஞ்சுகின்றேன்" என்ற சொல் அப்பர் தேவாரத்தில் வருகின்றதா என ஆராய்ந்தேன். ஓர் இடத்தில் கிடைத்தது. அதனைக் காண்போம். அணங்கு என்ற சொல்லுக்கு வருத்தம் என்ற பொருள் உண்டு. வருத்தம் காரணமாகத் திருநாவுக்கரசருக்கு அச்சம் தோன்றுகின்றது. அவர் திருக்கொண்டீச்சரத்திலுள்ள இறைவனை நோக்கி, "பெருமானே! கால் கொடுத்தும் எலும்புகளைப் பொருத்தியும் நரம்புகளைக் கட்டியும்

50. *திருவம்மானை*-13.

51. *தொல் : மெய்ப்பாடு.* சூ-8.

தோலை உடுத்தும் இரத்தத்தைச் சேர்த்தும் மயிர்களால் மூடப்பட்ட கூரையாகிய இந்த உடம்பினை என் சுற்றத்தார் எல்லாரும் ஒன்று கூடிக் கதறி அழுது, சுடுகாட்டில் குழிதோண்டிப் புதைத்து ஒளிக்கும் நிலைமைக்கு அஞ்சுகின்றேன் " என்ற பொருள் அமைந்த பாட்டினை நோக்குவோம்.

" கால்கொடுத் தெலும்பு மூட்டிக்
கதிர்நரம் பாக்கை யார்த்துத்
தோலுடுத் துதிரம் அட்டித்
தொகுமயிர் மேய்ந்த கூரை
ஓலெடுத் துழைஞர் கூடி
ஒளிப்பதற் கஞ்சு கின்றேன்
சேலுடைப் பழனஞ் சூழ்ந்த
திருக்கொண்டீச் சரத்து ளானே " [53]

இத்திருப்பாட்டில் திருநாவுக்கரசர் தாம் இறப்பதற்கு அஞ்சுவதாக வும் தமக்கு மீண்டும் பிறவி வாராதிருக்கும்படி இறைவனிடம் வேண்டுகின்றார்.

" யானேதும் பிறப்புஅஞ்சேன்
இறப்பதனுக்கு என்கடவேன் " [53]

என்ற மணிவாசகரின் திருவாக்கு ஈண்டு ஒப்புநோக்கத்தக்கது.

இதே கருத்தினைப் பெரியாழ்வார் திருமொழியிலும் காணலாம். ஆழ்வார் திருமாலை நோக்கி, திருவரங்கத்தில் பள்ளிகொண் டிருக்கும் பெருமானே ! தாம் சோர்வடைந்தபோது தமக்குத் துணை செய்வர் என்ற கருத்தினால் மக்கள் தம்மினும் வலிமை மிக்காரைச் சார்வது இயல்பு. இறைவனே ! ஆதிமூலமே ! என்று கதறிய யானைக்குத் தாங்கள் திருவருள் பாலித்தமையால் யானும் தங்களைத் தற்போது அடைந்தேன். நான் இறக்குந்தறுவாயில் எனக்குப் பல துன்பங்கள் நேரும். அதற்கு நான் அஞ்சுகின்றேன். அப்போது யான் தங்களை நினைக்கமாட்டேன். அப்போதைக்கு இப்போதே நாராயணா என்று உன் திருநாமத்தைச் சொல்லிவிட்டேன். தாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுகின்றேன் என்ற கருத்தமைந்த திருப் பாடலைக் காண்போம்.

---

52. *திருநேரிசை : திருக்கொண்டீச்சரம்.*

53. *திருச்சதகம் : 12.*

" துப்புடையாரை யடைவதெல்லாம்
சோர்விடத்துத் துணையாவரென்றே
ஒப்பிலேனாகிலும் நின்னடைந்தேன்
ஆனைக்குநீயருள் செய்தமையால்
எய்ப்பென்னை வந்துநலியும்
போதங்கேதும் நானுன்னைநினைக்கமாட்டேன்
அப்போதைக்கிப்போதே சொல்லிவைத்தேன்
அரங்கத்தரவணைப் பள்ளியானே "[54]

இப்பாடலில் ஆழ்வார் தாம் இறக்கும் தறுவாயில் பலவித துன்பங்கள் தமக்கு உண்டாகும் எனக் கூறுவதால் ஆழ்வார் இறப்பதற்கு அஞ்சினார் என்பது பெறப்படுகின்றது. அப்படி இறப்பதற்கு அஞ்சியதனாலேதான் திருமாலின் திருநாமத்தை " அப்போதைக்கிப்போதே சொல்லிவைத்தேன் அரங்கத்தரவணைப் பள்ளியானே " எனப் பாடியுள்ளார். இதே கருத்தினை ஆழ்வார் இந்தப் பாசுரத்தில் 7-ம் திருப்பாட்டில் கூறியது ஈண்டுப் படித்து இன்புறத்தக்கது.

" செஞ்சொல் மறைப்பொருள் ஆகிநின்ற
தேவர்கள் நாயகனே எம்மானே
எஞ்சலில் என்னுடை இன்னமுதே
ஏழ்உலகும் உடையாய் என்அப்பா
வஞ்ச உருவின் நமன்தமர்கள்
வலிந்துநலிந்து என்னைப் பற்றும்போது
அஞ்சலைஎன்று என்னைக் காக்கவேண்டும்
அரங்கத்து அரவணைப் பள்ளியானே "[55]

இத்திருப்பாடலும் அணங்கு (வருத்தம்) காரணமாகத் தோன்றும் அச்சச் சுவைக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது காண்க. கள்வர் காரணமாக ஒருவனுக்கு அச்சம் தோன்றுவது இயல்பு. கள்வர் என்ற சொல்லுக்குப் பேராசிரியர் தீத்தொழில் புரிவோர் என உரை எழுதியுள்ளார். திருநாவுக்கரசர் எத்தகைய கள்வருக்கு அஞ்சுகின்றார் என்பதைக் காண்போம். திருநாவுக்கரசர் திருக் கொண்டீச்சரத்திலுள்ள இறைவனை நோக்கி " ஆடும் பாம்பினை அரையில் கட்டிய அண்ணலே ! கொடுந்தொழில் செய்யும் ஐவர் கூட்டமாக வந்து என்னைப் பலவாறாக ஆட்டி வைக்கின்றனர்.

---

54. *பெரியாழ்வார் திருமொழி*-423.

55. *பெரியாழ்வார் திருமொழி*-429.

அவரது கொடிய செயல்களை என்னால் பொறுத்துக்கொள்ள இயல வில்லை. தாங்கள் தாம் காப்பாற்றவேண்டும்'' என வேண்டுகின்றார். ஈண்டு ஐவர் கள்வர் என்பது ஐம்புல ஆசைகளைக் குறிக்கும். இனி அத்திருப்பாடலைக் காண்போம்.

*"கூட்டமாய் ஐவர் வந்து*
*கொடுந்தொழிற் குணத்த ராகி*
*ஆட்டுவார்க் காற்ற கில்லேன்*
*ஆடர வசைத்த கோவே*
*காட்டிடை யரங்க மாக*
*ஆடிய கடவு ளேயோ*
*சேட்டிரும் பழன வேலித்*
*திருக்கொண்டீச் சரத்து ளானே''* [56]

இதே கருத்தினைத் திருநாவுக்கரசர் மற்றொரு பாடலிலும் குறிப் பிட்டுள்ளார். இந்தப் பாடலில் ஐவர் கள்வர் தமக்குத் துன்பம் விளைத்ததாகக் கூறுகின்றார்.

*"புள்ளுவர் ஐவர் கள்வர்*
*புனத்திடைப் புகுந்து நின்று*
*துள்ளுவர் சூறை கொள்வர்*
*தூநெறி விளைய வொட்டார்*
*முள்ளுடை யவர்கள் தம்மை*
*முக்கணான் பாத நீழல்*
*உள்ளிடை மறைந்து நின்றங்*
*குணர்வினால் எய்ய லாமே''* [57]

இத்திருப்பாடலின் பொருளை நோக்குவோமாக. வேடரும் கள்வரு மாகிய ஐவர் திருநாவுக்கரசரின் சிந்தையாகிய புனத்தில் புகுந்தனர்; பின்னர்த் துள்ளினர்; கொள்ளையடித்தனர்; தூநெறியிற் செல்லாமற் படி தடுத்தனர். திருநாவுக்கரசருக்கு அவர்களை எவ்வாறு வெல்வது என்ற எண்ணம் தோன்றியது. அவர்கள் மறைந்து நின்று தம்மீது அம்புகள் எய்ததுபோல் தாமும் இறைவன் திருவடியாகிய நீழலில் மறைந்து நின்று அவரைச் சிவஞானத்தால் எய்து வெல்லலாம் என்ற முடிவினைக் கொண்டதாக அமைந்துள்ளது இச்செய்யுள். கள்வர் ஐவர் என்பது ஐம்புலன்களைக் குறிக்கும். ஆன்மா தான்முன்

56. *திருநேரிசை : திருக்கொண்டீச்சரம்.*

57. *தனித்திருநேரிசை : 5.*

செய்த தவத்தால் தனக்குத் துணை செய்துவரும். இறைவன் குருவாய் வந்து தன்னை நோக்கி, "நீ ஐம்புலனாகிய வேடரோடு கூடி வளர்ந்து நின் இயல்பை அறியாது மறந்தாய்" என்று உபதேசித்தலால் அவ்வேடரை விட்டு வேற்றுமையில்லாத தன்மையால் இறைவனது திருவடியை அடையும் என்ற சிவஞானபோத 8-ம் சூத்திரத்தின் கருத்து ஈண்டுச் சிந்திக்கத்தக்கது.

*"ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்*
*தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு*
*அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே"* [58]

என்பது சிவஞானபோதம். எனவே திருநாவுக்கரசர் ஐம்புல வேடராகிய கள்வர் ஐவர்க்கு அஞ்சினர் என்பது பெறப்படுகின்றது.

திருஞானசம்பந்தரும் ஐம்புல வேடராகிய கள்வர் ஐவருக்கு அஞ்சினர் என்பது அவரது பாடலில் அறியக்கிடக்கின்றது அவர் திருவலிவலத்திலுள்ள எம்பெருமானை நோக்கி "சங்கரனே ! நீர்தாம் எனக்குத் தாயும் தந்தையும். எனது உள்ளம் உம்மிடத்தில் அன்பு செய்ய விழைகின்றது. ஆனால் என் உடம்பிலுள்ள ஐம்புலன்களும் யான் அவ்வாறு செய்ய இயலாமற்படி என்னைத் தடுக்கின்றன. எனவே இதெல்லாம் மாயமே என்று அஞ்சுகின்றேன்" என்ற கருத்தில் அமைந்த கீழ்வரும் பாடல் தீத்தொழில் புரிவோர் காரணமாகத்தோன்றும் அச்சச் சுவைக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

*"தாயுநீயே தந்தைநீயே சங்கரனே யடியேன்*
*ஆயுநின்பா லன்புசெய்வா னாதரிக்கின் றதுள்ளம்*
*ஆயமாய காயந்தன்னு ளைவர்நின்றொன் றலொட்டார்*
*மாயமேயென் றஞ்சுகின்றேன் வலிவல மேயவனே"* [59]

இத்திருப்பாடலில் திருஞானசம்பந்தர் "ஐவர் நின்றொன்றலொட்டார் மாயமேயென்று அஞ்சுகின்றேன்" எனப் பாடியதால் இப்பாடல் (கள்வர்) தீத்தொழில் புரிவோர் காரணமாகத் தோன்றும் அச்சச் சுவைக்கு எடுத்துக்காட்டாய் அமைந்துள்ளது காண்க.

இனி, அச்சச் சுவைக்குச் சுந்தரர் தேவாரத்தினின்றும் உதாரணம் காண்போம். சுந்தரர் திருவாரூரிலுள்ள இறைவனை

---

58. *சிவஞானபோதம்—சூ-8.*

59. *முதல் திருமுறை—திருவலிவலம்.*

நோக்கி "என் தந்தையே! உலகத்தில் சிலர் பொருள் ஒன்றினையே பெரிதாகக் கருதி, பணிவு இன்றிப் பெருமையுடன் வாழ்வதையே விரும்பி, மறுமை நலத்திற்காக ஏழைகளுக்கு ஒன்றும் கொடாது தன்னலத்தோடு வாழ்கின்றவர்களைக் கண்டால் அவர்களோடு சேர்ந்து வாழ்வதற்கு யான் அஞ்சுகின்றேன்" என்ற பொருளில் அமைந்துள்ள கீழ்வரும் பாடல் தீத்தொழில் புரிவோர் காரணமாக அச்சம் தோன்றுவதற்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

*"தாழ்வெனுந் தன்மை விட்டுத்*
*தனத்தையே மனத்தில் வைத்து*
*வாழ்வதே கருதித் தொண்டர்*
*மறுமைக்கொன் றீய கில்லார்*
*ஆழ்குழிப் பட்ட போது*
*அலக்கணில் ஒருவர்க் காவர்*
*யாழ்முயன் றிருக்கும் ஆரூர்*
*அப்பனே அஞ்சி னேனே"* [60]

தாழ்வு என்பது பணிவு. தாழ்வு என்பது சைவத்திற்கு அடிப்படையான கொள்கையாகும்.

*"தாழ்வெனும் தன்மை யோடும்*
*சைவமாம் சமயம் சாரும்*
*ஊழ்பெற லரிது"* [61]

என்பது சிவஞான சித்தியார். பிறர் பாவத்திற்குத் தாம் இரங்குதல் பெரியோரது இயல்பாகும்.

*"தம்மை யிகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற்(று)*
*எம்மை யிகழ்ந்த வினைப்பயத்தா-லும்மை*
*எரிவாய் நிரயத்து வீழ்வர்கொ லென்று*
*பரிவதூஉஞ் சான்றோர் கடன்"* [62]

என்னும் நாலடியார்ச் செய்யுள் ஈண்டு ஒப்புநோக்கத்தக்கது எனவே பிறர் பாபச்செயலுக்குச் சுந்தரர் அஞ்சினர் என்பது போதரும். இவ்வாறே மணிவாசகப் பெருந்தகையாரும் இறைவனை

---

60. 7-ம் *திருமுறை—திருவாரூர்.*

61. *சிவஞான சித்தியார்—சுபக்கம்*—91.

62. *நாலடியார், துறவு*—8.

ஏத்தி அவனது திருவருளைப் பெறாத அன்பற்றவர் நிலைக்கு இரங்குகின்றார் என்பது அவரது பாடலால் அறியலாகும்.

"வன்புலால் வேலும் அஞ்சேன்
வளைக்கையார் கடைக்கண் அஞ்சேன்
என்பெலாம் உருக நோக்கி
அம்பலத் தாடு கின்ற
என்பொலா மணியை ஏத்தி
இனிதருள் பருக மாட்டா
அன்பிலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே"[63]

இதனால் இறைவனைப்போற்றி அவரது திருவருளைப் பெறாதவர் நிலைக்குத் தாம் அஞ்சுகின்றார் என்பது பெறப்படுகின்றது. இப்பாடல் தீத்தொழில் புரிவோர் காரணமாகத் தோன்றும் அச்சச்சுவைக்கு உதாரணமாகும்.

**பெருமிதம் :—**

"கல்வி தறுகண் இசைமை கொடையெனச்
சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே"[64]

பெருமிதம் என்பது வீரம். கல்வி தறுகண் இசைமை கொடை என்னும் நான்கு பற்றிப் பெருமிதச்சுவை தோன்றும். 'கல்வி என்பது தவம் முதலிய விச்சை. தறுகண் என்பது அஞ்சுதக்கன கண்ட இடத்து அஞ்சாமை. இசைமை என்பது இன்பமும் பொருளும் இறப்பப் பயப்பினும் பழியொடு வருவன செய்யாமை. கொடை என்பது உயிரும் உடம்பும் உறுப்பும் முதலாகிய எல்லாப் பொருளும் கொடுத்தல்' என்பர் பேராசிரியர். கல்வி பற்றியும் தறுகண் பற்றியும் தோன்றும் பெருமிதச் சுவைக்குத் திருஞானசம்பந்தரின் பாடலினின்று ஒரு சான்று காண்போம். திருஞானசம்பந்தர் தாம் பாடியுள்ள திருப்பதிகங்களில் கடைசி பாடலில் அப்பாடலைப் படிப்பதாலாகிய பயனை எடுத்துக் கூறுவதுண்டு. திருக்கழுமலம் என்ற ஊரில் பாடிய பதிகத்தில் தமது பாட்டைப் படிப்பவர்கள் இப்பிறவியில் பிணி நீங்கி மனம் ஒருவழிப்பட்டு வாழ்வர் என்றும், அவர் மண்மிசை மீண்டும் பிறவார் என்றும், வானிடை வாழ்வார்

63. *திருவாசகம் : அச்சப்பத்து*—3.

64. *தொல் : மெய்ப்பாடு*—சூ. 9.

என்றும் கூறியதனோடு அமையாது "மற்றிதற்கு ஆணை நமதே" எனக் கூறுவதால் இப்பாடல் கல்வி பற்றியும் தறுகண் பற்றியும் வந்த பெருமிதச் சுவைக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

"கானலங் கழனி யோதம்வந் துலவுங்
கழுமல நகருறை வார்மேல்
ஞானசம் பந்தன் நற்றமிழ் மாலை
நன்மையா லுரை செய்து நவில்வார்
ஊனசம் பந்தத் துறுபிணி நீங்கி
யுள்ளமு மொருவழிக் கொண்டு
வானிடை வாழ்வர் மண்மிசைப் பிறவார்
மற்றிதற் காணையு நமதே" 65

பெருமிதச் சுவைக்கு அப்பர் தேவாரத்தில் பல உதாரணங்கள் காணலாம். திருநாவுக்கரசர் சமண சமயத்திலிருந்து சைவ சமயத்தைச் சேர்ந்த செய்தியைச் சமணர்கள் பல்லவ மன்னனிடம் தெரிவிக்க, அரசன் நாவுக்கரசரை அழைத்துவருமாறு அமைச்சருக்குக் கட்டளையிட்டான். அமைச்சர்களும் திருவதிகை சென்று திருநாவுக்கரசரைக் கண்டு அரசன் ஆணையைத் தெரிவித்தார்கள். அதுகேட்ட திருநாவுக்கரசர் "நாமார்க்கும் குடியல்லோம்" என்னும் திருத்தாண்டகத்தை விடையாக அருளிச்செய்தார்.

"நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே யெந்நாளுந் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே" 66

அதே திருப்பதிகத்தில் 3-ம் செய்யுளில் திருநாவுக்கரசர் தாம் பற்றற்றுத் துறவியானதால் அரசன் ஆணையின்கீழ் நிற்க இயலாதென்றும் கூற வந்தவர்,

---

65. 3-ம் திருமுறை : திருக்கழுமலம்.

66. மறுமாற்றத் திருத்தாண்டகம் : 1.

"பாராண்டு பகடேறி வருவார் சொல்லும்
பணிகேட்கக் கடவோமோ பற்றற் றேமே" [67]

எனப் பாடியது தறுகண்பற்றி வந்த பெருமிதச் சுவைக்கு எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது. மேலும் சமணர் தம்மீது யானையை ஏவிய பொழுதும், நாவுக்கரசர்,

"அஞ்சுவ தியாதொன்று மில்லை
அஞ்ச வருவது மில்லை" [68]

எனப் பாடியதால் தறுகண்பற்றிய அவரது பெருமிதப் பண்பு விளங்குகின்றது.

இனி, சுந்தரர் தேவாரத்திலுள்ள பெருமிதச் சுவையினை ஆராய்வோம். சுந்தரர் திருநாட்டியத்தான்குடி என்னும் திருப்பதிக்குச் சென்று இறைவனைப் பாடும் பாட்டில் தறுகண்பற்றிய பெருமிதச் சுவை காணலாம். சுந்தரர் இறைவனை நோக்கி "திருநாட்டியத் தான்குடி நம்பியே! உமது அணிகலனும் அரைநாணும் பாம்பாதல் கண்டு யான் அஞ்சேன். நீர் சுடுகாட்டில் ஆடுவதைக் கண்டு யான் இகழேன் தாங்கள் என் சிறுமையைக் கண்டு விரும்பாவிடினும் யான் உங்கள் பெருமையை அறிந்து உங்களை விரும்புவேன். இப்பிறவி நீங்கினும் யான் உங்களை மறவேன். தாங்கள் என்னைக் காணாவிடினும் யான் தங்களைக் காண்பேன். தாங்கள் திருவருள் பாலிக்காவிடினும் யான் தங்களைப் பாடுதலை ஒழியேன்" எனப் பாடினார். அப்பாடலை நோக்குவோம்.

"பூண்நா ணாவதோர் அரவங்கண் டஞ்சேன்
புறங்காட் டாடல்கண் டிகழேன்
பேணீ ராகிலும் பெருமையை யுணர்வேன்
பிறவே னாகிலும் மறவேன்
காணீ ராகிலுங் காண்பனென் மனத்தாற்
கருதீ ராகிலுங் கருதி
நானே னும்மடி பாடுத லொழியேன்
நாட்டியத் தான்குடி நம்பீ" [69]

---

67. மறுமாற்றத் திருத்தாண்டகம்—3.

68. 4-ம் திருமுறை : திருவதிகை வீரட்டானம்.

69. 7-ம் திருமுறை : திருநாட்டியத்தான்குடி.

இத்திருப்பாடலில் சுந்தரர் "அரவம் கண்டு அஞ்சேன்" எனக் கூறியதால் இது தறுகண்பற்றி வந்த பெருமிதச் சுவையின்பாற் படும்.

மாணிக்கவாசகப் பெருந்தகையார் பாடியருளிய திருவாசகத்திலும் பெருமிதச் சுவைக்கு எடுத்துக்காட்டு உள்ளது. திருச்சதகச் செய்யுள் ஒன்றில் மாணிக்கவாசகர் இறைவன் தம்மை ஆட்கொண்டதால் "யாம் யார்க்கும் குடியல்லோம் யாதும் அஞ்சோம்" என்று பெருமிதத்துடன் பாடியுள்ளார். அதனைக் காண்போம்.

*"தேவர்கோ அறியாத தேவ தேவன்*
*செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கு மற்றை*
*மூவர்கோ னாய்நின்ற முதல்வன் மூர்த்தி*
*மூதாதை மாதாளும் பாகத் தெந்தை*
*யாவர்கோன் என்னையும்வந் தாண்டு கொண்டான்*
*யாமார்க்குங் குடியல்லோம் யாதும் அஞ்சோம்*
*மேவினோம் அவன்அடியார் அடியா ரோடு*
*மேன்மேலுங் குடைந்தாடி யாடு வோமே"* [70]

மாணிக்கவாசகர் "யாமார்க்கும் குடியல்லோம் யாதும் அஞ்சோம்" எனக் கூறியதால் இப்பாடல் தறுகண் பற்றி வந்த பெருமிதச் சுவைக்கு எடுத்துக்காட்டாகும்.

வெகுளி :—

*"உறுப்பறை குடிகோள் அலைகொலை என்ற*
*வெறுப்ப வந்த வெகுளி நான்கே"* [71]

என்ற தொல்காப்பியச் சூத்திரத்தின்படி உறுப்பறை குடிகோள் அலை கொலை என்னும் நான்கு பற்றி வெகுளிச்சுவை தோன்றும். "உறுப்பறை என்பது கை குறைத்தல் கண் குறைத்தல் முதலாயின. குடிகோள் என்பது தாரமும் சுற்றமும் குடிப்பிறப்பும் முதலாய வற்றுக்குக் கேடு சூழ்தல்; அலை என்பது கோல் கொண்டலைத்தல் முதலாயின. கொலை என்பது அறிவும் புகழும் முதலாயினவற்றைக் கொன்றுரைத்தல்" என்பர் பேராசிரியர். காமம் வெகுளி மயக்கம்

---

70. *திருச்சதகம்*—30.

71. *தொல் : மெய்ப்பாடு*—10.

என்ற மூன்றினையும் வென்ற திருஞானசம்பந்தரின் பாடலில் வெகுளிக்கு உதாரணம் காண்பது மிகவும் அரிதாகும். ஆனால் பேராசிரியரின் உரையின் துணைகொண்டு ஆராய்ந்தால் சில பாடல்கள் உதாரணங்களாகக் கிடைக்கும். கொலை என்பது ஒரு வரைக் கொல்வதை மட்டும் குறிப்பதன்று. பேராசிரியரின் கருத்துப்படி கொலை என்பது ஒருவனுடைய அறிவும் புகழும் முதலிய வற்றைக் கொன்றுரைத்தல் என்பதாகும். எனவே கொலையான் வந்த வெகுளிக்குத் திருஞானசம்பந்தரின் பாடலிலிருந்து உதாரணம் காண்போம். இறைவனை வணங்கும்படி திருஞானசம்பந்தர் தம் நெஞ்சுக்குப் பலமுறை கூறினார். ஆனால் தம் நெஞ்சு அவர் சொற்படி கேட்கவில்லை. அடிக்கடி இறைவனை நினைப்பாய் என அவர் கூறியதால் நெஞ்சு ஒருமுறை கோபமும் கொண்டது. தம் நெஞ்சைப்பார்த்து சம்பந்தர் கூறுவதைக் காண்க. "நெஞ்சமே! நீ என்மேல் கோபித்து என்ன பயன். நான் சொல்வதைக் கேளா மையால் பல இன்னல்களுக்கு ஆளாகின்றாய். இறைவன் இருக்கும் போது, எளிதில் நீங்காத தீவினை நீங்குதற்கு நீ ஓடி அலைவது ஏன்? தீய பொருளும் இறைவனைச் சேர்ந்தால் அது நல்ல பொருளாக மாறிவிடும் என்பதைக் காட்டுவதற்குத்தான் அவர் நெருப்பைக் கையில் ஏந்தியுள்ளார். அவர் மெய்யடியாரையும் என்போன்ற பொய்யடியாரையும் ஆட்கொள்பவர் என்பதைக் காட்டுவதற் காகவே மதியையும் பாம்பையும் ஏந்தியுள்ளார். எனவே நீ அவரைத் துதிப்பாயாக" என்ற பொருளில் அமைந்த திருப்பாடலை நோக்குவோம்.

> "ஊடினாலினி யாவதென்னுயர்
> நெஞ்சமேயுறு வல்வினைக்
> கோடிநீயுழல் கின்றதென்னழ
> லன்றுதன்கையி லேந்தினான்
> பீடுநேர்ந்தது கொள்கையான்பிர
> மாபுரத்துறை வேதியன்
> ஏடுநேர்மதி யோடராவணி
> யெந்தையென்றுநின் றேத்திடே" [72]

இத்திருப்பாடல் கொலையான்வந்த வெகுளிக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது காண்க.

---

72. 3-ம் திருமுறை : திருப்பிரமபுரம்.

திருநாவுக்கரசர் தேவாரத்தில் கொலையான் தோன்றும் வெகுளிச்சுவைக்குப் பல உதாரணங்கள் உள்ளன. கொலை என்பது அறிவும் புகழும் முதலாயினவற்றைக் கொன்றுரைத்தல். சைவ சமய ஒழுக்கத்தோடு வாழாத மக்களைக் கண்டு கோபம் கொள் கின்றார் திருநாவுக்கரசர். அத்திருப்பாடலைக் காண்போம்.

*" திருநாமம் அஞ்செழுத்துஞ் செப்பா ராகில்*
*தீவண்ணர் திறமொருகால் பேசா ராகில்*
*ஒருகாலுந் திருக்கோயில் சூழா ராகில்*
*உண்பதன்முன் மலர்ப்பறித்திட் டுண்ணா ராகில்*
*அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்*
*அளியற்றார் பிறந்தவா றேதோ வென்னில்*
*பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப்*
*பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின் றாரே "* [73]

இத்திருப்பாடலில் திருநாவுக்கரசர் மக்களுள் சிலர் வெண்ணீறு அணியாமல் இறைவனது திருநாமத்தைக் கூறாமல், அவனது திருக் கோயிலுக்கும் போகாமல் மீண்டும் பிறப்பதற்கே இறக்கின்றார்கள் எனக் கூறி, அவர்கள் செய்கைக்கு இரக்கமும் கோபமும் கொள் கின்றார். இதே கருத்துடைய அவரது மற்றொரு பாடலையும் நோக்குவோம்.

*" திருக்கோயி லில்லாத திருவி லூரும்*
*திருவெண்ணீ றணியாத திருவி லூரும்*
*பருக்கோடிப் பத்திமையாற் பாடா வூரும்*
*பாங்கினொடு பலதளிக ளில்லா வூரும்*
*விருப்போடு வெண்சங்கம் ஊதா வூரும்*
*விதானமும் வெண்கொடியு மில்லா வூரும்*
*அருப்போடு மலர்பறித்திட் டுண்ணா வூரும்*
*அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே "* [74]

இத்திருப்பாடலில் திருநாவுக்கரசர் திருக்கோயிலில்லாத ஊரும் வெண்ணீறணிந்து அன்போடு இறைவனைப் பாடாத மக்கள் நிறைந்த ஊரும் ஊரன்று என்றும், அது காடாகும் என்றும் கூறி மக்களின் அறியாமையைக் கண்டு கோபம் கொள்கின்றார். இதுவும் கொலையான் வந்த வெகுளிக்கு எடுத்துக்காட்டாகும். ஒரு நில மானது நாடாகவோ காடாகவோ மேடாகவோ பள்ளமாகவோ

---

73. *தனித்திருத்தாண்டகம்—6.*

74. *தனித்திருத்தாண்டகம்-5.*

இருக்கலாம். அதனுல் அதற்கு இகழ்ச்சியோ புகழோ வராது. புகழ் அங்கு வாழும் மக்களின் குணங்களைப் பொருத்ததாகும். எந்த ஊரில் நல்ல பண்புடையவர் வாழ்கின்ருரோ அந்த ஊர் நல்ல ஊர் என்று பெயர்பெறும். இதனைக் கீழ்வரும் புறநானூற்றுச் செய்யுள் விளக்குதல் காண்க.

*"நாடா கொன்ருே காடா கொன்ருே*
*அவலா கொன்ருே மிசையா கொன்ருே*
*எவ்வழி நல்லவ ராடவர்*
*அவ்வழி நல்லை வாழிய நிலனே"* [75]

சுந்தரர் தேவாரத்திலும் வெகுளிச்சுவைக்கு உதாரணங்கள் உள்ளன. காஞ்சிபுரத்தில் இடக்கண் பெற்ற நம்பியாரூரர் பல பதிகளைத் தரிசித்துப் பின்னர், திருவாரூர்ச் சென்று வன்மீகநாதரைப் பணிந்து வலக்கண் தரும்படி வேண்டினுர். அப்போது இறைவன் மீது அவர் பாடிய பாக்கள் வெகுளிச்சுவையுடன் விளங்குதல் காண்க. அவர் இறைவனை நோக்கி, "திருவாரூரில் வீற்றிருக்கும் பெருமானே! யான் உம்மையன்றிப் பிறரை விரும்பாமல் உமக்கே அடிமை செய்கின்ற ஆளாய் அமைந்துள்ளேன். உம்முடைய அடியவனுகிய யான் என் கண் இழந்ததால் உண்டான துன்பத்தைத் தங்களிடம் எடுத்துக் கூறியபோது தாங்கள் அதைக் கேட்டிருந்தும் கேளாததுபோல் வாளாவிருப்பீர். நீங்களே நன்ருக வாழுங்கள் என்ற கருத்தில் பாடிய திருப்பாடலை நோக்குவோம்.

*"மீளா அடிமை உமக்கே*
*ஆளாய்ப் பிறரை வேண்டாதே*
*மூளாத் தீப்போல் உள்ளே*
*கனன்று முகத்தால் மிகவாடி*
*ஆளா யிருக்கும் அடியார்*
*தங்கள் அல்லல் சொன்னக்கால்*
*வாளாங் கிருப்பீர் திருவா*
*ரூரீர் வாழ்ந்து போதீரே"* [76]

*"எற்றுக் கடிகேள் என்கண்*
*கொண்டீர் நீரே பழிப்பட்டீர்*
*மற்றைக் கண்தான் தாரா*
*தொழிந்தால் வாழ்ந்து போதீரே"* [77]

---

75. புறநானூறு-187.
76. 7-ம் திருமுறை - திருவாரூர்-1.
77. 7-ம் திருமுறை - திருவாரூர்-2.

இத்திருப்பாடல்கள் உறுப்பறை காரணமாக வந்த வெகுளிச் சுவைக்கு எடுத்துக்காட்டாய் அமைந்துள்ளன. உறுப்பறை என்பது கை குறைத்தல் கண் குறைத்தல் என்று பேராசிரியர் கூறியதை முன்பே கண்டோம். தன் கண் ஒளியை மறைத்து தன்னைக் குருடனாக்கியதால் சுந்தரருக்குச் சிவபெருமான்மீது சினம் தோன்றியது இயல்பன்றோ !

இனி, மணிவாசகரின் திருவாசகத்தில் வெகுளிச்சுவைக்கு உதாரணம் காண்போமாக. காமம் வெகுளி மயக்கம் என்ற மூன்றையும் கடந்த அவரிடத்து வெகுளியைக் காண்பது அரிதாகும். கொலை காரணமாக வெகுளி தோன்றும். கொலை என்பது ஒருவனுடைய அறிவும் புகழும் முதலானவற்றைக் கொன்றுரைத்தல் எனப் பொருள்கொண்டனர் பேராசிரியர். இப்பொருள் துணை கொண்டு பார்த்தால் வெகுளிக்கு உதாரணம் திருவாசகத்தில் காணலாம். மணிவாசகனார் இறைவனை நினைக்கும்படி தன் நெஞ்சுக்குக் கூறியும் அது கேட்கவில்லை. மாதர் மையலில் ஈடுபடச் சென்றது. மாணிக்கவாசகர் தம் நெஞ்சை நோக்கி, மனமே! "நீ மாதர் வலையில் கட்டுண்டு கிடக்கின்றாய். நமது உடலெல்லாம் உருகும்படி உள்ளத்தே நிலைபெற்று ஆட்கொண்டருளிய பெருமான் வானில் உள்ளான். அவனைக் காணாமல் நீ இன்னும் உயிரோடு இருக்கின்றாயே! பேரின்ப வாழ்க்கையைப் பெற்று வாழக் கருதாமல் நீ சிற்றின்ப வாழ்க்கையில் அகப்பட்டுத் துயரத்தில் ஆழ்ந்துள்ளாய். அவ்வாறு நீ துயரத்தில் அழுந்தாமல் காக்கின்ற இறைவனை வழிபடாமல் உனக்குக் கேடு சூழ்கின்றாய் பல முறையும் உனக்குச் சொல்கின்றேன். நீ என் அறிவுரையைக் கேளாது துன்பக்கடலில் பலகாலும் வீழ்கின்றாய் என வெகுண்டு கூறும் கருத்தமைந்த பாடல்களைக் காண்போம்.

*"வேனில்வேள் மலர்க்கணைக்கும்*
*வெண்ணகைச் செவ்வாய்க்கரிய*
*பானலார் கண்ணியர்க்கும்*
*பதைத்துருகும் பாழ்நெஞ்சே*
*ஊன்எலாம் நின்றுருகப்*
*புகுந்தாண்டான் இன்றுபோய்*
*வான்உளான் காணாய்நீ*
*மாளா வாழ்கின்றாயே"* [78]

---

78. *திருச்சதகம்*-19,

"வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்டு
ஆழ்கின்றாய் ஆழாமற் காப்பானை ஏத்தாதே
சூழ்கின்றாய் கேடு(உ)னக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீஅவலக் கடலாய வெள்ளத்தே" [79]

இப்பாடல்கள் கொலைபற்றி வந்த வெகுளிச்சுவைக்கு எடுத்துக் காட்டாக அமைந்துள்ளன.

**உவகை :—**

"செல்வம் புலனே புணர்வுவிளை யாட்டுஎன்று
அல்லல் நீத்த உவகை நான்கே" [80]

என்ற தொல்காப்பிய நூற்பாவின்படி, செல்வம் அறிவுடைமை புணர்ச்சி விளையாட்டு என்ற இவைபற்றி உவகைச்சுவை தோன்றும். "ஈண்டுச் செல்வம் என்பது நுகர்ச்சி. புலன் என்பது கல்விப் பயனாகிய அறிவுடைமை; புணர்வு என்பது காமப்புணர்ச்சி முதலாயின. விளையாட்டு என்பது "யாறுங் குளனுங் காவுமாடிப் பதியிகந்து வருதல்" முதலாயின என்பர் பேராசிரியர்.

திருஞானசம்பந்தர் திருப்பாடலினின்று உவகைச்சுவைக்கு எடுத்துக்காட்டினைக் காண்போம். திருஞானசம்பந்தர் திருச்சாய்க் காட்டிலுள்ள இறைவனை வணங்கினால் நாம் மகிழ்ச்சியோடு வாழலாம் என்பர். நாம் இம்மைப்பயன் மறுமைப்பயன் ஆகிய இரண்டினையும் பெறலாம். இம்மையில் மன வருத்தம், பசி, பிணி முதலியன நம்மை அணுகா. நமக்கு மீண்டும் பிறவியில்லை. நாம் இறைவனோடு இரண்டறக்கலந்து பேரின்பம் பெறலாம் என்ற கருத்துடைய பாடலை நோக்குவோம்.

"மண்புகார் வான்புகுவர் மனமிளையார் பசியாலுங்
கண்புகார் பிணியறியார் கற்றாருங் கேட்டாரும்
விண்புகா ரெனவேண்டா வெண்மாட நெடுவீதித்
தண்புகார்ச் சாய்க்காட்டெந் தலைவன்தாள் சார்ந்தாரே" [81]

திருவெண்காடு தேவாரத்திலும் திருஞானசம்பந்தர் இறைவனை வணங்குபவர் பெறும் இன்பத்தைக் குறிப்பிடுகின்றார். "திரு

79. திருச்சதகம்-20.

80. தொல் - மெய்ப்பாடு - சூ-11.

81. 2-ம் திருமுறை - திருச்சாய்க்காடு.

வெண்காடு'' என்ற தலத்தை வழிபட்டால் ஒருவனைச் சார்ந்த பேய்கள் நீக்கமுறும். பிள்ளை வரங்கேட்டலோடு மற்றைய வரங்களையும் மனத்தில் நினைத்தவாறே பெறுவர். இத்தலத்திலுள்ள முக்குளநீரில் நீராடுபவர்க்குத் தீவினை அணுகாது என்ற கருத்துள்ள தேவாரத்தைக் காண்போம்.

*''பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினே டுள்ளநினை*
*வாயினவே வரம்பெறுவர் ஐயுறவேண் டாவொன்றும்*
*வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்*
*தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையே''* [82]

மெய்கண்டதேவர் பிறந்ததற்கு இத்திருப்பாடல் திருவருட் குறிப்பாய் இருந்தது என்பர். மெய்கண்டதேவரின் தந்தையார் அச்சுதகளப்பர் தமக்கு மகட்பேறு இல்லாமையால் திருத்துறையூர் சகல ஆகம பண்டிதரிடம் தமது குறையைக் கூறினர். அப்பண்டிதர் தேவாரத் திருமுறையில் கயிறு சாத்திப் பார்த்தார். ''பேயடையா பிரிவெய்தும்'' என்ற இப்பதிகம் கிடைத்தது. அதன்படியே அச்சுதகளப்பர் திருவெண்காட்டில் முக்குளநீரில் மூழ்கி, இறைவனை வழிபட மெய்கண்ட தேவர் பிறந்தார் என்பர். இத்துறையில் என்னுடைய சிறிய அனுபவம் ஒன்றும் ஈண்டுக் குறிப்பிட விழைகின்றேன். யான் பச்சையப்பன் கல்லூரியில் இண்டர்மீடியட் வகுப்புப் படித்துத் தேறிய பிறகு, அதே கல்லூரியில் B. A. Hons. வரலாறு எடுத்துப் படிக்கலாமா அல்லது அண்ணமலைப் பல்கலைக் கழகத்தில் அப்போது (1934-ல்) தொடங்கப்பட்ட B. A. Hons. தமிழ்ப் பிரிவில் படிக்கலாமா என்பதுபற்றி எனக்கு ஐயப்பாடு தோன்றியது. யான் அண்ணமலைப் பல்கலைக் கழகத்தைச் சேர்வதைப்பற்றி என் தந்தையாரிடம் தெரிவித்தேன். அவர் பெரிய புராணத்தில் கயிறு சாத்திப் பார்க்கும்படி சொன்னர். அவ்வாறு பார்த்ததில் திருநாவுக்கரசருக்குச் சிவபெருமான் திருநல்லூரில் திருவடி தீக்ஷை செய்த திருப்பாடல் வந்துற்றது.

*'' நன்மைபெரு கருள்நெறியே*
*வந்தணைந்து நல்லூரில்*
*மன்னுதிருத் தொண்டனர்*
*வணங்கிமகிழ்ந் தெழும்பொழுதில்*

82. 2-ம் *திருமுறை - திருவெண்காடு.*

"உன்னுடைய நினைப்பதனை
முடிக்கின்றோம்" என்றவர்தம்
சென்னிமிசைப் பாதமலர்
சூட்டினான் சிவபெருமான்"[83]

இத்திருப்பாடலில் "உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம்" என்ற வரியானது யான் சிதம்பரம் போகவேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்தியது. கிரேக்கர்களும் இவ்வாறு தங்கள் நூல்களில் கயிறு சாத்திப் பார்க்கும் பழக்கம் கொண்டிருந்தனர் என்பது தெரிகின்றது.

இனி, உவகைச் சுவைபற்றித் திருநாவுக்கரசர் திருப்பாடலைக் காண்போம். திருவலம்புரம் தேவாரத்தில் திருநாவுக்கரசர் தாம் இறைவனைப் பாடியதால் பெற்ற பெரும்பேற்றினை எடுத்துக் கூறியுள்ளார். யான் திருவலம்புரம் என்ற ஊரில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியுள்ள இறைவன் திருவடிகளுக்கு மலர் சாத்தி ஆனஞ்சாகிய பஞ்சகவ்வியம் கொண்டு நீராட்டி வழிபட்டேன். அதனால் நல்வினைப் பயனைப்பெற்று மகிழ்கின்றேன்" எனப் பாடியுள்ளார்.

"தேனுடை மலர்கள் கொண்டு
திருந்தடி பொருந்தச் சாத்தி
ஆனிடை அஞ்சுங் கொண்டு
அன்பினால் அமர ஆட்டி
வானிடை மதியஞ் சூடும்
வலம்புரத் தடிகள் தம்மை
நானடைந் தேத்தப் பெற்று
நல்வினைப் பயனுற் றேனே"[84]

இப்பாடல் செல்வம் காரணமாகத் தோன்றும் உவகைச்சுவைக்கு எடுத்துக்காட்டாய் அமைந்துள்ளது காண்க. செல்வம் என்பது நுகர்ச்சி என்பர் பேராசிரியர்.

இனி, சுந்தரர் தேவாரத்தினைக் காண்போம். சுந்தரர் யானை மீது இவர்ந்து கைலாயத்திற்குச் சென்றபோது பாடிய திருப்பாடல் உவகைச்சுவைக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. சுந்தர

83. *பெரியபுராணம் : திருநாவுக்கரசர்*-195.

84. **திருநேரிசை : திருவலம்புரம்.**

மூர்த்தி சுவாமிகள் சிவபெருமான் அனுப்பிய வெள்ளை யானையின் மீது ஏறிக்கொண்டு திருக்கைலைக்குச் சென்றபோது சிவபெருமான் திருவருளின் சிறப்பினை நினைந்து இன்பமேலீட்டினால் பாடிய பாடலை நோக்குவோம்.

"தானெனை முன்படைத்தா
னதறிந்துதன் பொன்னடிக்கே
நானென பாடலந்தோ
நாயினேனைப் பொருட்படுத்து
வானெனை வந்தெதிர்கொள்ள
மத்தயானை யருள்புரிந்து
ஊனுயிர் வேறுசெய்தான்
நொடித்தான்மலை யுத்தமனே" [85]

இத்திருப்பாடல் செல்வம் காரணமாகத் தோன்றும் உவகைச் சுவைக்கு எடுத்துக்காட்டாகும். செல்வம் என்பதற்கு நுகர்ச்சி எனப் பொருள் காண்பர் பேராசிரியர். சுந்தரர் தாம் பெற்ற இன்பத்தினை எடுத்துக் கூறுவதால் இது உவகைச் சுவைக்கு உதாரணமாகும்.

இனி, திருவாசகத்தைக் காண்போம். இறைவன் தமக்குத் திருவருள் பாலித்ததால் தாம் தற்போதம் நீங்கிச் சிவமாம் தன்மை எய்தியதற்கு மகிழ்ச்சியடைகின்றார், மாணிக்கவாசகர்.

"அவமாய தேவர் அவகதியில் அழுந்தாமே
பவமாயங் காத்தென்னை ஆண்டுகொண்ட பரஞ்சோதி
நவமாய செஞ்சுடர் நல்குதலும் நாம்ஒழிந்து
சிவமான வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ" [86]

யான் தேவர் கதியினைப் பெறாமல் பிறவியாகிய சூட்சியினின்றும் என்னைக் காப்பாற்றி ஆட்கொண்டு, இறைவன் சிவஞானம் அருளியதால் நான் என்ற தத்போதம் இழந்து சிவமாம் தன்மையைப் பெற்றேன் எனப் பாடி மாணிக்கவாசகர் மகிழ்ந்தமை யால் இத்திருப்பாடல் செல்வம் காரணமாக வந்த உவகைச் சுவைக்கு எடுத்துக்காட்டாகும். தாம் சிவமாம் தன்மை பெற்றதை மணிவாசகனார் திருவாசகத்தின் இறுதியாக உள்ள அச்சோப் பதிகத்திலும் குறிப்பிட்டுள்ளார்.

---

85. 7-ம் திருமுறை - திருநொடித்தான்மலை-1.

86. திருத்தெள்ளேணம்-4.

"முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனைஆண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே"[87]

இத்திருப்பாடலும் உவகைச்சுவைக்கு எடுத்துக்காட்டாகும்.

சமநிலை :—இனி, ஒன்பதாம் சுவையாகிய சமநிலைபற்றி ஆராய்வோம். சமநிலை என்பது சாந்தம். அஃதாவது ஐம்பொறியினையும் அடக்கி, பிறர் வையினும் வாழ்த்திலும் வாளால் வெட்டவரினும் தாளில் வணங்கினும் மனம் மாறாது அவற்றைச் சமமாக ஏற்றுக்கொண்டு நிற்கும் நிலைமையாகும். சமநிலைபற்றிக் கூறவந்த பேராசிரியர் "மற்றிவ் வெட்டனோடுஞ் சமநிலை கூட்டி ஒன்பதென்னுமோ நாடகநூலுட்போல வெனின், அதற்கு ஓர் விகாரமின்மையின் ஈண்டுக் கூறியதிலன் என்பது; அதற்கு விகாரமுண்டெனின் முன்னை யெட்டனுள்ளுஞ் சார்த்திக்கொள்ளப்படும்; அல்லதூஉம் அஃதுலகியல் நீங்கினார் பெற்றியாகலின், ஈண்டு உலக வழக்கினுட் சொல்லியதில னென்பது. ஒழிந்த எட்டும் உலகியலாகலிற் கூறினான்" என்பர் பேராசிரியர்.[88] எனவே சமநிலை என்பது உலகியல் நீங்கியோர் தன்மை என்பதனால் அதற்கெனத் தனியான விகாரம் (மெய்பாடு) இல்லையாதலின் அதைப்பற்றி தொல்காப்பியர் சிறப்பாக சூத்திரம் இயற்றவில்லை என்பது பேராசிரியர் கருத்து.

இன்பத்தையும் துன்பத்தையும் ஒன்றாகப் பாவிக்கும் அடியவர் தாம் இறைவன் திருவடியை எப்போதும் வணங்குவர் என்பது கீழ்வரும் திருஞானசம்பந்தரின் திருப்பாடலால் அறியலாம்.

"வாழினுஞ் சாவினும் வருந்தினும்போய்
வீழினு முனகழல் விடுவேனல்லேன்
தாழிளந் தடம்புனல் தயங்குசென்னிப்
போழிள மதிவைத்த புண்ணியனே
இதுவோஎமை யாளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை யரனே"[89]

இத்திருப்பாடல் சமநிலைக்கு எடுத்துக்காட்டாகும்.

---

87. அச்சோப்பதிகம்-1.

88. தொல் - மெய்ப்பாடு - சூ. 2 உரை.

89. 3-ம் திருமுறை - திருவாவடுதுறை.

திருநாவுக்கரசர் பாண்டியநாட்டு யாத்திரையை முடித்துக் கொண்டு சோழநாடு திரும்பி, திருப்புகலூருக்குச் சென்ருர். அவருக்குப் பொன்ஞசை இல்லை என்பதை உலகத்தார்க்கு அறிவிக்க வேண்டிச் சிவபெருமான் திருநாவுக்கரசர் ஆலயத்தின் முன்பு திருத்தொண்டு செய்யும்பொழுது உழவாரப்படை நுழைந்த இடமெல்லாம் பொன்னும் நவமணிகளும் பொலிந்து இலங்கச் செய்தார். அப்பர் அவைகளைக் கண்டும் அவைகளைப் பருக்கைக் கற்களோடு ஒன்ருக மதித்து வீசிக் குளத்தில் எறிந்துவிட்டார். இதனுல் சிவனடியார் ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கும் இயல்பினர் என்பது பெறப்படுகின்றதன்ருே! திருநாவுக்கரசர் தாம் திருவாரூரிலுள்ள சிவபெருமானின் திருவருளைப் பெற்றுள்ளதால் மண்ஞசை பொன்ஞசை முதலியன தம்மை மயக்கமுடியாது என்பதைத் திருவாரூர்த் திருத்தாண்டகத்தில் நன்கு விளக்கியுள்ளார்.

*"விரைந்தாளும் நல்குரவே செல்வே பொல்லா*
*வெகுட்சியே மகிழ்ச்சியே வெறுப்பே நீங்கள்*
*நிரைந்தோடி மாநிலத்தை யரித்துத் தின்பீர்க்கு*
*இல்லையே நுகர்போகம் யானேல் வானேர்*
*கரைந்தோட வருநஞ்சை யமுது செய்த*
*கற்பகத்தைத் தற்பரத்தைத் திருவா ரூரில்*
*பரஞ்சோதி தனைக்காண்பேன் படேன்நும் பண்பில்*
*பரிந்தோடி யோட்டந்து பகட்டன் மின்னே"* [90]

இப்பாடல் சமநிலைக்கு எடுத்துக்காட்டாய் அமைந்துள்ளது.

சுந்தரர் தேவாரத்திலும் சமநிலைக்கு எடுத்துக்காட்டு உள்ளது. நம்பியாரூரரின் வரலாற்றினைப் படிக்கும்போது அவர் இறைவனை வேண்டியது தவநெறியாகிய சமநிலையே என்பது போதரும். திருவெண்ணெய்நல்லூரில் சிவபெருமானுல் ஆட்கொள்ளப்பட்ட நம்பியாரூரர் திருத்துறையூர் சென்று இறைவனை வேண்டிய பொருள் தவநெறியாகும் என்பது அவரது பாடலால் அறியலாம்.

*"மத்தம் மதயா னையின்வெண் மருப்புந்தி*
*முத்தங் கொணர்ந்தெற்றி யோர்பெண்ணை வடபால்*
*பத்தர் பயின்றேத்திப் பரவுந் துறையூர்*
*அத்தர் உனைவேண்டிக் கொள்வேன் தவநெறியே"* [91]

சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தவச்சிறப்பினைச் சிவபெருமானே பாராட்டியுள்ளார் என்பது பெரியபுராணச் செய்யுளால் அறிகின்ருேம். சிவபெருமான் சங்கிலியாரின் கனவில் தோன்றி,

---

90. *திருத்தாண்டகம் - திருவாரூர்.*

91. *7-ம் திருமுறை - திருத்துறையூர்.*

"சீருந் தவத்துச் சங்கிலிகேள்
சால என்பால் அன்புடையாள்
மேரு வரையின் மேம்பட்ட
தவத்தான் வெண்ணெய் நல்லூரில்
யாரும் அறிய யான்ஆள
உரியான் உன்னை எனைஇரந்தான்
வார்கொள் முலையாய் நீஅவனை
மணத்தால் அணைவாய் மகிழ்ந்தென்றார்" [92]

என்று சுந்தரரின் தவநெறியைப் பாராட்டிக் கூறியது ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது. பரவையார் சங்கிலியார் என இரு பெண்களை மணந்தாரேனும் சுந்தரர் இறைவனிடம் வேண்டிய நெறி சமநிலை யாகிய தவநெறியே என்பது பெறப்படுகின்றது.

திருவாசகத்தைத் திருவாய்மலர்ந்தருளிய மணிவாசகப் பெருந் தகையாரும் வேண்டுவது இறைவன் திருவடியே. "யான் புகழையும் செல்வத்தையும் மண்ணுலக விண்ணுலக வாழ்க்கையையும் பிறப்பு இறப்புக்களையும் விரும்பேன். சிவபெருமானை விரும்பாதவரை யான் தொழமாட்டேன். யான் திருப்பெருந்துறையிலுள்ள சிவபெருமான் திருவடிகளைப் போய்ச்சேர்ந்தேன். அவற்றை என் தலைமேற் கொண்டேன். அவற்றிற்குப் புறமே நான் போகமாட்டேன். இனி மேல் அவை என்னைவிட்டுச் செல்வதற்கும் இசையமாட்டேன், என்ற கருத்தினைக் கொண்ட கீழ்க்காணும் திருவாசகம் சமநிலைக்கு எடுத்துக்காட்டாகும்.

"வேண்டேன்புகழ் வேண்டேன்செல்வம்
வேண்டேன் மண்ணும்விண்ணும்
வேண்டேன்பிறப் பிறப்புச்சிவம்
வேண்டார்தமை நாளுந்
தீண்டேன்சென்று சேர்ந்தேன்மன்னு
திருப்பெருந்துறை இறைதாள்
பூண்டேன்புறம் போகேன்இனிப்
புறம்போகலொட் டேனே" [93]

இதுகாறும் தொல்காப்பியர் கூறிய ஒன்பான் சுவைகளுக்கும் சைவ சமய குரவர் நால்வர் திருப்பாடல்களில் அமைந்துள்ள உதாரணங் களைக் கண்டோம்.

---

92. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்-239.

93. திருவாசகம்—உயிருண்ணிப்பத்து-7.

# II வைணவ சமய ஆசாரியர்கள் பாடியருளிய அகத்துறைப் பாடல்கள்

திருவிருத்தம் :—ஆழ்வார்களும் நாயன்மார்களும் தங்களைத் தலைவியராகவும் இறைவனைத் தலைவனாகவும் அமைத்துப் பாடிய அகப்பொருட்துறைப் பாடல்கள் மிகவும் இலக்கிய நயத்துடன் விளங்குகின்றன. முதலில் நம்மாழ்வார் பாடியுள்ள திருவிருத்தத்திலிருந்து சில பாடல்களைக் காண்போம். நாலாயிரப் பிரபந்தத்தில் நம்மாழ்வார் அருளிச் செய்தனவாக திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி என்ற நான்கு நூல்கள் உள்ளன. திருவிருத்தம் நூறு கட்டளைக்கலித்துறைகளாலானது. இது அகப்பொருட்துறை அமைப்புடையது. இதற்குச் சில அரும் பதவுரைகளும் பெரியவாச்சான் பிள்ளை எழுதிய சிறந்த விளக்க வுரையும் உண்டு. அவ்வுரையின் துணைகொண்டு அப்பாடல்களின் நயத்தினைக் காண்போம். இந்நூலின் 16-ம் செய்யுளை நோக்கு வோம். அது தலைவனைப் பிரிந்த தலைவி தோழியை நோக்கிக் கூறுவதாகும்.

*“ பலபல ஊழிக ளாயிடும் அன்றியோர் நாழிகையைப்*
*பலபல கூறிட்ட கூறாயிடும் கண்ணன் விண்ணனையாய்*
*பலபல நாளன்பர் கூடிலும் நீங்கிலும் யாம்மெலிதும்*
*பலபல சூழ லுடைத்து அம்மவாழியிப்பா யிருளே ”* [1]

இது தலைவனைப் பிரிந்த தலைவி தோழியை நோக்கி இரவைப் பற்றி உரைத்தல் என்ற துறையில் உள்ளது. தலைவி தோழியை நோக்கி, “தோழியே ! இந்த இராக்காலம் பல வஞ்சனைச் செயல்களை உடையதாக இருக்கின்றது. தலைவன் பிரிந்த நாளில் ஓர் இரவு பல ஊழிகளாக நீண்டும், கூடியிருக்கும் நாளில் ஓர் இரவு மிகக் குறுகிய அளவாகக் கழிந்தும் விடுகின்றது” என்றாள் தலைவி. இதே கருத்தினைத் திருக்குறளிலும் காணலாம்.

*“ கொடியார் கொடுமையின் தாம்கொடிய இந்நாள்*
*நெடிய கழியும் இரா ”* [2]

---

1. *திருவிருத்தம்*-16.
2. *திருக்குறள் - படர்மெலிந்து இரங்கல்*-9.

காதலனோடு இன்புற்ற முன்னாளில், குறியவாய் அவர் பிரிந்துள்ள இந்நாளில் நீண்டு செல்கின்ற இரவு தம்மைப் பிரிந்து சென்ற தலைவனது கொடுமையைக் காட்டிலும் கொடுமை செய்கின்றது என்கின்றாள் தலைவி. "பல பலநாள் அன்பர் கூடிலும் நீங்கிலும் யாம் மெலிதும்" என்ற வரியில் தலைவன் பிரிந்த நாளில் அவனது பிரிவாற்றாது அவனை விரைவாகப் பெறவேண்டும் என்று வருந்து வதும், கூடியிருக்கும் நாளில் அவன் பிரிந்துவிட்டால் என்செய்வது என்று பிரிவை நினைந்து வருந்துவதும் இயல்பாயிற்று. இதே கருத்துத் திருக்குறளில் மற்றோரிடத்தில் வந்துள்ளது காண்க.

*"வாராக்கால் துஞ்சா வரின்துஞ்சா ஆயிடை*
*ஆரஞர் உற்றன கண்"* [3]

"காதலர் வாராத நாளில் அவரது வரவு பார்த்துத் துயிலா; வந்த ஞான்று பிரிவஞ்சித் துயிலா; ஆதலான் அவ்விருவழியும் என் கண்கள் பொறுத்தற்கரிய துன்பத்தினை உடையன" என்பர் பரிமேலழகர். தலைவி, தலைவன் வந்துள்ள காலத்திலும் வருந்து வதற்குக் காரணம் அவன் தன்னைப் பிரிந்து விடுவானே என்ற அச்சத்தினாலாகும் என்பதைக் கீழ்க்காணும் குறள் விளக்குகின்றது.

*"பெறாமை அஞ்சும் பெறின்பிரிவு அஞ்சும்*
*அறாஅ இடும்பைத்துஎன் நெஞ்சு"* [4]

இதனால் தலைவி தலைவனைப் பெற்றுள்ள காலத்தும், அவனைப் பிரிந்த காலத்தும் வருந்துவாள் என்பது பெறப்படுகின்றது "கண்ணன் விண்ணனையாய்" என்று தலைவனது நகரத்தைத் தலைவி தோழிக்கு உவமை கூறுவது இயல்பு "திருமாலின் பரமபதந்தை அடைந்தவர் அழிவின்றி வாழ்வார். அதைப்போல் தலைவனைப் பிரிந்தும் உன்னை அடைந்திருத்தலால் யான் இறந்துபடாது இருக்கின்றேன்" என்பது தலைவியின் கருத்தாகும். "கண்ணன் விண் அனையாய்" என்பது தலைவிக்கும் உவமையாகக் கூறுவதுண்டு. "வீட்டுலகை அடைந் தவர் அதைவிட்டு மீள்வதில்லை. ஆகவே உன்னை அடைந்த தலைவர் உன்னை விட்டு நீங்கார், ஆதலின் விரைவின் வருவார், வருந்தாதே" என்பது கருத்து. எனவே மேலேகண்ட "கண்ணன் விண்அனையாய்" என்பது தலைவிக்கும் பொருந்துவது காண்க. திருவிருத்தம் 55-ம் செய்யுளில் தலைவன் தலைவியை "வைகுந்தம்

---

3. *திருக்குறள் : **கண் விதுப்பு அழிதல்**-9.*
4. *திருக்குறள் : நெஞ்சொடு புலத்தல்-5.*

அனுள்'' எனக் கூறுகின்ருன். இதற்கு உரையாசிரியர் வைகுந்தத்தை அடைந்தவர்க்கு அப்பேரின்பமே நெஞ்சில் நிகழ்வதன்றி வேறு எவ்வின்பமும் நெஞ்சிற்படாதவாறுபோல இத்தலைவியை அடைந்த தனக்கு இத்தலைவி இடத்து எல்லா இன்பமும் பொருந்தியிருத்தலின் வேறெவ்வின்பமும் தன் நெஞ்சிற்படுவதில்லை எனக் கூறுவதாக விளக்கியுள்ளார்.

''*கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றுஅறியும் ஐம்புலனும்*
*ஒண்டொடி கண்ணே யுள*''[5]

என்ற குறளில் ''கண்ணுல் கண்டும் செவியால் கேட்டும் நாவால் உண்டும் மூக்கால் மோந்தும் மெய்யால் தீண்டியும் அனுபவிக்கப் படும் ஐம்புலனும், இவ் ஒள்ளிய தொடியை உடையாள் கண்ணே உளவாயின'' எனத் தலைவன் கூறுவது ஈண்டு ஒப்புநோக்கத் தக்கதாகும்.

''*வாராயின முலையாளிவள் வானேர் தலைமகனும்*
*சீராயின தெய்வநன்னேயிது தெய்வத் தண்ணந்துழாய்த்*
*தாராயினும் தழையாயினும் தண்கொம்பதாயினும் கீழ்*
*வேராயினும் நின்ற மண்ணுயினும் கொண்டுவீசுமினே*''[6]

இது ஆழ்வார் தம்மைத் தலைவியாகவும் திருமாலைத் தலைவனுகவும் கருதி அகப்பொருள் துறையில் பாடிய பாடலாகும். இது கட்டுவிச்சி கூறல் என்ற துறையின்பாற்படும். தலைவி நோயினுல் வருந்துகின்ருள். அந்நோயின் காரணத்தை அறிவதற்காகப் பெற்ருேர் கட்டுவிச்சியை அழைத்துக் கேட்டபோது அவள் ''இப்பெண் திருமாலிடத்துக் காதல் கொண்டுள்ளாள். இந்நோய் அவரது பிரிவுத் துன்பத்தால் உண்டானது. எனவே தலைவனுடைய குளிர்ந்த துளசி மாலையாயினும், அதன் தழையாயினும் கொம்பாயினும், அச் செடியின் வேராயினும் அது முளைத்த இடத்திலுள்ள மண்ணுயினும் கொண்டுவந்து கொடுத்தால் இந்நோய் நீங்கும்'' என்ருள். இதனுல் அப்பொருள்களிடத்திலுள்ள தலைவன் சம்பந்தமே நோய்க்குப் பரிகாரம்; பொருளில் நோக்கமில்லை என்பது போதரும்'' என உரையாசிரியர் கூறுவது சிந்திக்கத்தக்கது. தலைவன் துளசி மாலை அணிந்துள்ளதால் அத்துளசி மாலையும் தலைவியின் துன்பத்தைப்

5. *திருக்குறள்* : *புணர்ச்சி மகிழ்தல்*-1.

6. *திருவிருத்தம்* : 53. 170132

போக்கும் என்பதாம். இதே கருத்துத் திருக்குறளில் கூறப்பட்டுள்ளது.

*"விடாஅது சென்றாரைக் கண்ணினால் காணப்*
*படாஅதி வாழி மதி"* [7]

இத்திருக்குறள் "நினைந்தவர் புலம்பல்" என்ற துறையின்பாற் படும். சந்திரனே! நானும் உன்னை நோக்குகின்றேன். என்னைப் பிரிந்துச் சென்ற தலைவனும் உன்னை நோக்குகின்றான். ஆதலால் நான் உன்னைப் பார்த்தால் தலைவனைப் பார்த்ததுபோல் ஆகும். எனவே நீ எப்போதும் மறையாமல் எனக்குத் தோன்றுதல் வேண்டும் என்பது தலைவனைப் பிரிந்த தலைவியின் கூற்றாகும். "மதியே என் நெஞ்சின் இடைவிடாதிருந்தே விட்டுப் போயினாரை யான் என் கண்ணளவானாயினும் எதிர்ப்படும்வகை நீ படாதொழிவாயாக. கண்ணளவான் எதிர்ப்படுதலாவது; மதி இருவராலும் நோக்கப் படுதலின் இருவர் கண்ணும் அதன் கண்ணே சேர்தல்" என்பர் பரிமேலழகர். இக்குறளில் பிரிந்து வேற்றூரிலுள்ள தலைவனால் காணப்படும் சம்பந்தம் நோக்கிப் பிரிவுக் காலத்தில் துன்புறுத்தும் பொருளாகிய திங்களைத் தலைவி காணவிழைதல் காண்க. இதற்குக் காரணம் திங்களும் தலைவனால் பார்க்கப்பட்ட பொருளாகும்.

இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்தபின் தலைவன் மறுநாளும் தலைவியைக் காண வருகின்றான். தலைவியும் முன்னாள் தலைவனைச் சந்தித்த இடத்தில் வந்தாள். வந்தவள் முதலில் தலைவனைக் காண வில்லை. அப்படியிருந்தும் முந்தியநாள் தலைவனைச் சந்தித்த இடத்தைக் கண்டவுடன் அவனைக் கண்டது போலவே மகிழ்ந்தாள். இதனை "நெருநலின் தலைமகனை வழிபட்ட இடம் எதிர்ப்பட்டுத் தலைமகனைக் கண்டாளே போலப் பரவசமாய் நின்றாள்" என அகப் பொருள் நூல் கூறும். எனவே தலைவனைக் காணாவிடத்தும் அவனைக் கண்ட இடத்தில் வந்தபோது அவனைக் கண்டதேபோல் தலைவி மகிழ்ந்தாள் என்பது பெறப்படுகின்றது மேலே காட்டிய ஆழ்வார் பாசுரத்தில் "வானோர் தலைமகனும் சீராயின தெய்வ நன்னோய் இது" என்ற வரிக்கு உரையாசிரியர் கூறிய பொருள் நயத்தை இனிக் காண்போம். சீராயின தெய்வ நன்நோய் என்ற தொடரைச் சீராயின நோய், தெய்வ நோய், நன்னோய் என மூன்றாகப் பிரித்துக்கொள்ள வேண்டும்.

---

7. *திருக்குறள் : நினைந்தவர் புலம்பல்–10.*

தலைவன் பிரிவால் உண்டான நோயாதலின் அவனை அடைந் தால் நீங்குவதல்லது வேறு எவ்வகையானும் நீங்காத நோய் எனக் கூறவந்தவர் "சீராயினநோய்" என்றார்.

தெய்வத்தால் உண்டான நோய் அல்லது தெய்வத் தன்மை பொருந்திய நோய். உணவு செயல்களின் மிகுதி குறைவுகளால் உண்டாகும் நோய்கள் போலன்றித் தெய்வத்தானாகிய நோய் எனக் கூறவந்தவர் "தெய்வ நோய்" என்றார். "இது நோயாக இருப் பினும் அன்பு காரணமாக உண்டானதாகலின் மற்றைய நோய்கள் போல் வெறுக்கத்தக்கதன்றி ஏற்றுக்கொள்ளத் தக்கதாகும் எனக் கூறவந்தவர் "நல் நோய்" என்றார் என உரையாசிரியர் கூறும் திறம் படித்து இன்புறத்தக்கதாகும்.

**திருவாய்மொழி :**—நம்மாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய திரு வாய்மொழிக்கு ஆறாயிரப்படி, ஒன்பதினாயிரப்படி, பன்னீராயிரப்படி இருபத்துநாலாயிரப்படி, முப்பத்தாறாயிரப்படி என்னும் ஐந்து உரைகள் உள்ளன. அவற்றுள் முப்பத்தாறாயிரப்படியை எழுதியவர் வடக்குத் திருவீதிப் பிள்ளை. இந்த வியாக்கியானம் ஈடு என்ற பெயரால் வழங்கப்பட்டது. ஒற்று ஒழிந்து உயிரும் உயிர் மெய்யுமான முப்பத்திரண்டு எழுத்துக்களை உடையது ஒரு கிரந்தம் எனப்படும். படி என்பது அளவு என்ற பொருள்தரும். எனவே 36000 கிரந்தங்களை உடையதால் இது முப்பத்தாறாயிரப்படி எனப் பெயர்பெற்றது. இந்த விளக்கவுரை மணிப்பிரவாள நடையில் அமைந்துள்ளது. இது எல்லோருக்கும் பயன்படும் வகையில் திரு. வித்துவான் புருஷோத்தம நாயுடு அவர்கள் அவ் வியாக்கி யானங்களைத் தமிழ் நடையில் எழுதியுள்ளார். இதனை வெளியிட்ட சென்னைப் பல்கலைக் கழகத்தார்க்குத் தமிழ் மக்கள் என்றும் நன்றி செலுத்தக் கடமைபட்டுள்ளார்கள். "ஈடு முப்பத்தாறாயிரப்படி என்ற இவ்வுரை சொன்னோக்கும் பொருள் நோக்கும் தொடை நோக்கும் நடை நோக்கோடு எந்நோக்கும் அமைந்தது. கற்போர் மனத்தைத் கவருந்தன்மையது; புத்தியும் பத்தியும் தோன்று விப்பது."[8]

இனி திருவாய்மொழியில் நான்காம் திருவாய்மொழி முதல் பாட்டினை நோக்குவோம்.

8. *திருவாய்மொழி ஈட்டின் தமிழாக்கம் பகுதி*-**1.** (*முதற் பத்து*) *முகவுரை பக்கம்*-5. *சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு*-**1952.**

" அஞ்சிறைய மடநாராய்
அளியத்தாய் நீயும்நின்
அஞ்சிறைய சேவலுமாய்
ஆஆஎன் றெனக்கருளி
வெஞ்சிறைப்புள் ளுயர்த்தார்க்கென்
விடுதூதாய்ச் சென்றக்கால்
வன்சிறையி லவன்வைக்கில்
வைப்புண்டா லென்செயுமோ "[9]

இத்திருவாய்மொழிப் பாடல் நாற்சீர் நாலடியாய் தரவுகொச்சகக் கலிப்பாவில் அமைந்துள்ளது. இப்பாடல் தலைமகள் நாரையைத் தூதுவிடல் என்ற துறையில் அமைந்துள்ளது. இனி இத்திருப் பாடலுக்கு விளக்கவுரையாசிரியர் கூறிய நயங்களைக் காண்போம். இந்த ஒரு பாடலுக்கு உரையாசிரியர் ஐந்து பக்க அளவில் உரை எழுதியுள்ளார். ஒவ்வொரு சொல்லுக்கும் உரையாசிரியர் கூறும் நயம் படித்து இன்புறத் தக்கதாகும்.

" அழகிய சிறகுகளையும் மடப்பத்தையுமுடைய நாரையே, அருளோடு கூடின நீயும், அழகிய சிறகுகளையுடைய நினது சேவலுமாகி அந்தோ ! என்று இரங்கி எனக்கு அருள்செய்து, கொடிய சிறகுகளையுடைய புள்ளாகிய கருடனைக் கொடியிலே யுயர்த்திய இறைவனிடத்தில் யான் விடுகின்ற தூதாகிச் சென்றால், உங்கள் முகம் பார்த்துக் கேளாமையாகிற கொடிய சிறையிலே அவன் வைத்தால், அவ்விருப்புக்கு நீங்க ளிசைந்திருப்பின் உங்களுக்கு அது என்ன குற்றத்தைச் செய்யும்? என்கிறாள் "[10] என்பது அப் பாடலின் பொழிப்புரையாகும்.

**விசேடக் குறிப்பு :—**

**நாராய் :—** பின்னர் மூன்றும் அடியில் "நின் சேவலும்" என்ற தொடர் ஆண்பாலை யுணர்த்துவதால் 'நாராய்' என்ற விளி ஈண்டுப் பெண்பாலை உணர்த்தும் எனக் கொள்ளுதல் வேண்டும். தன் தந்தையிடம் ஒரு பொருள் பெறவேண்டும் என விழைகின்ற இளைஞன் முன்னர்த் தாயினிடத்துத் தன் விருப்பத்தை வெளிப்படுத்தி அவள் மூலமாகத் தந்தையினிட மிருந்து அவன் விரும்பிய பொருளைப் பெறுவது உலக இயற்கை'

9. நான்காம் திருவாய்மொழி - முதல் பாடல், பக்கம்-126.

10. நான்காம் திருவாய்மொழி விளக்கவுரை - பக்கம்-127.

அதைப்போலவே சேவலின் துணையால் தன் விருப்பம் நிறைவேற வேண்டும் என்று நினைத்த ஆழ்வார் பேடையாகிய நாரையின் மூலமாகச் சேவலைக் கண்டு விளிக்கின்றார். இதனை விளக்கவுரை ஆசிரியர், "தன் பக்கத்திலே தங்கியிருப்பதொரு நாரையைப் பார்த்து 'என்றும் சேவலைக் காரியங் கொள்ளுவார் பேடையை முன்னாகக் காரியங் கொள்ளவேண்டும்' என்றிருக்குந் தம் வாசனை யாலே பேடையை முன்னிட்டுச் சேவலைப்பற்றி, 'நீ என் நிலையை யறிவித்து என்னையும் அவனையும் சேர்க்கவேண்டும்' என்கிறாள்" [11] எனக் கூறியது ஈண்டுச் சிந்திக்கத்தக்கது.

**அம்சிறைய** :—"குழந்தை தாயின் உறுப்புக்கள் எல்லாங் கிடக்க மார்பிலே வாய் வைக்குமாறு போன்று, பறப்பதற்குச் சாதனமான சிறகிலே முற்படக் கண் வைக்கிறாள். நீர் பாய்ந்த பயிர்போன்று ஒன்றற்கொன்று கலவியால் பிறந்த மகிழ்ச்சி வடிவிலே அறியலாம்படி இருக்கின்றதாதலின் 'அம்சிறை' என் கிறாள்." ஆசாரியனுடைய ஞானத்தை உத்தேசித்துச் சிஷ்யன் வணங்குவது போன்று, இவளும் சிறகிலே கண் வைக்கின்றாள்."

**மடநாராய்** :—மடமை என்பது கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை என்பர் பேராசிரியர். நாரை பணிவுடன் இருந்ததாலும், தன்னைப்போன்று பிரிவுத் துன்பத்தை அறியும் தன் இனமான பேடையைப் பார்த்து மடநாராய் என்றாள். இதனை உரையாசிரியர் "ஏவிக் காரியங் கொள்ளலாம்படி பணிவு தோன்ற விருந்தது. இனி, புணர்ச்சியாலே துவண்டு தூது போகைக்கு யோக்யமாம்படி இருக்கை எனலுமாம். இனி, நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் மகளிர்க்குள்ள நான்கு குணங்களுள் ஒன்றான மடப்பத்தையே கூறுகிறாள் என்று கொண்டு பிரிவில் துன்பத்தை யறியும் தன் இனமான பேடையைப் பார்த்துச் சொல்லு கிறாள் என்றலு மொன்று" எனக் கூறுதல் காண்க.

**அளியத்தாய்** :—'எனக்கு அருள் செய்தற்குத் தகுதியான தன்மையைப் பெற்றுள்ளாய்' என்பதாம்.

**நாரையைப் பார்த்த சமயம்** :—"இந்தச் சமயத்தில் இவள் நாரையைப் பார்த்தது யாங்ஙன மிருந்தது? எனின், பிராட்டியைப் பிரிந்த ஸ்ரீராமன் "பம்பை நதிக்கரையில் அநுமானைச் சந்தித்தது போன்றிருந்தது" என்பதாம். அச் சந்திப்பு வழி பறிப்பார் கையிலே

---

11. நான்காம் திருவாய்மொழி விளக்கவுரை - பக்கம்-127.

அகப்பட்டு நிற்கத் தாய் முகத்திலே விழித்தாற் போன்றிருந்தது என்றபடி.''

**நின் சேவல்** :—''சேவலிடத்துத் தான் அன்பு செலுத்துவ தற்குக் காரணம் பேடையே என்பாள் 'நின் சேவல்' என்கிருள். பெண்ணை யணைந்து பெற்ற அழகு வடிவிலே தோன்றுகின்ற தாதலின் அதனை 'அஞ்சிறை'" என்கிருள்.

**ஆ ஆ என்று** :—"'ஐயோ ஐயோ!'" என்று, இரண்டும் சேர்ந்திருப்பது தன் துன்பம் நீக்குகைக்கு என்றிருக்கிருள் ஆதலின் 'நீயும் நின் சேவலும்' என்கின்ருள்.''

**எனக்கு** :—"முனிவர்கள் இராக்கதர்களால் துன்புறுத்தப்பட்ட தங்களுடைய சரீரங்களை ஸ்ரீ ராமபிரானுக்குக் காட்டியது'' போன்று இவளும் 'எனக்கு' என்று, விரகம் தின்ற தன் வடிவைக் காட்டு கிருள்; இனி, அவனேடே கலந்து பிரிந்து, '**கண்ணுலே காணப் பெறுவதென்று காண்**' என்னும் விருப்பத்தோடே யிருக்கிற எனக்கு என்று பொருள் கூறலுமாம்.''

**நாரையைக் கொண்டாடியதற்கு உவமை** :—"இவள் நாரையைப் புகழ்ந்து கொண்டாடியது "வாநர உத்தமனே! நீ மிக்க பலமுடையவன், நீ மிக்க ஆற்றல் வாய்ந்தவன், நீ மிக்க வறிவு நிறைந்தவன்'' என்று பிராட்டி புகழ்ந்தது போன்றிருந்தது.

**நாரையின் கேள்வி** :—தலைவி கூறியதைக் "கேட்ட நாரை "எங்களை இங்ஙனம் கொண்டாடுகிறது என்? உன் நிலையைக் கண்டு போகட்டுப் போனவன் எங்கள் வார்த்தை கேட்கப் போகின்ருனே? மேலும் பரமபதத்தி லிருப்பவர்கள் எல்லாவற்ருலும் இறைவனை ஒத்தவர்களா யன்ரோ இருப்பார்கள்; நாங்கள் அவ னுக்கும் அவர்களுக்கும் வேற்றுமையறிவது யாங்ஙனம்'? என்றன்ரோ நாங்களிருக்கிரோம் என்பது அவற்றுக்குக் கருத்தாகக் கொண்டு மேல் வார்த்தை சொல்லுகிருள்.''

**வெஞ்சிறைப்புள் உயர்த்தார்க்கு** :—"அவர்கள் எல்லாவற் ருலும் தன்னை யொத்தவர்களாக இருக்கையாலே வேறுபாட்டினைக் காட்டும் அறிகுறியாகப் பெரிய திருவடியைக் கொடியிலே யுடையவனுக விருப்பான், விரோதியைப் போக்கிக்கொண்டு வருகைக்கு நமக்கு அங்கே ஆள் உண்டு என்பாள் 'வெஞ்சிறைப்புள்' என்கிருள். அன்றி, தன்னை விட்டு அருளின்றிப் பிரித்துக்கொண்டு

போகையாலே, "தேரை மிக விரைவாக ஓட்டிக்கொண்டு செல்வ தனுல், அக்குரூரர் அருளற்ற மனமுடையவர்" என்று ஆய்ப் பெண்கள் கூறியது போன்று கூறுகிருள் என்றலு மொன்று."

**புள் உயர்த்தார் :**—"புள்ளாலே தாங்கப்பட்டவர் என்னுதல். அன்றி, புள்ளைக் கொடியிலே உயர்த்தியவர் என்னுதல்."

**என்விடு தூதாய் :**—"இனி, பெருமிடுக்கரான பாண்டவர் களுக்குக் கிருஷ்ணன் தூது சென்றது போன்றதன்று: அபலையாய் மிக்க துன்பத்தை யுடையளா யிருக்கிற எனக்குத் தூதாகி என்பாள் 'என் தூதாய்' என்கிருள் எனினும் அமையும்."

**சென்றக்கால் :**—"பிறருக்காகத் தூது போகை கிடைப்ப தொன்ரே? சென்ருல், எனக்கு முன்னே உங்களுக்கன்ரே பலன் சித்திக்கப் புகுகிறது என்பாள் 'சென்றக்கால்' என்கிருள். பலன் சித்தித்தல் என்பது இறைவனை நேரில் கண்டு மகிழ்தல்."

**வன்சிறையில் :**—"காதலி பக்கல் நின்றும் வந்தவர்களைச் சிறையிடுவான் ஒரு மூர்க்கனுளனே? ஆதலால் ஈண்டுச் சிறை யாவது இவர்களுக்கு முகங்கொடாதே வேருென்றிலே நோக் குடையவனு யிருத்தல். ஆயின் இவ்வாறிருத்தலைச் சிறை என லாமோ? எனின், அரச குமாரர்கட்கு உரிய அவ்வக்காலங்களில் வெள்ளிலை இடாதபோது அவர்கள் வருந்துவார்கள். அதுபோன்று, இவைகட்கும் முகங்கொடுத்து அவன் கேளாமையே துன்பத்தினை விளைப்பதாம்; அதனையே ஈண்டுச் சிறை என்கிருள்."

**அவன் வைக்கில் :**—"மனிதர்களுக்குத் துன்பம் வந்தபோது அவர்கள் அடையும் துன்பத்தைக் காட்டிலும் இரண்டு மடங்கு அதிகத் துன்பத்தைத் தானடைகின்றவன் "சிறையில் வைப்பானே? வையான் என்பாள். 'வைக்கில்' என்கிருள். தலைமேற்கொள்ளுவான் என்பது குறிப்பு."

**வைப்புண்டால் என் செயுமோ :**—"கிடைக்குமாகில் அது பொல்லாதோ? சிறையிருத்தல் துன்பத்தைத் தருவதொன்றன்ரே எனின்? பிறருக்காகச் சிறை யிருக்கை கிடைப்பது ஒன்ரே"[12] நாட்டின் விடுதலைக்காக காந்தியடிகள் பண்டிதர் நேரு முதலியவர் சிறையில் இருந்தமை ஈண்டு ஒப்புநோக்கத்தக்கது.

---

12. நான்காம் திருவாய்மொழி - பக்கம்-131.

இவ்வாறாக ஒவ்வொரு சொல்லுக்கும் சிறந்த பொருள்கூறி, பல நயங்களை எடுத்துக்காட்டிய இந்த அரிய விளக்கவுரைகளைப் படிக்குந்தோறும் இத்தகைய பேருரை தேவார திருவாசகங்களுக்கு இல்லையே என்ற கவலை நம் உள்ளத்தில் தோன்றுவது இயல்பே. பெரியோர்களின் வாக்கின் பொருளை நம்மால் முற்றும் அறிய இயலாது எனக் கருதியே பலர் பக்திப் பாடல்களுக்கு உரை எழுத முன்வரவில்லை. சைவப்பெரியார் கயப்பாக்கம். சதாசிவ செட்டியார், B. A., அவர்கள். இக்கருத்தினைத் தாம் எழுதிய அகத்தியத் தேவாரத்திரட்டு உரையில் எடுத்துக் கூறியுள்ளார்கள். மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் திருவாசகத்தின் சில பகுதிகளுக்கு எழுதியுள்ள 'கதிர்மணி விளக்கம்' திருவாய்மொழி விளக்கவுரையை நினைப்பூட்டுகின்றது. பண்டிதமணி போன்ற பேராசிரியர் பெருமக்களைத் தமிழ்நாடு நன்கு பயன்படுத்திக்கொள்ளவில்லை என்றே கூறவேண்டும். இந்நிலையில் சைவத் திருவாளர் டாக்டர். தணிகைமணி. வ. சு. செங்கல்வராயப் பிள்ளை அவர்கள் திருப்புகழ் கந்தரநுபூதி, கந்தரலங்காரம் முதலிய நூல்களுக்கு அரிய உரை எழுதியிருப்பது தமிழர் செய்த தவப் பயனே எனக் கூறவேண்டும்.

**திருவரங்கக் கலம்பகம் :—** இனி, பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் பாடியுள்ள திருவரங்கக் கலம்பகத்திலிருந்து சில நயங்களைக் காண்போம். தலைவி திருவரங்கத்திலுள்ள அரங்கநாதனைக் காதலித்ததால் அவரிடத்து யாரைத் தூதாக அனுப்பலாம் என்பதைப் பற்றி நினைத்தாள். தன் நெஞ்சம் அல்லது வஞ்சனையற்ற துணை வேறு இல்லை என்பதை அறிந்து நெஞ்சைத் தூதுவிட்டாள். அது மீண்டும் திரும்பி வராமையால் தன் தோழிமாரை நோக்கி இரங்கிக் கூறுகின்றாள். "என் இன்பதுன்பங்களில் எனக்குத் துணையாக வுள்ள தோழிமார்களாகிய உங்களைத் தூது அனுப்பலாம் என்று பார்த்தால் நீங்கள் என்னைப் போன்ற பருவமுடைய இளமகளிராதலால் அத்தலைவர் அழகில் ஈடுபட்டு ஆழ்ந்திடுவீர்களேயன்றி என் காதலை அவரிடம் சொல்லி மறுமொழி கொண்டு மீண்டு வரமாட்டீர்கள் எனக் கருதி உங்களை அனுப்பவில்லை. கிளியைத் தூது அனுப்பலாம் என்றால் அதனை மன்மதனது குதிரையாகக் கூறுவராதலின் அதுவும் எனக்கு இணங்கி வராது. மேலும் அது சொல்லியதே சொல்லும் இயல்புடையது. யான் என்ன சொல்லி அனுப்புவேனோ அதைத்தான் சொல்லும். தலைவர் கேள்வி கேட்டால் அதற்குப் பதில் சொல்லத் தெரியாது. வண்டோ எனில் மன்மதனது வில்லின் நாணாதலால் அதுவும் என் திறத்து அன்புடையது ஆகாது.

அன்னப்பறவை கடினவேலை செய்யாது எதையும் மெதுவாகச் செய்யும்; இனிய இடத்தில் வீற்றிருந்து கிடைத்த இரையை உண்டு பிரிவுத்துயர் அறியாது தானும் தன் துணையும் கூடி வாழ்ந்து களித்திருக்கும். அது தன் நலம் பேணுவதும் நட்புப் பிரிக்கும் குணமுடையதுமாதலால் அந்தப் போகத்தை விட்டு எனக்காக அவ்வளவு தூரம் வருந்திச் சென்று விரைவில் என் நிலைமையைத் தலைவருக்குச் சொல்லி நேரில் மீண்டு வந்து அவர் சொல்லை எனக்குச் சொல்லமாட்டாது" எனத் தலைவி கூறினாள்.

நாம் ஒருவரை ஒரு வேலைக்கு அனுப்பும்போது உண்மையாக அவர்கள் அந்த வேலையைச் செய்வார்களா என்று கருதி அனுப்ப வேண்டும். என் நண்பர் ஒருவர் தன் மகனுக்குப் பெண் பார்த்து முடிக்கும்படி ஒருவரைத் தூதாக அனுப்பினார். அவர் அனுப்பும் போதே நான் சொன்னேன். "நீங்கள் பொன்னுசாமி செட்டியாரை அனுப்புகின்றீர்களே அவர்களுக்குப் பெண்ணைவிடப் பொன் பிரிய மாயிற்றே. அவருக்கும் பிள்ளை உள்ளதால் உண்மையில் உங் களுக்குத் துணை செய்வாரோ என்பதுபற்றி நான் ஐயுறுகின்றேன்" என்றேன். நான் நினைத்தபடியே நடந்தது. இறுதியில் பொன்னுசாமி செட்டியார் என் நண்பர் மகனுக்கு அப்பெண்ணைப் பேசி முடிக்காமல் தன் பிள்ளைக்கு அப்பெண்ணைப் பேசி முடித்துக்கொண்டார். இதனால் தான் வள்ளுவர்,

*"ஒற்றுஒற்றித் தந்த பொருளையும் மற்றும்ஓர்*
*ஒற்றினால் ஒற்றிக் கொளல்"* [13]

என்பர். நான் ஒருமுறை என் வேலைக்காரனை அனுப்பி அடுத்தத் தெருவில் என் நண்பர் "முதலியார்" வீட்டில் இருக்கின்றாரா பார்த்துவா என்றேன். அவன் போய்ப் பார்க்காமலேயே அவர் வெளியே போய்விட்டார் என்றான். பிறகு ஐயப்பட்டு என் மகனை அனுப்பினேன். என் நண்பர் வீட்டிலே இருக்கின்றார் என்று அவன் வந்து தெரிவித்தான்.

இதெல்லாம் எதற்காகக் கூறுகின்றேன் என்றால் தலைவி மற்றவர்களை அனுப்ப ஐயம் கொண்டதில் தவறில்லை. எனவே தலைவி கிளி, வண்டு, அன்னம் இவைகளிடத்து நம்பிக்கை இல்லாமல் நெஞ்சை யொளித்தொரு வஞ்சமில்லை என்றபடி தன் நெஞ்சினிடத்து நம்பிக்கை கொண்டு அதனைத் தலைவர்பால் தூது அனுப்பினாள்.

---

13. *திருக்குறள் : ஒற்றாடல்-8.*

திருவரங்கநாதரிடம் தூது சென்ற மனம் தலைவி நினைத்தபடி செய்யவில்லை. திருவரங்கரைக் கண்டு வணங்கி தலைவியின் குறையைச் சொல்லி, அவர் திருவுள்ளமுவந்து திருத்துழாய்மாலை தந்தருளினால், அதனை வாங்கிக்கொண்டு திரும்பி வராமல் திரு வரங்கனுடைய திருமார்பிலும் தோள்களிலும் வேட்கை மிகுதியால் மயக்கம்கொண்டு இன்பமுண்டாகத் தழுவிக்கொண்டு தலைவியை யும் மறந்துவிட்டது. இத்தகைய கருத்துடைய அச்செய்யுளைக் காண்போம்.

"நீரி ருக்கமட மங்கை மீர்கிளிக
டாமிருக் கமதுக ரமெலா
நிறைந்தி ருக்கமட வன்ன முன்னநிரை
யாயிருக் கவுரையா மல்யான்
ஆரி ருக்கிலுமென் நெஞ்ச மல்லதொரு
வஞ்ச மற்றதுணை யில்லையென்று
ஆத ரத்தினொடு தூது விட்டபிழை
யாரி டத்துரைசெய் தாறுவேன்
சீரி ருக்குமறை முடிவு தேடரிய
திருவ ரங்கரைவ ணங்கியே
திருத்து ழாய்தரில்வி ரும்பி யேகொடுதி
ரும்பி யேவருத லின்றியே
வாரி ருக்குமுலை மலர்ம டந்தையு
றைமார் பிலேபெரி யதோளிலே
மயங்கி யின்புறமு யங்கி யென்னையும
றந்து தன்னையும றந்ததே"[14]

இதற்கு அடுத்த 25-ம் பாடலில் தலைவி தலைவனிடத்து வண்டினைத் தூது விடுகின்றாள். தலைவியின் மனம் இப்போது மாறிவிட்டது. வண்டினைத் தூதுவிடமாட்டேன் என்று கூறிய தலைவி பிறகு வண்டினையே தலைவனிடம் தூது அனுப்பினாள்.

"இனம்போன்று இனமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும்"[15]

---

14. திருவரங்கக் கலம்பகம்-24.

15. திருக்குறள் : கூடாநட்பு-2.

என்ற வள்ளுவர் வாக்கின் வண்ணம் மகளிர் மனம் அடிக்கடி மாறுதல் இயல்பன்றோ ! முன் பாடலில் வண்டு அன்னம் தன்மனம் முதலியவை பற்றித் தன் தோழிமார்களிடம் கூறிய தலைவி இப்போது வண்டினைத் தலைவன்பால் தூது விடுத்து அது திரும்பி வராமையால் வண்டைப்பற்றித் தன் நெஞ்சுக்குக் கூறுகின்றாள். "நெஞ்சே ! யான் வண்டினை அரங்கர்பால் தூது அனுப்பினேன். அது இன்னும் திரும்பி வரவில்லை. ஒருவேளை இடையிலுள்ள சோலையில் தங்கி அங்குள்ள தேனைப்பருகித் தேன் உண்ட மயக்கத்தால் என்னை மறந்திருக்குமோ ? அல்லது அச்சோலைக்கு அப்புறத்தே பறந்து செல்லுமோ ? கோயில் முன்னே சேருமோ ? எனக்குச் சிறப்புண்டாக அவர் அருளுகின்ற வரங்களைக் கேட்குமோ ? அல்லது எங்காவது தாமதித்து நிற்குமோ அறியேன்" என்றாள் தலைவி.

*"மறக்குமோ காவின் மதுவருந்தி யப்பாற்*
*பறக்குமோ சன்னிதிமுன் பாமோ—சிறக்கத்*
*தருவரங்கள் கேட்குமோ தாழ்க்குமோ நெஞ்சே*
*திருவரங்கர் பாற்போன தேன்"* [16]

தேன்—வண்டில் ஒருவகை சாதி. தலைவி தான் வேறாகவும் தன் நெஞ்சு வேறாகவும் வைத்துக் கூறுதல் இலக்கிய மரபாகும். திருக்குறளில் வந்துள்ள கருத்தினை நோக்குவோம். தலைவி தன் நெஞ்சை நோக்கி "நெஞ்சே நீ விரும்பியவாறு அவர்மாட்டு செல்லுதற்குக் காரணம் கெட்டார்க்கு நட்டார் உலகத்து இல்லை என்னும் நினைவோ ? நின் இயல்போ கூறுவாயாக" என்றாள்.

*"கெட்டார்க்கு நட்டார்இல் என்பதோ நெஞ்சேநீ*
*பெட்டாங்கு அவர்பின் செலல்"* [17]

இக்குறளுக்கு உரை எழுதப்போந்த பரிமேலழகர் விளக்கவுரையில் "என்னைவிட்டு அவர் மாட்டுச்சேறல் நீ பண்டே பயின்றது என்பாள் "பெட்டாங்கு" என்றும், தான் இப்போது மானமிலளாகலின் கெட்டார்க்கு என்றும் கூறினாள் என்று கூறியது ஈண்டுச் சிந்திக்கத்தக்கது.

---

16. *திருவரங்கக் கலம்பகம்-25.*

17. *திருக்குறள் : நெஞ்சொடு புலத்தல்-3.*

# III தேவார திருவாசகங்களில் இலக்கியச் சுவை

அகப்பொருள் களவு, கற்பு என இரண்டு பிரிவுகளையுடையது. சிற்றின்பமே என்றும் நிலையாகவுள்ள பேரின்பமாகிய வீடு பெறு தற்கு வழிகாட்டியாக உள்ளதால் நாயன்மார், ஆழ்வார்கள், இராமலிங்க அடிகள் முதலிய பெரியோர்கள் அகத்துறைப் பாடல் மூலம் இறைவனைப் பாடியுள்ளனர். இது புறத்திணையுள் பாடாண் டிணைப் பகுதியாகும். சைவ சமய குரவர் நால்வர் அகப்பொருள் துறையில் பாடியருளிய திருப்பாடல்களில் அமைந்துள்ள இலக்கிய நயத்தினை இனிக் காண்போம். திருஞானசம்பந்தர் தம்மைத் தலைவியாகவும், திருத்தோணிபுரத்தில் (சீர்காழியில்) திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள சிவபெருமானைத் தலைவனாகவும் கருதி "நாரைவிடுதூது" என்ற அகப்பொருள் துறையுள் பாடியுள்ள திருப்பாடலைக் காண்போம். திருஞானசம்பந்தர் நாரையை இறைவ னிடம் தூது விடுகின்றார். அவர் நாரையை நோக்கி, "அழகு மிக்க செம்மையான கால்களோடு கழியோரத்தில் வீற்றிருக்கும் நாரையே! எனக்கு இறைவன் மீதுள்ள காதலால் என் தோள்கள் மெலிந்து என் உடம்பில் பொன்மயமான தேமலும் தோன்றியுள்ளது. யான் காதலால் துன்புறும் இச்செய்தியைத் திருத்தோணிபுரத்துறையும் ஆண்டகையாகிய இறைவனிடம் இன்றே போய்க் கூறுவாயாக" என்ற பொருளில் அமைந்த கீழ்க்காணும் திருப்பாடலை நோக்குக.

*"காண்டகைய செங்காலொண்*
*கழிநாராய் காதலாற்*
*பூண்டகைய முலைமெலிந்து*
*பொன்பயந்தா ளென்றுவளர்*
*சேண்டகைய மணிமாடத்*
*திருத்தோணி புரத்துறையும்*
*ஆண்டகையாற் கின்றேசென்*
*றடியறிய வுணர்த்தாயே"* [1]

தலைவியின் உடல் மெலிவையும், மேனி பசந்ததையும் நாரை உடனே சென்று உணர்த்தினால் இறைவன் ஆண்டகையாய் இருப்பதால் அவர் தலைவியிடம் கருணை வைப்பார் என்ற கருத்தில் "இன்றே

---

1. *முதல்திருமுறை : திருத்தோணிபுரம்.*

சென்று உணர்த்தாயே " என்றாள் தலைவி. நாரை திருத்தோணி புரத்து இறைவனைக் காணபதற்குச் சென்றால் பிறர் கண்களில் படாமல் சென்று, அவரைப் பார்க்கும் காலம் கிட்டும் வரை தங்குவதற்கு அங்கு மணிமாடங்கள் உள்ளன எனக் கூறவந்த தலைவி, " மணிமாடத் திருத்தோணிபுரம் " என்றாள். இப்பாடலில் " அடி அறிய " என்ற தொடருக்குக் காரணம் அறிய என்பது பொருளாகும். இறைவன் வானளாவிய மணிமாடங்கள் நிறைந்த திருத்தோணிமலைச் சிகரத்தில் இருப்பதால் அவரைக் காண்பது எளிது எனக் கூறவந்த தலைவி, " வளர் சேண்டகைய மணிமாடத் திருத்தோணிபுரத்துறையும் ஆண்டகை " என்றாள். இத் திருப் பாடலால் திருஞானசம்பந்தர் இறைவனிடத்தில் கொண்ட அன்பின் சிறப்பு புலப்படுகின்றது.

திருநாவுக்கரசரும் தம்மைத் தலைவியாகவும், இறைவனைத் தலைவனாகவும் கருதி அகத்துறையில் பல பாடல்கள் பாடியுள்ளார். தலைவி நாரையை நோக்கி " ஓசை மிக்க பெரிய கடலில் சென்று இரை தேடுகின்ற சிவந்த கால்களையுடைய இளநாரையே! இனி என்ன செய்வதென்று எனக்கு ஒன்றும் தெரியவில்லை. திருப்பழனத்துள் திருக்கோயில் கொண்டெழுந்தருளியுள்ள இறைவனை யான் காதலித்துள்ளேன். பிரிவுத் துன்பத்தால் உண்டான என் உடல் மெலிவால் கைவளைகளும் கைசோர விழுகின்றன. என் துன்பத்தைப் போக்குதற்கு என் தலைவனாகிய இறைவன் இங்கு வாராவிடினும் தன் அழகிய கொன்றை மாலையை அருளாமலிருப்பானோ? அருள் வான் என்றே கருதுகின்றேன் " என்றாள்.

" பொங்கோத மால்கடலிற்
புறம்புறம்போய் இரைதேரும்
செங்கால்வெண் மடநாராய்
செயற்படுவ தறியேன்நான்
அங்கோல வளைகவர்ந்தான்
அணிபொழில்சூழ் பழனத்தான்
தங்கோல நறுங்கொன்றைத்
தாரருளா தொழிவானோ " [2]

இத்திருப்பாடலில் இறைவன் தனது வளையல்களைக் கவர்ந்து விட்டான் என்றும், கொன்றைமாலை அருள்வானோ என்றும் தலைவி

2. 4-ம் திருமுறை: திருப்பழனம்.

கூறுதல் அவள் தலைவனிடத்துக் கொண்டுள்ள அளவற்ற அன்பினை எடுத்துக் காட்டுவதாகும்.

தம்பிரான் தோழராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளும் சில அகத் துறைப் பாடல்கள் பாடியுள்ளார். நாரைவிடுதூது என்ற துறையில் அமைந்துள்ள திருப்பாடலை நோக்குவோம். சுந்தரர் நாரைகளை நோக்கி "சுழன்று திரியும் நாரைகளே! திருவாரூர் இறைவருக்கு என் துன்பத்தை முழுவதும் கூறி அவரைத் தவிர எனக்கு வேறு பற்றின்மையும் உறவின்மையும் யான் பலராலும் அலர் தூற்றப் படுதலையும் நீங்கள் சென்று அவரிடம் கூற இயலுமோ? என்ற கருத்தமைந்த கீழ்க்காணும் திருப்பாடல் படித்து இன்புறத்தக்கது.

*"சுற்றமுற் றுஞ்சுழன் றுழலும்வெண் ணுரைகாள்*
*அற்றமுற் றப்பகர்ந் தடிகள்ஆ ரூரர்க்குப்*
*பற்றுமற் றின்மையும் பாடுமற் றின்மையும்*
*உற்றுமற் றின்மையும் உணர்த்தவல் லீர்களே"* [3]

இத் திருப்பாடல் தலைவி தலைவனிடத்து வைத்துள்ள இடையறாப் பேரன்பை வெளிப்படுத்துகின்றது.

திருவாசகத்தைத் திருவாய் மலர்ந்தருளிய மணிவாசகப் பெருந்தகையாரால் பாடப்பெற்ற அரிய அகப்பொருள் நூல் திருக் கோவையார். இந்நூலின் சிறப்பினை விளக்கவந்த ஔவையார்,

*"தேவர் குறளும் திருநான் மறைமுடியும்*
*மூவர் தமிழு முனிமொழியுங்—கோவை*
*திருவா சகமும் திருமூலர் சொல்லும்*
*ஒருவா சகமென் றுணர்"* [4]

எனப் பாடியுள்ளனர். இந்நூல் திருக்குறள் தொல்காப்பியம் முதலிய வற்றோடு ஒப்பவைத்து எண்ணும் சிறப்பினையுடையது என்பதனை விளக்கவந்த இலக்கணக்கொத்து நூலாசிரியராகிய சுவாமிநாத தேசிகர்,

*"பல்காற் பழகினுந் தெரியா வுளவேல்*
*தொல்காப் பியந்திரு வள்ளுவர் கோவையார்*
*மூன்றினு முழங்கும்"* [5]

---

3. 7-ம் *திருமுறை—திருவாரூர்.*

4. *ஔவையார் பாடல்*

5. *இலக்கணக்கொத்து.*

எனக் கூறியது ஈண்டுச் சிந்திக்கத் தக்கது. திருக்குறளின் கருத்துக்கள் பல இடங்களில் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. "உட்கோள்" என்ற துறையில் அமைந்த பாடலில் தலைவிக்குத் தலைவனிடத்து உண்டாகிய காதலைத் தலைவன் அவள் கண்ணின் மூலம் அறிகின்றான். "மின்னையும் பாம்பையும் ஒக்கும் இடையினையும் பெருந்தோளினையும் உடையாளது கண்கள் பிறழுந்தோறும் பிறழுந் தோறும் பொதுநோக்கத்தால் பிணியும், உள்ளக் கருத்து வெளிப் படுக்கும் நாணோடுகூடிய நோக்கத்தால் அதற்கு மருந்துமாகின்றன" என்ற கருத்தமைந்த,

*"பிணியு மதற்கு மருந்தும் பிறழப் பிறழமின்னும்*
*பணியும் புரைமருங் குற்பெருந் தோளி படைக்*
*[கண்களே"* [6]

என்ற திருக்கோவையாரின் வரிகள்,

*"இருநோக்கு இவள்உண்கண் உள்ளது ஒருநோக்கு*
*நோய்நோக்குஒன்று அந்நோய் மருந்து"* [7]

என்ற திருக்குறளினை நினைப்பூட்டுதல் காண்க.

*"தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்*
*பெய்யெனப் பெய்யும் மழை"* [8]

என்ற திருக்குறளின் கருத்து,

*"தெய்வம் பணிகழ லோன்தில்லைச் சிற்றம் பலம்அனையாள்*
*தெய்வம் பணிந்தறி யாள்"* [9]

என்ற திருக்கோவையாரின் வரிகளில் வந்துள்ளமை காண்க.

திருக்கோவையாரில் "வன்புறை யெதிரழிந் திரங்கல்" என்ற துறையில் அமைந்த திருப்பாடலில் வந்துள்ள உவமை நயம் படித்து இன்புறத்தக்கதாகும். "வன்புறை யெதிரழிந்திரங்கல்" என்பது தலைவி தனக்கு ஆறுதல் கூறவந்த தோழியைக் கண்டு தலைமகன்

---

6. *திருக்கோவையார்—செய்யுள்* 5.
7. *திருக்குறள் : குறிப்பு அறிதல்*-1.
8. *திருக்குறள் : வாழ்க்கைத் துணைநலம்*-5.
9. *திருக்கோவையார் : செய்*-304.

மணந்துகொள்ளுதற்கு வரும் காலம் தாழ்ப்பினும் தமக்கு ஒரு பற்றுக்கோடு இன்றி வருந்தும் திருவினையுடையார்க்கு (அத்தகைய தலைவிக்கு) அவன் காலம் தாழ்த்து வருவதும் இனியதாகும். ஆனால் அவன் காலம் தாழ்த்து வருமளவும் யான் ஆற்றேன்'' எனத் தன் தோழியினிடம் கூறியதாகும். இத்துறைக்கு எடுத்துக் காட்டாகத் திருக்கோவையார் 276-ம் பாடல் அமைந்துள்ளது.

*'' வந்தாய் பவரையில் லாமயில்*
*முட்டை இளையமந்தி*
*பந்தா டிரும்பொழிற் பல்வரை*
*நாடன்பண் போஇனிதே*
*கொந்தார் நறுங்கொன்றைக் கூத்தன்தென்*
*தில்லை தொழார்குழுப்போல்*
*சிந்தா குலமுற்றுப் பற்றின்றி*
*நையுந் திருவினர்க்கே ''* [10]

தலைமகள் தோழியை நோக்கி ''கொன்றை மாலையை அணிந்த கூத்தப் பெருமானது தெற்கின்கண் உண்டாகிய தில்லையம்பதியை வணங் காதவரது கூட்டம்போல மனக்கலக்கம் கொண்டு தமக்கோர் பற்றுக்கோடு இல்லாமல் வருந்தும் திருவினையுடையார்க்கு (அத் தகைய தலைவிக்கு) மயிலினது முட்டையைக் குரங்கின் குட்டிகள் பந்தாடி விளையாடும் பெரிய சோலைகளோடு கூடிய நாட்டையுடைய தலைவனது இயல்பு இனிதாகும். ஆனால் தலைவன் வரைந்துகொள்ள வருமளவும் என்னால் பொறுத்துக் கொண்டிருக்க இயலாது. பொறுக்கும் மனவலிமை எனக்கு இல்லை'' என்றாள் தலைவி என்பது இப்பாட்டின் பொருளாகும்.

இத்திருப்பாடலில் ஒரு உள்ளுறை உவமம் உள்ளது. '' உற்றது ஆராய்ந்து ஓம்புவார் இல்லாத மயிலினது முட்டையால் ஈன்ற வருத்தம் அறியாத இளமந்தி, மயிலின் வருத்தமும் முட்டையின் மென்மையும் பாராது பந்தாடுகின்றாற்போல என் காமத்தை நீ அறி யாமையால் எனது வருத்தமும் காமத்தினது மென்மையும் பாராது இவ்வாறு உரைக்கின்றாய் என உள்ளுறை வகையால் தோழியை நெருங்கித் தலைவி 'வன்புறை யெதிரழிந்தவாறு' கண்டு கொள்க'' [11] என்பர் திருக்கோவையாரின் உரையாசிரியராகிய பேராசிரியர்.

---

10. *திருக்கோவையார்:* - 276.

11. *திருக்கோவையார். செய்-276. பேராசிரியர்* ***உரை — காசி மடத்தின் பதிப்பு பக்கம்-525.***

மயிலின் முட்டையின் அருமையை உணராது குரங்கின் குட்டி அவைகளைப் பந்தாடும் என்ற உவமை குறுந்தொகையில் வந்துள்ளது ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது. தலைவன் தலைவியை மணந்துகொள்வதற்காகப் பொருள் தேடச் சென்றான். பொருளுக்காகத் தலைவியைப் பிரிந்துசென்ற தலைவன் நெடுங்காலமாக வரவில்லை. அதற்காக வருந்திய தலைவியை நோக்கித் தோழி "நின்னை வரைந்துகொள்ளும் பொருட்டன்றோ அவர் பொருள் ஈட்டச் சென்றார்! அங்ஙனமிருப்ப நீ வருந்துவது ஏன் எனக் கேட்ட போது, "அவர் பிரிவை ஆற்றும் வன்மை என்பால் இல்லை" என்றாள் தலைவி.

"மயிலானது பாறையில் ஈன்ற முட்டைகளை வெயிலில் விளையாடும் குரங்கின்குட்டி உருட்டுதற்கு இடமாகிய மலைநாட்டையுடையவனாகிய தலைவனது நட்பு, அவன் பிரிய கண்ணின்று பெருகும் கண்ணீரோடு வருந்தாமல் பொறுத்துக்கொள்ளும் வன்மையுடையவர்களுக்கு மட்டும் எக்காலத்தும் நல்லதாம்" என்ற கருத்தமைந்த குறுந்தொகைச் செய்யுளை நோக்குவோம்.

*"கான மஞ்ஞை யறையீன் முட்டை*
*வெயிலாடு முசுவின் குருளை யுருட்டும்*
*குன்ற நாடன் கேண்மை யென்றும்*
*நன்றுமன் வாழி தோழி யுண்கண்*
*நீரொ டொராங்குத் தணப்ப*
*உள்ளா தாற்றல் வல்லு வோர்க்கே"* [12]

இப்பாடலில் "ஆற்றல் வல்லோர்க்கு நன்று" என்றமையின் தன்பால் ஆற்றுதற்குரிய வல்லமை யில்லாமையைத் தலைவி புலப்படுத்தினாள் என்க.

*"அரிதுஆற்றி அல்லல்நோய் நீக்கிப் பிரிவுஆற்றிப்*
*பின்இருந்து வாழ்வார் பலர்"* [13]

என்ற திருக்குறள் ஈண்டு ஒப்புநோக்கத்தக்கது. தலைவன் பிரிவு உணர்த்தியபோது அதற்கு உடன்பட்டுப் பிரியும்போது உண்டாகும் பிரிவுத் துன்பத்தையும் பொறுத்துக்கொண்டு பின்னும் இருந்து

---

12. *குறுந்தொகை – செய்யுள்-38.*

13. *திருக்குறள் : பிரிவாற்றாமை-10.*

உயிர் வாழும் மகளிர் உலகத்தில் பலர் உளர் என்பது இக்குறளின் கருத்தாகும்.

"மயில் அடைகாத்தற்குரிய அதன் முட்டை அங்ஙனம் செய்யப்படாது பாறையின்மேல் தனித்துக் கிடப்பதையன்றி அதனைக் குரங்கின்குட்டி விளையாட்டாக உருட்டுவதுபோல தலைவன் உடனிருந்து இன்புறுதற்குரிய தலைவி, அவன் பிரிவினால் துன்புறுதலையன்றி, தமக்கு நகை விளைவதொன்றே பயனாகிய ஊரார் அலர் கூறும் துன்பத்தையும் பெற்றாளென்பது குறிப்பு"[14] மிக மென்மையான மயிலின் முட்டை மயிலினால் அடைகாக்கப்படாமலும் குரங்கின் குட்டிகளால் விளையாட்டுப் பொருளாக உருட்டப்படுவதும்போல, தலைவன் பிரிவால் தலைவி வருந்துவதோடன்றி ஊரார் அலர் கூறும் துன்பத்தையும் பெற்றாள் என்பது உள்ளுறை உவமமாகக் கொள்க.

குறுந்தொகை, திருக்குறள் போன்ற சங்க நூல்களில் காணக் கிடக்கும் உவமைகளையும் சொற்றொடர்களையும் கருத்துக்களையும் மாணிக்கவாசகர் தாம் பாடியுள்ள திருக்கோவையாரில் கையாள்வதால் அவர் அமைச்சராய் இருந்த காலத்தில் பல நூல்களைக் கற்றிருத்தல் வேண்டும் என்பது பெறப்படுகின்றது. தேவாரத்திலும் திருக்குறள் கருத்துக்களையும் சங்கநூல் கருத்துக்களையும் காணலாம்.

எழுத்துக்கள் எல்லாம் அகரமாகிய முதலை உடையன அதுபோல உலகம் ஆதி பகவனாகிய முதலை உடையது என்பதனை விளக்கவந்த,

"அகரம் முதல எழுத்துஎல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"[15]

என்ற திருக்குறளின் கருத்தினைக் கீழ்க்காணும் திருஞானசம்பந்தர் தேவாரத்திலும் காண்க.

"தகர மணியருவித் தடமால் வரைசிலையா
நகர மொருமூன்று நலங்குன்ற வென்றுகந்தான்
அகர முதலானை யணியாப்ப னூரானைப்
பகரு மனமுடையார் வினைபற் றறுப்பாரே"[16]

---

14. குறுந்தொகை : டாக்டர், சாமிநாத ஐயர் 2-ம் பதிப்பு (1947) பக்கம்-98.

15. திருக்குறள் : கடவுள் வாழ்த்து-1.

16. முதல் திருமுறை : திரு ஆப்பனூர்.

திருக்குறளில் வந்துள்ள உவமை திருநாவுக்கரசர் தேவாரத்திலும் காணலாம்.

*" இனிய உளவாக இன்னாத கூறல்*
*கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று "* [17]

என்ற திருக்குறளில் வந்துள்ள 'கனியிருப்பக் காய்கவர்ந் தற்று' என்ற உவமை திருநாவுக்கரசர் பாடியுள்ள பழமொழி தேவாரத்தில்,

*" ஆரூரரைக், கையினால் தொழாதொழிந்து கனியிருப்பக்*
*காய்கவர்ந்த கள்வ னேனே "* [18]

என்ற வரிகளில் அமைந்துள்ளது காண்க.

யாக்கை நிலையாமையைக் கூறவந்த வள்ளுவர், ஒருவனுக்கு இறப்பு என்பது உறக்கம் வருவதைப் போன்றது என்றும், பிறப்பு என்பது உறக்கம் நீங்கி விழித்துக் கொள்வதைப் போன்றதாகும் என்றும் கூறவந்தவர்,

*" உறங்குவது போலும் சாக்காடு உறங்கி*
*விழிப்பது போலும் பிறப்பு "* [19]

எனக் கூறியுள்ளார். இதே கருத்தினை,

*" ஓடு புனற்கரை யாம்இளமை உறங்கிவிழித்*
*தாலொக்கு மிப்பிறவி "* [20]

என்ற சுந்தரர் திருவாக்கிலும் காண்க.

இதனால் சைவசமய குரவர் நால்வர் திருப்பாடல்களும் இலக்கியக்கருவூலங்களாக அமைந்துள்ளன என்பது போதரும். இதனால் தேவார திருவாசகம் முதலிய தோத்திரப் பாக்களை இலக்கியக் கண்கொண்டு பார்ப்போமானால் அவைகளில் பல இலக்கண இலக்கிய நயங்களைக் கண்டு இன்புறலாகும் என்பது பெறப்படுகின்றது.

---

17. *திருக்குறள் : இனியவை கூறல்*-10.

18. 4-ம் *திருமுறை - திருவாரூர்.*

19. *திருக்குறள் : நிலையாமை*-9.

20. 7-ம் *திருமுறை : திருநெல்வாயில் அரத்துறை.*

# IV இராமலிங்க அடிகள் பாடல்களில் இலக்கிய நயம்

இங்கிதமாலை என்பது சிதம்பரம் இராமலிங்க அடிகளால் இயற்றப்பட்ட இலக்கியச் செறிவு வாய்ந்த ஓர் அரிய நூலாகும். இங்கிதம் என்பது இனிமை, எண்ணக்குறிப்பு, நினைவு, அறிவு, நோக்கம் எனப் பொருள்படுமேனும் ஈண்டுக் குறிப்பு என்ற பொருளே சாலவும் பொருத்தமுடைத்து 'இங்கிதம் குறிப்பால் நிகழும் உறுப்பின் தொழில்'[1] என்பர் பரிமேலழகர். ஈண்டு இங்கிதம் என்பது தாருகாவனத்து முனிவர் மனைவியரின் கற்பின் செருக்கை அடக்கக் கருதிய சிவபெருமான் பிச்சாடனக் கோலம்பூண்டு அன்னவர் முன் செல்ல, அவரது அழகிய தோற்றத்தைக் கண்ட அத்தவ மங்கையர் சாலவும் மயங்கி, உள்ளுறையோடு கேட்ட வினாக்களுக்கு அப்பெருமான் இறுத்த விடைகளில் காணக்கிடக்கும் குறிப்புக்களாகும்.

கடவுள் மானிடப் பெண்டிருடன் உரையாடல் பொருந்துமோ, அன்றி மானிடப் பெண்டிர் கடவுளுடன் உரையாடல் உண்டோ எனச் சிலர் ஐயுறுதல் இயல்பேயாம். ஆனால், இதற்கு இலக்கணம் இடம் தருகின்றது என்பதைத் தொல்காப்பியத்தாலும் பிற இலக்கண நூல்களாலும் அறியலாகும்.

> *"காமப் பகுதி கடவுளும் வரையார்*
> *ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்"*[2]

என்ற தொல்காப்பியச் சூத்திரத்திற்கு உரை எழுதப்போந்த உச்சி மேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் 'அது கடவுண்மாட்டுக் கடவுட்பெண்டிர் நயப்பனவும், அவர்மாட்டு மானிடப்பெண்டிர் நயப்பனவும், கடவுள் மானிடப் பெண்டிரை நயப்பனவும் பிறவுமாம்' என்று உரை வகுத்துள்ளார். இதே கருத்தினைப் புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியராய ஐயனாரிதனார் 'கடவுள்மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கம் என்ற துறையில்,

---

1. *திருக்குறள் : பெரியாரைத் துணைகோடல்-2. பரிமேலழகர் விளக்கவுரை.*

2. *தொல் : புறத்திணையியல்–28.*

"முக்கணான் முயக்கம் வேட்ட
மக்கட் பெண்டிர் மலிவுரைத்தன்று"[3]

எனக் கூறியுள்ளார்.

தாருகாவனத்து முனிவர் மனைவியர் சிவபெருமானிடத்து மயல் பூண்டதும், அச்சிவபெருமான் அப்பெண்டிர் மாட்டு மயல் பூண்டமைபோல நடித்ததுமாகிய கருத்துக்களைப் பொருளாகக் கொண்டதால் இங்கித மாலை என்பது பாடாண்டிணைப் பகுதியாகும். பாடாண்டிணை என்பது புறத்திணைக்கு உரியதாயினும்,

"பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே"[4]

என்று ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியிருத்தலின் இதுவும் ஆற்றலாகிய சிறப்பினைக் கூறுவதால் இப்பாடாண்டிணைக் கைக்கிளை என்ற அகத்திணைக்குப் புறனும் என்க.

திருவருட்பிரகாச வள்ளலார் தமது மாணவர் கூடலூர் அய்யாசாமிப் பிள்ளை அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி இங்கிதமாலை என்னும் தொடருக்குப் பொருள் கூறியதாக, திருவருட்பாவில் ஒரு குறிப்புக் காணப்படுகின்றது. "இந்நூல் யாது காரணத்தால் இப்பெயர் அடைந்ததோ எனின், நாயக நாயிகா விவகாரத்தில் நிகழ்ந்த அங்கோபாங்கப் பிரத்தியங்கப் பிரேரக ஞாய சகித பாவனை சயிக்னை நயமும், நல்லறிவு சகித சயிக்ஞா வசன விசேடத்தாற் பாலென வெளிருதும், கனியெனச் சிதருதும் தேனெனக் குழருதுமாகி நேர்ந்த சல்லாப வியன் மொழியின் எண்ணக் குறிப்பும் சொலிக்க, ஆன்ம சிற்சத்தியாகிய தலைவி கடவுளாய தலைவரோடு சயிக்னை புரிந்த ஐக்யானுபவ சையோக விவகாரத்தைப் பராசத்தியராய உயிர்ப் பாங்கியரிடத்து வினவிய தலைவி பாங்கிக்குரைத்தல் என்னும் துறை நயத்தால் இப்பெயர் எய்தியது எனக் கொள்க"[5] என்பது அக்குறிப்பாகும்.

இங்கிதமாலை என்பது அறுசீர்கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தால் அமைந்த 166 பாக்களைக் கொண்டுள்ள நூலாகும். அவற்றுள் ஒருசில பாக்களின் நயத்தினை இங்கு ஆராய்வோம்.

---

3. புறப்பொருள் வெண்பாமாலை : பாடாண் படலம்-49.
4. தொல் : புறத்திணையியல்-25.
5. திருவருட்பா - திரு. ஊ. நா. முத்தைய செட்டியார் பதிப்பு, பக்கம்-293.

"தன்னந் தனியா யிங்குநிற்கும்
சாமி யிவரூர் ஒற்றியதாம்
அன்னந் தருவீர் என்றார்நான்
அழைத்தேன் நின்னை அன்னமிட
முன்னம் பசிபோ யிற்றென்றார்
முன்னின்(று) அகன்றேன் இவ்வன்னம்
இன்னம் தருவாய் என்கின்றார்
இதுதான் சேடி என்னேடி" [6]

இச்செய்யுள் தலைவி தோழிக்குக் கூறியதாகும். 'தோழீ! தன்னந் தனியாய் இங்கு நிற்கின்ற கடவுளாகிய இவர் ஊர் திருவொற்றி யூராம். பெண்களே! அன்னம் தாருங்கள் என்றார். அவருக்கு அன்னம் இடுதற்கு நான் உன்னை அழைத்தேன். யான் இவ்வாறு உன்னைக் கூப்பிட்டதைக் கேட்டவுடன் 'முன்பு இருந்த பசி போய் விட்டது' என்றார். இவ்வாறு அவர் கூறவே, யான் அவர் முன் னின்றும் அகன்றேன். யான் அகன்றதும் இந்த அன்னத்தை இன்னம் ஒருமுறை தருவாயாக என்கின்றார். இவர் இவ்வாறு கூறுவது எனக்குச் சிறிதும் விளங்கவில்லை. அதை நீ எனக்கு விளக்குதல் வேண்டும்' என்று தலைவி தோழியினிடம் கூறினாள்.

குறிப்புப் பொருள் :—

தலைவி தோழியை அழைத்த இனிய குரல் ஓசை இறைவனது பசியைப் போக்கியதால், அவர் 'முன்னம் பசி போயிற்று' என்றார். இறைவன், 'பசி போயிற்று' என்று கூறுவதைக் கேட்ட தலைவி அவர் முன்னின்றும் அகன்றாள். அவ்வாறு தலைவி அகன்றபோது இறைவன் அவளது அன்னநடையினைக் கண்டு இன்புற்று, மீண்டும் அந்த அன்னநடையினைக் காணவேண்டும் என்ற விருப்பால் 'இவ் வன்னம் இன்னம் தருவாய்' என்றார். இங்கு அன்னம் என்பது தலைவியின் அன்ன நடையினைக் குறிப்பதாகும். எனவே தலைவியின் இன்குரல் ஓசையும் இனிய நடையும் இறைவனுக்கு உணவாக விளங்கியது என்பது பெறப்படுகின்றது.

பெண்களின் நடைக்குப் பெண் யானையின் நடையினையும் அன்னத்தின் நடையினையும் உவமையாகக் கூறுதல் மரபாகும். உமாதேவியாரின் நடையினை விளக்கவந்த திருஞானசம்பந்தர்,

---

6: இங்கிதமாலை—செய்யுள்-12.

“மாதர்ம டப்பிடியும் மட அன்னமு மன்னதோர்
நடை யுடைம் மலைமகள் துணையென மகிழ்வர்”[7]

எனப் பாடியுள்ளார். எனவே தலைவியின் அன்னநடை இறைவனின் உள்ளத்தைக் கொள்ளைகொண்டது என்பதில் வியப்பில்லை.

திருநாவுக்கரசர் தம்மைத் தலைவியாகவும் இறைவனைத் தலைவனாகவும் வைத்துப் பாடிய அகத்துறைப்பாடல் ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது.

“நென்னலையோர் ஓடேந்திப் பிச்சைக் கென்று
வந்தார்க்கு வந்தேனென் றில்லே புக்கேன்
அந்நிலையே நிற்கின்றார் ஐயங் கொள்ளார்
அருகே வருவார்போல் நோக்கு கின்றார்
நுந்நிலைமை யேதோநும் மூர்தா னேதோ
என்றேனுக் கொன்றாகச் சொல்ல மாட்டார்
மென்முலையார் கூடி விரும்பி யாடும்
வெண்காடு மேவிய விகிர்த னாரே”[8]

இச்செய்யுள் தலைவியின் கூற்றாகும். ‘திருவெண்காட்டில் விளங்கும் இறைவன் நேற்றுத் தமது கையில் ஓர் ஓடு ஏந்திப் பிச்சைக்கென்று வந்தார். யான் உணவு கொண்டுவர உள்ளே சென்றேன். அவர் அவ்வாறே நிற்கின்றார். பிச்சையும் ஏற்றுக்கொள்ளவில்லை. அருகே வருவார்போல் நோக்கினார். அவரைக் கண்டு நும் ஊர் எது எனக் கேட்டபோது ஒன்றும் பதில் சொல்லவில்லை. இதன் காரணம் யாதோ ?’ எனத் தலைவி தோழியிடம் கூறினாள். ஆன்மா பக்குவப் பட்ட நிலையில் இல்லை; எனவே இறைவன் ஆன்மாவை ஆட் கொள்ள இயலவில்லை என்பதே இப்பாட்டில் பொதிந்து கிடக்கும் தத்துவப் பொருளாகும்.

சொல் அழகும், பொருள் அழகும் மிகுந்துள்ள இங்கித மாலையில் சொல் அழகுமிக்க ஒரு செய்யுளை நோக்குவோம்.

“ஓமூன்று உளத்தீர் ஒற்றியுளீர்
உற்றோர்க் களிப்பீ ரோவென்றேன்
தாமூன்று என்பார்க்கு அயன்மூன்றுந்
தருவேம் என்றார் அம்மமிகத்

7. முதல் திருமுறை: திருத்தருமபுரம்-1.

8. திருத்தாண்டகம்: திருவெண்காடு-3.

தேமூன் றினதும் மொழியென்றேன்
 செவ்வா யுறுமுன் னகையென்றே
யேமூன் றுறவே நகைக்கின்றார்
 இதுதான் சேடி யென்னேடீ"[9]

இதுவும் தலைவியின் கூற்றாகும்.

தலைவி தலைவனாகிய இறைவனைக் கண்டு 'ஓம் என்ற பிரணவத்தைத் தம் மனதில் நினைக்கும் அன்பர்களுடைய உள்ளத்தை இடமாக வுடையவரே! திருவொற்றியூரில் வாழ்பவரே! நீர் தியாகராசப் பெருமானாராதலின் உம்மை அடைந்தோர்க்கு வேண்டியது வேண்டியாங்கு வரையாது அளிப்பீரோ' என்றாள். அதைக்கேட்ட இறைவன் 'தாமூன்று என்பவர்க்குத் தாகாரத்துக்கு அயலிலுள்ள மூன்றும் தருவோம்' என்றார். உடனே தலைவி இறைவனை நோக்கி, 'அம்ம! மிகவும் இனிமையானது உமது மொழி' என்றாள். அதைச் செவிமடுத்த இறைவன், "தேமூன்றின என்பது செவ்விய உனது வாயிலுள்ள உன் பற்களே" என்று கூறி இன்பமுற நகைக்கின்றார். ஏ! தோழி இவ்வாறு இறைவன் கூறிய பொருள் யாது? எனக்கு விளக்கவேண்டும் என்றாள் தலைவி.

குறிப்புப் பொருள் :—

தாமூன்று—தா, தா, தா, (முத்தா) தாவுக்கு அயல் மூன்று—தி, தி, தி, (முத்தி) தே மூன்று—தே, தே, தே (முத்தே) முத்தா என்று ஒருமுறை விளிப்போருக்கு முத்தி அளிப்பார் என்ற கருத்தில் இறைவன், 'தா மூன்று என்பார்க்கு அயல் மூன்றுந் தருவோம்' என்றார். தலைவி இறைவனது மொழி மிகவும் இனிமையானது என்ற பொருளில் 'தேம் ஊன்றின நும்மொழி' என்றாள். இறைவன் தே மூன்றின என்ற தொடருக்கு முத்தே எனப் பொருள் கொண்டு, 'முத்து எம் மொழியன்று நின்பற்கள்' என்று கூறினார், என்பது விளக்கவுரையாகும். தா, தா, தா என்பதற்கு, தா தா (வே) தா எனவும், ஏ மூன்று என்பதற்கு ஏ, ஏ, ஏ என்னும் இகழ்ச்சிக் குறிப்பு எனவும் சிலர் பொருள் கொள்வதுண்டு.

---

9. இங்கிதமாலை—செய்யுள்-61.

பரஞ்சோதியார் கூறும் வாக்கு ஈண்டு நோக்கத்தக்கது. இவ் வாக்கினைக் கொண்டே இராமலிங்க அடிகளார் மேலே குறிப்பிட்ட செய்யுளினை இயற்றியிருத்தல் வேண்டும் என்பது புலனாகின்றது.

"மடமயி லனையா ரெங்கள்
வளையினைத் தருதி ரென்றார்
கடல்விட மயின்றா னுங்கள்
கந்தரத் துள்ள தென்றான்
தடமதிக் கொம்ப னாரெங்
கலையினைத் தருதி ரென்றார்
மூடமதி மிலைந்தா னுங்கண்
முகமதி யிடத்த தென்றான்" [11]

இச்செய்யுளில் முன்னே கூறப்பட்ட 'வளை' என்றது வளையல். பின்னர்க் கூறப்பட்டது சங்கு. கலை, முன்னது ஆடை: பின்னது, சந்திரக்கலை. இறைவர் வளையல் விற்றதை உவகைச்சுவை ததும்பும்படி ஆசிரியர் குமரகுருபர சுவாமிகள் கூறியதைக் காண்க.

"வலங்கொண்ட மழுவுடையீர் வளைகொண்டு
விற்பீர்போன் மதுரை மூதூர்க்
குலங்கொண்ட பெய்வளையார் கைவளையெல்
லாங்கொள்ளை கொள்கின் றீராற்
பலங்கொண்ட செட்டுமக்குப் பலித்ததுநன்
றானீரிப் பாவை மார்க்குப்
பொலங்கொண்ட வரிவளைகள் விற்பதற்கோ
கொள்வதற்கோ புறப்பட் டீரே" [12]

தலைவன்பால் மையல்கொண்ட மகளிர்க்கு உடல்மெலிவால் கைவளையல்கள் நெகிழ்தல் இயல்பு என்பது சங்கச் செய்யுள்களாலும் அறியக்கிடக்கின்றது. 'தலைமகன் ஒருவழித் தணந்துழி ஆற்றாளாய தலைமகளை ஆற்றுவிக்கும்' தோழி கூற்றாக ஆசிரியர் அம்மூவனார் கூறிய செய்யுள் ஈண்டுக் குறிப்பிடத் தக்கதாகும்.

---

11. வளையல் விற்ற படலம்-6.

12. மதுரைக் கலம்பகம்-7.

"கானலம் பெருந்துறைக் கலிதிரை திளைக்கும்
வானுயர் நெடுமணை லேறியா னுது
காண்கம் வம்மோ தோழி
செறிவளை நெகிழ்த்தோ னெறிகட னுடே"[13]

மேலே கூறிய கருத்தினைச் சைவசமயாசாரியராகிய நால்வரும் தாம் பாடியருளிய அகத்துறை பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர். அவை கட்கு ஒரு சில உதாரணம் தருவாம்.

"சங்கியல் வெள்வளை சோர
வந்தென் சாயல்கொண் டார்தமதூர்
துங்கியன் மாளிகை சூழ்ந்த
செம்மைத் தோணி புரந்தானே"[14]

என்பது திருஞானசம்பந்தர் பாடலாகும். மிக மிடுக்காகப் பாடி யருளிய சுந்தரமூர்த்தி சுவாமிகளும் ஒரு சில அகத்துறைப் பாடலகள் பாடியுள்ளனர்.

"பறக்குமெங் கிள்ளைகாள் பாடுமெம் பூவைகாள்
அறக்கண்என் னத்தகும் அடிகளா ரூரரை
மறக்ககில் லாமையும் வளைகள்நில் லாமையும்
உறக்கமில் லாமையும் உணர்த்தவல் லீர்களே"[15]

இராமலிங்க அடிகளின் வாக்கு வன்மையினை விளக்க மற்றோர் செய்யுளினை இனி ஆராய்வோம்.

"தளிநான் மறையீ ரொற்றிநகர்
தழைக்க வாழ்வீர் தனிஞான
வொளிநா வரிசை யைந்தெழுத்தா
லுவரி கடத்தி னீரென்றேன்
களிநா வலனை யீரெழுத்தாற்
கடலின் வீழ்த்தி னேமென்றே
எளியேற் குவப்பின் மொழிகின்று
ரிதுதான் சேடி என்னேடீ"[16]

---

13. ஐங்குறுநூறு : வளைப்பத்து-9.

14. 3-ம் திருமுறை : திருத்தோணிபுரம்-2.

15. 7-ம் திருமுறை : திருவாரூர்-2.

16. இங்கித மாலை-60.

**தலைவி கூற்று** :—தோழி ! யான் இவரைப் பார்த்து 'திருவொற்றி யூரில் வாழ்பவரே ! நீர் திருநாவுக்கரசர் அருளிய ஐந்தெழுத்தின் உச்சரிப்பால் அன்னவரைக கடலினின்றும் கரையேற்றினீர்' என் றேன். அதைக்கேட்ட இறைவர், மிக்க உவகைபூண்டு 'நங்காய் ! நாம் நம்பியாரூரன் என்னும் நாவலனை இரண்டெழுத்தினுல் கடலில் அமிழ்த்தினோம்' என்ருர். இதன் பொருள்தான் யாதோ ? கூறுவாய் என்கிருள் தலைவி.

**குறிப்புப் பொருள்**:—

ஐந்தெழுத்து என்பது பஞ்சாக்கர மந்திரம். திருநாவுக்கரசர் பஞ்சாக்கரப் பதிகம் பாடிக் கடலினின்றும் கரையேறிய வரலாற் றினைப் பெரிய புராணத்துட் காண்க. இரண்டெழுத்து என்பது தூது. பரவை என்பது கடலுக்கும் சுந்தரமூர்த்தி நாயனுரது மனைவியருள் ஒருவராகிய பரவை நாச்சியார்க்கும் சிலேடைப் பொருளில் வந்துள்ளது. இறைவன் சுந்தரர் பொருட்டுப் பரவை யாரிடம் இருமுறை தூது சென்றனர் என்பது வரலாறு.

மேலே காட்டிய சிலேடையினை ஆசிரியர் சிவப்பிரகாசர் வாக்கி னுலும் உணரலாம்.

*" செல்வநல் லொற்றி யூரன்*
*செய்யசங் கிலியா லார்த்து*
*மல்லலம் பரவை தன்கண்*
*மாழ்குற வமிழ்த்து மேனும்*
*அல்லுநன் பகலு நீங்கா*
*தவன்மகி ழடியி லெய்தி*
*நல்லவின் படைந்தி ருப்ப*
*னம்பியா ரூரன் ருனே "* [17]

இச்செய்யுளில் சங்கிலி—சங்கிலி நாச்சியார். பரவை—கடல்; பரவை நாச்சியார். மகிழ் அடி—மகிழ்ச்சியை யுண்டாக்கும் திருவடி. மகிழ மரத்தடி எனச் சிலேடைப்பொருள் வந்தது காண்க.

இங்கிதமாலை என்ற இந்நூல் 166 பாக்களைக் கொண்டுள்ளது. சில பிரதிகளில் "மையலழகீர்" என்ற செய்யுள் காணப்படவில்லை. இந்நூலில்,

---

17. நால்வர் நான்மணிமாலை—35.

"சோற்றுக்கிளைத் தோமாயினும்யாம்
சொல்லுக் கிளையேம்"[18]

"கைக்கணிறைந்த தனத்தினுந் தங்கண்ணி னிறைந்த
கணவனையே, துய்க்கு மடவார் விழைவார்"[19]

"காலம்போகும் வார்த்தை நிற்கும்"[20]

முதலிய இன்னோரன்ன பிற பழமொழிகள் வந்துள்ளன. நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை, நடுவுநிலை என்ற ஒன்பான் சுவைகளுள் இதில் நகைச் சுவை மிக்குள்ளதாகலின் தமிழ்ப் பேரறிஞர் இந்நூலினைப் படித்து இன்புறுவாராக.

---

18. இங்கித மாலை-46.
19. ,, 102.
20. ,, 154.